# S. V. Ponnampalam & Sons

**345, MAIN STREET,** **COLOMBO - 11**

Dealers in Nestles products, Direct Importers, Wholsale & Retail Merchant for provisions, Grocery & Tinned food




நெஸில்ஸ்

தயாரிப்புகளின் விநியோகஸ் தர்கள்

**உணவுப்பொருட்கள், சாய்ப்புச்சாமான்கள், தகர உணவுகள்.**

முதலியவற்றின் மொத்த, சில்லறை, விற்பனையாளர்கள்.

# ச. வே. பொன்னம்பலம் அன் சன்ஸ்

345, பிரதானவீதி, கொழும்பு

தொலை பேசி 4475 தலைமை அலுவலகம்.
,, 6522 இல்லம்

## தேசியத்தன்மை.........

முயற்சியால் கிடைக்கும் பலனேதவிர,
கொடையாகக் கொடுக்கப்படுவதன்று.

தேசியத்தன்மை பிறரால் எமக்குக் கொடுக்கப்படுவதில்லை; தங்கள் நாட்டைப் பாதுகாப்புடனும் உறுதியுடனும் ஸ்தாபிக்க வேண்டும் என்ற பொது நோக்கிற்குத் தம்மை அர்ப்பணித்த மக்களால் அரிதின் முயன்று அடையப்படவேண்டியது.

கடினமான எல்லையற்ற பிரயாசை, நேர்மையான முயற்சி ஆகியவற்றின் மூலம், உறுதியான அத்திவாரத்தின்மீது ஒவ்வொரு கற்களாக அடுக்கிக் கட்டியே இந்த நிலையை அடையலாம்] இத்தேசத்தின் பௌதிக முன்னேற்றத்தில் காங்கேசன் சிமிந்திக்குத் தனியொரு இடம் உண்டு. தரத்தில் உயர்ந்த பொருட்களினுல், தூய்மை, பலம் சம்பந்தப்பட்டவரை மிகக்கடினமான தரநிர்ணயங்களுக்கு இசையத் தயாரிக்கப்பட்ட காங்கேசன்–சிமிந்தி உள்நாட்டுத் தொழிலின் உற்பத்திப் பொருளாகும். இது விலை மதிப்புள்ள வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதுடன், பொருளாதார சமுதாய உறுதிப்பாட்டினை அடையும் பெருமுயற்சியில் பூரண பங்கும் வகிக்கின்றது.

**இலங்கையின் சேவையில்**
**காங்கேசன்**


# இலங்கை சிமிந்தி கூட்டுஸ்தாபனம்

**287, காலி வீதி, கொழும்பு-3.**

# Ceylon Cement Corporation,

287, Galle Road : Colombo-3



# கலைச்செல்வி

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"
—பாரதியார்.

கலை : 5 | 1963 சித்திரை | காட்சி : 4

## பொருளடக்கம்


1 எல்லாந் தமிழ்
2 திருக்குறள் கீர்த்தனை
3 அன்பார்ந்த நேயர்களே!
4 கடலை வென்ற காளை
5 கலை இலக்கியவிழா
6 நாவல் போட்டி
7 அட்டைப் படக் கவிதை
8 'பட் பட்'
9 மண் வாசனை
10 ஈழத்து இலக்கிய வானிலே!
11 பயிரும் களையும்
12 சூர்ப்பனகைத்தனம்.
13 அன்பிற்கு முன்னால்
14 தலைநகரில்
15 இலக்கிய மணிமண்டபம்.
16 இரட்டையர்கள்
17 வெற்றிப்பாதை
18 நா
19 தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்
20 நான்மறைக்க விரும்பவில்லை.
21 திரை விருந்து


'கலைச்செல்வி'யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கட்டுரை, கவிதைகளில் தெரிவிக்கப்படும் கருத்துகட்கும் 'கலைச்செல்வி' ஆசிரியர் குழுவிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

ලංකා

இலங்கை LANKA

# இப்பொழுது!

வான்வெளியாராய்ச்சி யுகத்திற்குத்
தேவையான சக்தியை

## ப. நோ. சே. கலந்த

## லங்கா சூப்பர்

## லங்கா பெட்ரோல்

## அளிக்கின்றன.

# இலங்கை
# பெற்ரோலியம் கூட்டுத்தாபனம்

*113, காலிரோடு,* கொழும்பு-3

# எல்லாந் தமிழ்!

"குயிலே! நீ கூவு" என்று குயிலிடம் சென்று கூறவேண்டியதில்லை. அது தானாகக் கூவும்; இனிமையாகக் கூவும்; அதன் இயல்பு அது.

"மயிலே! நீ ஆடு" என்று மயிலிடம் சென்று மன்றாட வேண்டியதில்லை. அது தானாக ஆடும்; அழகாக ஆடும். அதன் இயல்பு அது.

ஆனால்......!

"தமிழா! நீ தமிழிலே பேசு! தமிழிலே எழுது!" என்று தமிழனிடம் சென்று கேட்க வேண்டியிருக்கிறது; கெஞ்சவேண்டியிருக்கிறது. அவன் தானாகவே தமிழில் பேசமாட்டான்; தானாகவே தமிழில் எழுதமாட்டான். அவன் இயல்பு அதுதானே?

அந்த இயல்பை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது- மாறக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்றது.

முன்பு தானாகவும் செய்யாது, சொன்னாலும் கேட்காதிருந்தவன், இப்போது சொன்னவுடன் செய்கின்றான்.

மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படவேண்டிய மனமாற்றம் அல்லவா இது?

அரசியலில் நாம் அனாதைகளாக்கப்பட்டதற்கு அடுத்தவன் காரணமல்ல, அடுத்துக் கெடுத்தவனும் காரணமல்ல, நாமேதான் காரணம் என்பதைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் உணர்ந்துள்ள இந்த நேரத்தில்—

"எங்கள் தலைவிதியை நாமே நிர்ணயிப்போம்" என்று உற்சாகத்துடன் உறுதிபூண்டுள்ள இந்த வேளையில்—

'அருமைத் தமிழிலேயே அனைத்தையும் செய்வோம். அரியாசனத்தில் அரச மொழியோடெம்மொழியைச் சரியாசனம் வைத்தே தீருவோம்' என்று சரியான தீர்மானம் செய்துவரும் இந்தச் சந்தர்ப்பத்தில்—

பயனுள்ள, நடைமுறை சாத்தியமான இந்த இயக்கத்தை ஆரம்பித்தவர்களைப் பாராட்டி, சாதி, மத, கட்சி பேதமின்றி அவர்களுடன் ஒத்துழைப்பது தமிழ்ப் பெருங்குடி மக்களின் தவிர்க்கமுடியாத, தலையாய கடமையாகும்.

எல்லாம் தமிழில் இன்றே செய்வோம்.
எல்லாம் தமிழில் நன்றே செய்வோம்.
எல்லாம் தமிழில் என்றுமே செய்வோம்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். சென்ற சில மாதங்களாக மாதத்தின் மத்தியில் ஒழுங்காக வெளிவந்த 'கலைச்செல்வி' இம்மாதம் சற்றுத் தாமதமாகவே வெளியாகின்றது. அச்சகவேலை நெருக்கடியால் ஏற்பட்ட இந்தத் தாமதத்தை அன்பர்கள் மன்னிப்பார்கள் என நம்புகின்றோம்.

"திருடாதே"—கட்டுரை சில எழுத்தாளர்களின் ஆத்திரத்தை தூண்டியதற்காக வருந்துகின்றோம். இலக்கியப் பிரச்சனைகள், அதுவும் இலக்கியத் திருட்டு சம்பந்தமான கருத்துக்கள் அலசப்படும்போது, சம்பந்தப்பட்ட சிலர் மனம் புண்படுவது இயற்கை. ஆனால், நேர்மையும் தன்னம்பிக்கையும் அந்தரங்க சுத்தியுமுடைய எழுத்தாளர்கள் இப்படியான கட்டுரைகளை மனப்பூர்வமாக வரவேற்பர். எமது இந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன, இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் அக்கட்டுரையைப் பாராட்டி வந்த கடிதங்கள். ஆகவே, இது சம்பந்தமாக மேலும் சில கட்டுரைகளை வெளியிட முடிவு செய்துள்ளோம். கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அவற்றை எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களே, அவை நமது கருத்துக்களல்ல என்பதை எழுத்தாள அன்பர்கள் மனத்திருத்துவது நல்லது.

புதிய சந்தாவையும், பாக்கியையும் அனுப்பி வைக்கும்படி மீண்டும் அன்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆசிரியர்.

---

## திருக்குறள் கீர்த்தனை-8

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

இராகம்: கானடா — தாளம்: ஆதி

**பல்லவி**

இடும்பை என்பதில்லையே—என்றும்.
கொடும்பிறவியுமிடர் படும் துன்பமாகிடுமவ்

**அனுபல்லவி**

நடுநிலைமையுடையான் நாடும் விருப்புமிலான்
நவிலும் வெறுப்புமிலான் நாதனடி சேர்ந்தார்க்கு

**சரணம்**

ஆண்டவனிடத்தினில் அன்பு நெறியில் சென்றால்
வேண்டியபடி அருள் விரும்பியே தருவான்
வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனின்
மாண்புறும் மலரடி மகிழ்வுடன் சேர்ந்தார்க்கு

—யாழ்ப்பாணம். ந. வீரமணி

# கடலை வென்ற காளை

இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கின்ற பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து அரியதொரு சாதனையை நிலைநாட்டியுள்ளார் இளைஞர் ஆனந்தன். ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு இதே நீரிணையை நீந்திக்கடந்த நீச்சல் வீரன் நவரத்தினசாமி அவர்களின் மருமகன் தான் இவர். இத்தனை இள வயதில் மன உறுதியுடன், கஷ்டங்களைக்கண்டு கலங்காது கடலைக் கடந்து வெற்றியடைந்த ஆனந்தன் அவர்களைப் பாராட்டும் பல்லாயிரக் கணக்கான மக்களுடன் நாமும் சேர்ந்து கொள்கின்றோம். ஆனந்தன் அக்கரையை அடைந்தவுடன் அங்குள்ள மக்கள் ஒரு வீர வரவேற்பு அளித்தார்கள். இங்கு திரும்பியபின், முதலில் பருத்தித்துறையில் மாபெரும் வரவேற்பு நிகழ்ந்தது. மக்கள் தலைவர்களும் நாடெங்கிலுமுள்ள பொதுமன்றங்களும் ஆழிக்குமரனின் அரியசாதனையைப் பாராட்டிவருகின்றார்கள். 'எனது வெற்றி தமிழர்கட்கு மட்டும் சொந்தமானதன்று. இலங்கை மக்கள் அனைவர்க்கும் சொந்தமானது. நான் ஒரு இலங்கையன் என்பதில் பெருமைப்படுகின்றேன்" எனப் பரந்த மனப்பான்மையுடன் கூறுகின்றார் ஆனந்தன். ஆனால் அரசாங்கமோ, 'ஆனந்தன் என்ன, ஒரு வெறும் தமிழன்தானே!' என்ற எண்ணத்தினால் போலும், சும்மா இருக்கிறது. தமிழ் மக்கள் மீது தனக்குள்ள நல்லெண்ணத்தைக் காட்டும் சந்தர்ப்பத்தை நழுவவிடாது கடலை வென்ற காளைக்குத் தக்க கௌரவத்தை அரசாங்கம் அளிக்கும் என நம்புகின்றோம்.

# கலை, இலக்கிய விழா

இலங்கை முற்போக்கு எழுத்தாளர்சங்கம் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு கலை, இலக்கிய விழாவை நடத்துகின்றது. பருத்தித்துறையில், மஹாகவி பாரதியாரின் ஞானகுரு எனச் சொல்லப்படும் யாழ்ப்பாணத்துச் சாமியின் சமாதியருகில் முதல் நாளைய நிகழ்ச்சிகளும், யாழ்நகர மண்டபத்தில் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர், கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களும், திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்களும் தலைமைதாங்குகின்றார்கள். தமிழ் மொழிக்குத் தொண்டு செய்யும் பெரியார்களைக் கௌரவித்தல், கவிதைச் சமர், கருத்துப்போர், நாடகம், திரைப்படம் முதலியன விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாகும். ஈழத்து எழுத்தாளர்கள் மட்டுமன்றி, தென்னிந்திய எழுத்தாளர்களும், ஆசிய - ஆபிரிக்க எழுத்தாளர்களும் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மையான இலக்கியப் பிரச்சனைகள், நடுவுநிலைமையுடன் ஆழ்ந்து ஆராயப்பட்டால், எழுத்தாளர்களும் மற்றையோரும் பெரிதும் பயனடைவார்கள். மகாநாடு வெற்றியடைய நமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.




**மஸ்ஸி - பெர்குசன்**

**ஆர்ன்கோ அக்ரிகல்சரல் இன்டஸ்ரீஸ்**

**பரந்தன் - வவுனியா**

உ
சிவமயம்

# இந்து இளைஞன் வளர்ச்சி நிதி

அன்புடையீர்!

வணக்கம். நிதி நெருக்கடி காரணமாக கடந்த சில மாதங்களாக ''இந்து இளைஞன்'' வெளிவராதது சைவ உலகத்திற்கு பெரும் கவலையாக இருந்தது. சமய வளர்ச்சிக்கு நற்பணியாற்றி வரும் ''இளைஞன்'' தொடர்ந்து வெளிவர வேண்டுமென்ற பல அபிமானிகளின் இடையருத வேண்டுகோளினுலும், சங்கத்தின் விடாமுயற்சியினுலும், மீண்டும் புதுவருடத்திலிருந்து 'இந்து இளைஞன்' வெளிவருகின்ருன். போதிய நிதி வசதியிருந்தால்தான், பல சிறந்த அம்சங்களுடன், புதுப்பொலிவுற்று 'இளைஞன்' வெளிவர முடியுமென்பதை யாவரும் அறிவீர்கள். எனவே இந்த உயரிய நோக்கத்தோடு, ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ''இந்து இளைஞன் வளர்ச்சி நிதிக்கு'' நன்கொடையாகவோ, சந்தாவாகவோ வாரி வழங்கி எமது அரிய முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தருமாறு வேண்டுகிருேம்.

இங்ஙனம்,

**மு. சிவசிதம்பரம்,**
(பா. உ.)
தலைவர்.

**சி. கதிரவேலு**
செயலாளர்
கொழும்பு இந்து வாலிபர் சங்கம்

**வருட சந்தா ரூ. 2-00**

(இங்கே கிழிக்கவும்)

# 1000/- ரூபா நாவல் போட்டி

- நமது நிருபர் -

இலக்கியத் துறையில் "கலைச் செல்வி" மூலம், செயற்கரிய செயல் ஏதாவது செய்ய நினைத்தோம். இதுவரை ஈழத்தில் நடைபெறாத முயற்சியாக இருக்க வேண்டும்; அத்துடன் ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்துவதாகவும் அமைய வேண்டும் எனத் தீர்மானித்தோம்.

"அப்படியானால் நாவல் போட்டி ஒன்றை நடத்தலாமே! எனது நினைவிற்கெட்டியவரை இதற்குமுன் இலங்கையில் எவரும் நாவல் போட்டி எதையும் நடாத்தியதாகத் தெரியவில்லை, நல்ல முறையில் நடாத்தினால், பரிசுபெறும் நாவல் நிச்சயமாக எமது நாட்டின் இலக்கியத்தை வளப்படுத்துவதாகவும் அமையும்" என்றார் ஆசிரியர்குழுவைச் சேர்ந்த ஒருவர்.

நல்ல ஆலோசனைதான். நாமனைவரும் மனப்பூர்வமாக அதை வரவேற்றோம். வேறு புதிய ஆலோசனையே எழவில்லை.

'நாவல் போட்டியில் பரிசாக எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்?'– இது அடுத்து எழுந்த கேள்வி.

சிறுகதைப் போட்டியானால், நூறு ரூபா அல்லது ஒரு தங்கப் பதக்கம் கொடுத்தால் போதுமானது. கட்டுரைப் போட்டியென்றால் ஐம்பது ரூபா போதும். நாவல் போட்டிக்குப் பரிசுத் தொகை பெரிதாக இருக்க வேண்டாமா?

சென்னையில் "கலைமகள்" ஆண்டுதோறும் நாவல்போட்டி நடாத்தி 1000–00 ரூபா பரிசாக வழங்குகின்றது. "ஆனந்தவிகடன்" நாவல் போட்டியில் 10,000-00 ரூபா பரிசாகக் கொடுக்கப்பட்டது. "கங்கை", "அமுதசுரபி" பத்திரிகைகள் நடாத்திய போட்டிகளிலும் 1000–00 ரூபா கொடுக்கப்பட்டது. ஆகவே நாம் எவ்வளவு கொடுக்கவேண்டும்?

இதுபற்றி ஆசிரியர் குழுவில் இருவித அபிப்பிராயங்கள் எழுந்தன.

"500–00 ரூபா கொடுத்தால் போதும்" என்பது ஒன்று.

"அது போதாது. 1000–00ரூபா யாவது கொடுக்கவேண்டும். முதன் முதலாக இந்நாட்டில் நடைபெறும் போட்டிக்கு 500–00 ரூபா சிறிய தொகை" - என்பது மற்றது.


ஈற்றில், ஆயிரம் ரூபா கொடுப்பதென்ற முடிவு எடுக்கப்பட்டது.

"கலைச்செல்வி"யின் நிதியிலிருந்து பரிசுவழங்க முடியாது. ஆகவே, தமிழ்ப்பற்றும் எழுத்தார்வமுமுடையவர்களிடமிருந்து இத் தொகையை நன்கொடையாகப் பெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

முதலில், எங்களின் நினைவில் தோன்றியவர்கள், இலக்கியத் தம்பதிகளான திரு. இ. கந்தையா M. A., Dip in. Ed. அவர்களும், அவருடைய மனைவியும் சிறுகதை எழுத்தாளருமாகிய திருமதி சகிதேவி கந்தையா B. A( Hons). Dip. in. Ed. அவர்களுமே. போட்டியைப்பற்றி எழுதிப் பரிசுத்தொகையை நன்கொடையாகக் கொடுக்க முடியுமா? என்று கேட்டோம் 500–00 ரூபா கொடுத்துதவ முன்வந்தார்கள் அவர்கள். மிகுதிப் பணத்தை எப்படியாவது சேகரித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் நாவல் போட்டி பற்றிய சிறிய அறிவித்தல் ஒன்றை 1960ம் ஆண்டின் ஐப்பசி இதழில் வெளியிட்டோம்.

எழுத்தாளர்கள் பலர் பரபரப்படைந்தார்கள்; பரவசமுற்றார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் நண்பர் விடிவெள்ளி என்னைக் கேட்டகேள்வி ஒன்று என்னைத் திகைப்படையச் செய்தது!

—தொடரும்.



ஆடும்போதும் பாடும் போதும்
அழகு நகைகள் ஜொலிக்கட்டும்

மங்கையர் மகிழ, மாசறு பொன்னில்
எங்கள் கடையில் நகைகள் செய்வோம்

இன்றே வாங்குங்கள்

# கே. என். எம். மீறான் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி,
போன் 585

யாழ்ப்பாணம்.
தந்தி: மன்சூரு

மாசி இதழ் அட்டைப் படத்தைப் பற்றி வந்த கவிதைகளுள் நான்கினைச் சென்ற இதழில் வெளியிட்டோம். மேலும் ஒரு கவிதை இந்த இதழில் இடம்பெறுகின்றது.

# அன்பே வந்தேன்!

- வன்னியூர்க்கவிராயர் -

மாலைக் கதிரோன் மஞ்சட்பொன்
வண்ணக் குழம்பாற் பூச்சிட்டு
ஞாலப் பெண்ணாள் எழிலுருவை
ரசிக்கும் நேரம்; நீர் வீழும்
கோலப் பச்சைப் பட்டணியும்
குற்றா லம் நேர் குன்றோரம்
வேலைப் பழித்த விழிமாதே
வேண்டாம் தனிமை வந்திட்டேன்!

(வேறு)

சொற்களிலே தூயதமிழ்ச் சொல்லே! துய்க்கும்
சுவைகளிலே இதழமுதச் சுவையே! மின்னும்
கற்களிலே மாணிக்கக் கல்லே! இன்பக்
கலைகளிலே ஓவியமே - அதிலும் வீ. கே.
கற்பனைச்சித் திரமே செந் தமிழிற் காதல்
கவிதைகளிற் பாரதியின் குயிலே! பண்பார்
அற்புத நல் லேடுகளில் ஈழம் பெற்ற
அரிய கலைச் செல்வியளே! அன்பே வந்தேன்!

மலர்க்காந்தம், நீர்வீழ்ச்சி, குயிலின் பாடல்,
வண்டுகளின் ரீங்காரம், மயிலின் ஆடல்,
புலன்களுக்குப் புத்துணர்ச்சி யூட்டுந்தென்றல்
பூத்தபுது வசந்தத்தின் இன்பமெல்லாம்
கலங்கரைத் தீ பம்போலென் வாழ்விற்கிட்டும்
கலாரசிகை யே துய்க்க வந்துவிட்டேன்
குலவுவோம் தமிழ் - இனிமை யென்னவொன்றிக்
கோடியின்பங் காண்போம்பூங் கோதையாளே!

(வேறு)

[கல்லிலே கலைவண்ணங் கண்டான்...
என்ற சந்தத்தில் பாடலாம்.]

சிகிரியாக் குகையோவி யம்போல் — யாழூர்ச்
செம்பாட்டு மாம்பழக் கன்னங்கள் குழிய
பகரரிய வன்னியூர்ச் செந்தேன்—வீழும்
பவளயிதழ் கள்மலர்ந் தே துள்ளி நெளிய...

சிலாபமுத் தாரமது காட்டி — என்
  சிந்தையைக் கொள்ளைகொண் டின்பமது வூட்டும்
'நிலாவரை'ப் பாசமுடை யாளே— நெஞ்சில்
  நீங்கா தொளிர்ந்திடும் மின்னலிடை யாளே!

❁

பருவவெழி லன்பறிவுள் ளாளே—வளம்
  பலதங்கு மட்டுநகர் வாவியில்நீர் மகளிர்
தருமமுத விசைவிருந் ததனை—பேச்சிற்
  தான் தந்து கவினுறு மெனையாக்குங் கன்னி!

❁

அன்பினிற் கீரிமலை யூற்றே—தீமை
  அக்ரமந் தீய்த்திடும் கன்னியாவூற்றே
துன்பவிருள் போக்கியொளி செய்ய—உதய
  சூரியனே எனவந்து தோன்றிடுங் கண்ணே!

❁

கம்பன்–டி. கே. சீயைப் போலே—மக்கள்
  காவியக் கவியிளங் கோ–மாப்போ சீ போல்,
அம்புவியிற் 'காவன்னுப் போனு—ரத்னம்'
  அரியவள் ளுவனெனச் சேர்ந்துவகை பூண்போம்!

▪ நிலாவரைப் பாசம்- ஆழங்காணமுடியாத பாசம்.




**உங்கள் பிரச்சினை தீர்ந்தது!**

உயர்ந்த ரகப் புடைவைகளை நிதான விலையில்
வாங்குவதற்கு எங்களிடம் வாருங்கள்.

பனாறஸ், மணிப்புரி, கூறைத்தினுசுகள் சேலம்'
மைசூர், காஞ்சீபுரம் பட்டுவகைகள்.

பருத்திப் புடைவைகள், கைத்தறி, கம்பளிச்சாமான்
கள், சுத்தக் கதர்த் துணிகள்.

டிப்புளோமாற், ஹென்லி, டயா, டயா புஷ்சேட்,
கபினற், றீகல்— சேர்ட்டுகள்.

சகாய விலையிற் பெற்றுக் கொள்ளுங்கள்.

**சண்முகானந்த ரெக்ஸ்ரைல்ஸ்,**

85, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

# நள - தமயந்தி

## யாழ் - இந்து மகளிர் கல்லூரி

யாழ் - இந்து மகளிர் கல்லூரியின் பிரார்த்தனை மண்டப நிதிக்காகச் சென்ற 6-4-63 சனிக்கிழமை மாலை, கல்லூரித் திறந்த வெளி அரங்கில், 'நள-தமயந்தி' நாடகம் அக் கல்லூரி மாணவிகளால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

நாடறிந்த நளன் கதையைச் சுவை குன்றாது மூன்று மணி நேர நாடகமாக்கியவர் "தேவன் – யாழ்ப்பாணம்" அவர்கள். நளன் அன்னப் பட்சியைத் தூதனுப்பும் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகின்றது. இக்காட்சியில் நளன், தமயந்தி இருவரின் நடிப்பும் ஒப்பனையும் நன்றாக இருந்தன, மேடையலங்காரமும் சிறப்பாக இருந்தது. முதலாவது காட்சியில் ஏற்பட்ட விறுவிறுப்பு, சுயம்வரக் காட்சிவரை நீடிக்கிறது. நல்ல நாடகம் என்ற அபிப்பிராயம் உருவாகும் நேரத்தில், கலி தொடர்கின்றான் – நளனைமட்டுமல்ல, நாடகத்தையுமே! அதற்குப் பின், காஞ்சனமாலையும் மற்றத் தோழியும் தோன்றும் காட்சிகளைவிட மற்றவை எதுவும் எடுபடவில்லை. நளன் தமயந்தியைப் பிரியும் காட்சியிலும், நீண்ட நாட்களின் பின் அவர்கள் மீண்டும் எதிர்பாராதவிதமாக ஒன்றுசேரும் காட்சியிலும் நாம் எதிர்பார்க்கும் உணர்ச்சி வெளிப்பாட்டைக் காட்டுவதற்கு நடிகைகள் ஏனோ தவறிவிட்டார்கள். பின்னணி இசை மூலமாவது அதை ஈடுசெய்திருக்கலாமே!


நடிப்பில் காஞ்சனமாலைக்குத் தான் முதலிடம். இந்தியப் பேச்சுத் தமிழைச் சரளமாகப் பேசி, அடிக்கடி தோளை அசைத்து, கண்களைச் சிமிட்டி, தான், மற்றையோரிலும் பார்க்கப் பல மடங்கு சிறந்த நடிகை என்பதை நிரூபித்துவிட்டார் அவர். கலி, நளன், தமயந்தியின் தகப்பன், அயோத்தி மன்னன் ஆகியோரின் வேடம் சிறந்திருந்த அளவிற்கு அவர்களின் நடிப்பு இருக்கவில்லையாயினும், அது சோடைபோகவுமில்லை, பாம்பினால் தீண்டப்பட்ட நளனின் வேடமும் நடிப்பும் பரவாயில்லை. பெண்கள் ஆண்வேடமணிந்து இவ்வளவாவது நடித்தார்களே என்பதற்காக அவர்களைக் கண்டிப்பாகப் பாராட்டியே ஆகவேண்டும்.

கானகத்தில் காரிருளில் காதலனைப் பிரிந்த தமயந்தி, கஷ்டங்கள் பல பட்டு, கடைசியில் தாய் தந்தையரை அடைகின்றாள். ஆனால் அப்போதும், ஆடையாபரணாதிகளுடன் அலங்கார சுந்தரியாகத் தோன்றுகின்றாளே! இயற்கையாகவே பெண்கள் ஆடை அணிகளில் அளவிற்கு மீறிய மோகமுடையவர்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலா நினைவூட்ட வேண்டும்?

மரபையொட்டிய வசனங்கள் நாடகத்திற்கு உயிரூட்டின. 'தேவன்' பாராட்டுக்குரியவர். 'அரோகரா', "கைவந்தசரக்கு" போன்றவற்றை நீக்கியிருக்கலாம்! சில இடங்களில் வசனம் நீண்டுவிட்டதையும சுட்டிக்காட்டத்தான் வேண்டும். வீரமணியின் பாடல்கள் அத்தனையும் அருமை. ஜனரஞ்சகமான ராகங்களில் இசை அமைக்கப்பட்டிருந்தது. நாடகத்தின் சிறப்புக்கு நடனங்கள் வழிவகுத்தன. அருமையான பாடல்களையும் இயற்றி, அழகான நடனங்களையும பழக்கிவைத்த வீரமணி பாராட்டப்படவேண்டியவர்.

குறைகள் பல இருந்தபோதும், மாணவிகளின் நாடகம் என்று பார்க்கும்போது நாடகம் வெற்றி அடைந்தது என்றே கூறவேண்டும். தயாரிப்பாளர் செல்வி. இராமநாதன் அவர்களைப் பாராட்டுகின்றோம்,

—சிற்பி.




ஏ. ரதி. மூதூர்.

கே. திரையுலகில் கொடைவள்ளல் யாராவது இருக்கிறார்களா?

ப. திரையில் தோன்றுபவர்கள் அத்தனைபேரும் கொடைவள்ளல்கள் தானே! சிலர் தமது சிறந்த நடிப்பினால் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றார்கள்; பலர் தமது மட்டமான நடிப்பினால் மனவேதனையையும் தலையிடியையும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள்!

கே. சிவாஜி காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவும் உதவிகளும் கொடுக்கிறார். ஆனால், அவரைக் கேட்டால், தான் ஒரு கட்சியுமில்லை என்கிறார். ஏன்?

ப. மக்களுக்குக் கலைத்தொண்டு செய்ய விரும்புபவன், குறுகிய கட்சிக் கட்டுப்பாட்டுக்குத் தன்னை அடிமையாக்கக்கூடாது என்பது சிவாஜியின் கருத்து. அதனால்த்தான் அவர் எந்தக் கட்சியிலும் சேராது தனித்து நிற்கிறார். சந்தர்ப்பம் வாய்க்கும் போது காங்கிரஸ் மட்டுமல்லாது, மற்றக் கட்சிகளுக்கும் உதவிபுரிகிறாரே!

கு. தனபால். நல்லூர்.

கே. சிரிப்பு வந்துவிட்டால் அடக்க முடியாமல் இருக்கிறதே, ஏன்?

ப. சிரிப்பு வரும்போது அதை ஏன் அடக்க வேண்டும்? ஏளனமாகத்தான் சிரிக்கக்கூடாது. உள்ளத்திலிருந்து வரும் சிரிப்பென்றால், அதைச் சிரித்துத் தீர்ப்பதுதான் சிறந்த பழக்கம்.

சிமியோன், கிளிநொச்சி.

கே. ஆங்கிலத்தை இலங்கையிலுள்ளவர்கள் நன்றாகப் பேசுகிறார்களா? அல்லது இந்தியாவிலுள்ளவர்கள் நன்றாகப் பேசுகின்றார்களா?

ப. இலங்கை மக்களிடம் இன்னும் அடிமைமோகம் அகலவில்லை. ஆங்கிலேயரே பிரமிக்கும்படி ஆங்கிலத்தைப் பேசிக்காட்டுவதில் பெருமைப்படும் பலர் இங்கு இருக்கிறார்கள். இந்தியாவில் ஆங்கிலத்தையும் 'தேசியமய'மாக்கிவிட்டார்கள். அவர்கள் பேசுவது சுத்தமான ஆங்கில

மல்ல, 'இந்திய-ஆங்கிலம்'தான்!

கே. சரோசாதேவி அடிக்கடி என் கனவிலும் நினைவிலும் வருகிறார். நீர் பிரயாசைப்பட்டு அவரை எனக்குத் திருமணம் செய்து வைக்க முடியுமா?

ப. 'காதல், கல்யாண விஷயங்களில், நேரே கேட்கப்பயந்து, மூன்றாவது பேர்வழியின் தயவை நாடும் ஒரு பயந்தாங்கொள்ளியைத்தான் நான் கல்யாணம் செய்வேன்' என்று சரோஜாதேவி சபதம் செய்திருக்கிறாரா, என்ன, உமக்காக நான் போய்ப் பரிந்து பேசுவதற்கு?

ஜி. சுவர்ணா, மூதூர்.

கே. 1962ம் ஆண்டின் சிறந்த நடிகர் பாசம், பணத்தோட்டம் முதலியவற்றில நடித்த எம். ஜி. ஆர் தான் என்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப. இந்தப் படங்கள் இரண்டும் இலங்கையில் திரையிடப்பட்டதன் பின்புதான் என் அபிப்பிராயத்தை என்னால் கூறமுடியும். இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் விமர்சனத்தைமட்டும் வைத்துக்கொண்டு எந்தவிதமான முடிவிற்கும்வர நான் விரும்பவில்லை.

கே. 'கலைச்செல்வி'க்கு விரும்பினோர் யாரும் கதை அனுப்பலாமா?

ப. யாரும் அனுப்பலாம். ஆனால் சொந்தக் கற்பனையில் உருவான

யின் இலட்சியம்!

செல்வி, R. இந்திரா, கொழும்பு-13.

கே. பாமா ராஜகோபாலின் முகவரி என்ன?

ப. கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் அவர் இப்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கிறார். அவருடைய தற்காலிக முகவரி இது திரு. E, K. ராஜகோபால்,: "கயிலாய வாசா" வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

க. கமலம், வவுனியா.

கே. தங்களின் மூக்கு ஆறு அங்குல நீளம் என்று சிலர் சொல்கின்றார்களே, உண்மைதானா?

ப: சிலர் சொல்லுகின்றார்கள் என்பதனால் அது உண்மையாகி விடுமா? அவர்கள் சொல்வது தவறு. என்னுடைய மூக்கின் நீளம் 6.00001 அங்குலம்!

வண்ணையூர்க் கலைஞன், வண்ணார்பண்ணை.

கே: "பெண்ணென்று கண்டேன், பெண்ணங்கு இல்லை"— என்ன அர்த்தம்?

ப: பாடுபவர்க்குப் பைத்தியம் முற்றிவிட்டதென்று அர்த்தம் — காதல் பைத்தியம்!

சுகிர்தம் சுப்பிரமணியம்,
சுண்டிக்குளி.

கே. 'கலைச்செல்வி'யின் ஆதரவாளரும்சிறந்த கலா ரசிகருமாகிய காலஞ்சென்ற திரு. வே. மு. குமாரசாமி அவர்களைப்பற்றி ஏன் ஒரு வார்த்தையேனும் 'கலைச்செல்வி'யில் வெளியாகவில்லை?

ப. இக் கேள்வி 'கலைச்செல்வி' ஆசிரியர் குழுவிற்குச் சமர்ப்பணம்!

அ. க. அப்துல் ஸலாம், கிண்ணியா-2

கே. 'குரங்கிலிருந்துதான் மனிதன்

பிறந்தான்' என்ற டார்வினின் கூற்று உண்மையானதா?

ப. இப்படி டார்வின் கூறியதென்னவோ உண்மைதான். ஆனால், 'இத்தனை லட்சம் குரங்குகள் இன்றும் இருக்கின்றனவே, அவற்றிலிருந்து ஒரு மனிதனாவது இன்னும் பிறக்கவில்லையே!' என்று இப்போது சிலர் கேட்கின்றார்களே, அவர்களுக்கு என்ன பதிலைச் சொல்வது?

K. மங்கையற்கரசி, உரும்பராய்.
கே. இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற 'பலி' நாடகம் எப்படி இருந்தது?

ப. சுமாராயிருந்தது. பூசாரியாக நடித்தவரும் அவருடைய சிஷ்யனாக நடித்தவரும் நன்றாக நடித்தார்கள். ஆடுகள் பலியாவதுதடுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் எல்லா நடிகைகளும் போட்டி போட்டுக்கொண்டு தமிழைப் பலிகொடுத்தார்களே, ஏன்

தி. சின்னப்பு. இளவாலை.
கே. 'கலைச்செல்வி'யின் ஆதரவில் ஒரு வண்டிற்சவாரி நடத்துவீர்களா?

ப. அந்தக் காட்டுமிராண்டித்தனமான சவாரி வேண்டவே, வேண்டாம். வண்டிற் சவாரி நடாத்துவதானால், "ஒருவர்மட்டுமே வண்டியில் உட்காரலாம். தடியால் அடிக்கவோ ஆணியால் குத்தவோ கூடாது" என்றெல்லாம் நிபந்தனை விதிப்பேன். ஆனால் பங்குபற்றுபவர்கள் இவற்றை ஏற்றுக்கொள்ளமாட்டார்களே!

வை. சிவகுமார், மூளாய்,

கே ஆனந்தனைப்போல் பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவேண்டுமானால், முதலில் நான் என்ன செய்ய வேண்டும்?

ப. நீந்திப் பழக வேண்டும்!

எஸ். டி. கந்தசாமி. நீராவியடி.
கே. யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற "நள - தமயந்தி" நாடகத்தின் பெயரை, வெறுமனே "தமயந்தி" என்று மாற்றி வைக்கவேண்டும் என்று சில எழுத்தாளர்கள் கூச்சலிட்டார்களாமே!

ப. நாய்க்கு எங்கே அடித்தாலும், காலைத்தான் நொண்டும், அதேபோல் சில எழுத்தாளர்களும் இங்கே இருக்கிறார்கள், எதைச் சொன்னாலும், உடனே சாதிப்பிரச்சனையைக் கிளறிவிடுவார்கள். 'இழினர் வழக்கு' என்பதன் சரியான அர்த்தம் தெரியாமல் வெருண்டு திரிந்தார்கள் சிலர். இப்போது 'நள-தமயந்தியில்' குற்றம் காண்கின்றார்கள் சிலர். உண்மையான இலக்கியப் பிரச்சனைகளில் நேரில் நின்று வாதாடமுடியாதவர்கள், இப்படித் தேவையற்ற விஷயங்களில், துரும்பையும் தூணாக்கிப் பேசி முடிவில் மூக்குடைபட்டு முக்காடுக்குள் மறைவார்கள், அவர்களுக்காக நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

உங்கள் கேள்விகளுடன் வெட்டி அனுப்பவேண்டிய முகவரி.

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினால்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி மார்க்




# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

# ராஜு ஸ்ரோர்ஸ்

போன்: 373

2/B, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்

தந்தி ESVES




சு. வே.

"உஸ்ஸ் ...ஸ்... அப்பாடா"

காலை முழுவதும் கண்ணாமூஞ்சி யாட்டமாடி, ஈற்றிலே வயிரமுத்தரிற் கவிந்து ஆட்கொண்டுவிட்ட களைப்பின் சொல்வடிவங்கள் அவை. அவர் தனது தோளிற் கிடந்த கலப்பையையும் நுகத்தையும் அநாயாசமாக, ஆனால் வெகு பரிடன் இறக்கிச் சுவரோரமாகச் சார்த்திவிட்டு, தலையிற்கட்டியிருந்ததுண்டையெடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அவர் வயலில் நின்றிருந்தால், இன்னங் கொஞ்சநேரம் உழுதிருப்பார். கால்கள் மாடுகளின் பின்னால், அலையலையாகச் சரிந்து கிடக்கும் உழவு சால்களில் நடக்க, அங்கிருந்து பரவும் அபூர்வ புதுமண் வாசனையை முகர்ந்து கொண்டு, சிறு குழந்தையைப் போலத் தள்ளாடித் தள்ளாடி நடை பழகியிருப்பார். அப்போது அவர் மனம் பலபல எண்ணங்களை ஓடவிட்டு, அவற்றுக்கு அர்த்தமும் அழுத்தமும் கொடுக்காமல், தொட்டுந் தொடாமலும் அலைந்து திரிய. நெற்றி வியர்வை வழிந்து தெற்றிப் பொட்டைக் குளிர்வித்து, கீழிறங்கி வாயில் நுழைந்து, வெற்றிலைச் சாற்றோடு இணைந்து புதுச் சுவை கூட்ட, அவையெல்லாவற்றையும் அனுபவித்துச் சுவைத்துக் கொண்டு உழுதிருப்பார். இரண்டு நாட்களுக்குமுன் மழை பெய்த போதிலும் பங்குனிமாத வெயில் தன் தனித்தன்மையைக் காட்டிக்கொண்டு தழலைச் சொரிந்து தகித்தது. பாவம்! மாடுகள் களைத்துப்போய் நுரை கக்கத் தொடங்கிவிட்டன. வாய் பேசாது ஏவியவற்றை முடிக்கும் அந்த உழவு மாடுகள்தாம் அவரின் உயிர்த்

# வாசனை



தெய்வம். தெய்வமும்வாய் பேசுவதில்லையல்லவா? அவர் இலக்கணப்படி மாடுகள்உயர்திணைப் பொருள்கள்! அதனால் அவைகளை மேலும் வருத்தாமல் அவிழ்த்து விட்டார். அவை பக்கத்திலிருந்த குளத்தை நாடிச்சென்றன.

அவிழ்த்து விட்டமாடுகள் இன்னும்வீடுவந்து சேரவில்லை துண்டை உதறி விரித்துவிட்டு முற்றத்து மாமரத்தின்கீழ்ப் படுத்துவிட்டார், வயிரமுத்தர். களைப்பும் வேசிப்பெண்ணைப் போன்றது. இரண்டும் சமய சந்தர்ப்பத்துக்காக காத்திருந்து, முடிவிலேஅவனவன் பெலவீனத்தை வாயிலாகக்கொண்டுஅவனிற்கவிந்து அவனைமயக்கிவிடும். இவ்வளவு நேரமும் எங்கோபதுங்கிக் கிடந்த களைப்பு, அவரை முற்று முழுதாக ஆட்கொள்ள, அவர் அதனோடு புணர்ந்து, மோனநிலையிற் கிடந்து அதைச் சுவைத்து அனுபவித்தார். களைப்பிலே பிறந்தசோர்வை, உள்வாங்கி அனுபவிப்பதென்பது பலருக்குக் கிட்டாத ஓரின்பஅனுபவம்.

"பூரணம்" என்று மனைவியைக் கூப்பிட்ட பின்னர்தான், தனது மோனப் பெருநிலையில் ஒரு பொள்ளல் விழுந்து விட்டதைஅவரால் உணர முடிந்தது. ஆண்டாண்டு காலமாக கூப்பிட்டுப் பழகிய வாய் குரல் கொடுத்ததையும் அவரால், தடுக்க முடியாது—

இத்தனை மூடுசூளையாய் இந்தக்களைப்புஎப்போது தன்னிலே கவியத்தொடங்கியதுஎன்று எண்ணியபோது, அவருக்குச் சிரிப்பு வந்தது 'வயது ஒவ்வொன்றாக நழுவி நழுவி விழ, அந்த இடத்திலே சோர்வு வெற்றிக் கொடி நாட்டிவிடுகிறது. என்ன! என்னில் இன்னும் வாலிபமா கொப்புளிக்கும்! போன தையோடு அறுபத்திநாலுமுடிந்து அறுபத்தைந்தாகிவிட்டது' காடு கூப்பிடுகிற பருவத்தில் வயலைப் பாராமலிருக்க மனம் கேட்டால் தானே!' என்று எண்ணிக் கொண்டார்.

"மே...மே...ஏஎ"— கோடியிற் கட்டியிருந்த தாயாடு அளபெடை சேர்த்துக் கத்தியது. பின் தாயோடு சேர்ந்து குட்டிகளும் முறைவைத்துக் கத்தின், 'நான் வந்த சங்கதியை இவைகளுக்கு யார் சொன்னது... பாக்குக் கடிக்கிற நேரம் பொறுங்கோ. ஏ! பூரணம் இவைகளுக்கு ஒன்றும் போடவில்லையோ?" அவர்

மனத்தளவில் ஆடுகளோடும் பூரணத்தோடும் பேசினர்.

அவர் அசையாமல் அண்ணுந்து கிடந்து, கண்மூடி மௌனியாய் எண்ணமும் நினைப்புமற்றதொரு நிலையில் லயித்து விட்டார். எல்லாம் பழுத்து உதிர்ந்து, புதிய தளிர்களுக்கு இடங்கொடுத்துவிட, தப்பித் தவறிக் கிடந்த ஒரு பழுத்த மாவிலை அவர் நெஞ்சில் விழுந்தது. இவர் திடுக்கிட்டுப் போய்க் கண் விழித்தார். கண்கள் மேலே சென்று, மாமரத்தின் பசிய இலைகளெல்லாவற்றையும் அளாவி அலைந்து சுழன்றன. கை பழுத்தலிலையை எடுத்துச் சுழற்றியது. 'பழுத்து விட்டால் இலையல்ல எதுவுமே விழவேண்டியதுதான். புதிய இலை வரும் வரையில் இருந்ததே பெருங் காரியம். ஆசைக்கும் ஓரளவு வேணும். இந்தக் காணி பூமியில் எத்தனையோ ஆண்டுகளாகப் புரண்டுருண்டும் ஆண்டனுபவித்தும் சலிப்புத் தட்டவில்லையே; இந்த மண்வாசனை, பூரணத்தின் கூந்தல் மணம்போல, நெஞ்சின் நெஞ்செல்லாம் இனிக்கிறது. ஆதி தெரியாத இந்தக் குல விருட்சத்திலும் எத்தனையோ பழுத்த இலைகள் புதுத் தளிர்களிடம் வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு. அதனடியில் வீழ்ந்து அதற்கே உரமாகி விட்டன. உடனடியாக இருபிள்ளைகளையும் அழைத்து, காணி, பூமி, பொருள் பண்டமெல்லாவற்றையும் பங்கிட்டு ஒப்படைத்து விடவேண்டும். எப்போது காற்று வீசும்; எப்போது பழுத்தலிலை வீழும் என்று யாருக்குத் தெரியும்? — இந்த எண்ணம் மின்னலாய் வெட்டி அவரது மனத்தின் மூலஸ்தானத்திலே பெருஞ் சோதியை எறிக்கவிட்டு விட்டு மறைந்தது.

மின்னலையடுத்துப் பயங்கரவிருள் முழு மூர்த்தண்யமாக உறைந்தது. மனக்கண் அந்தவிருளிற் கூர்மை யிழந்து தட்டுத்தடுமாறி ஊர்ந்தது. ஏதோ ஒரு வகைத் தவிப்பு: மெல்ல மெல்லப் பெருகிப் பெருங்கடலாய் அலை மோதி: நெஞ்சுச்சுவர்களைத் தாக்கியது. உள்ளத்தை இழக்குந் தவிப்பா? உள்ளத்திலே ஊறி ஊறி உயிருடன் கலந்துவிட்ட தன்மானத்தின் மரணவஸ்தையிற் பிறந்த தவிப்பா?

இனி, நானும் பூரணமும் யாருக்குப் பாரமாவது? மூத்தவனுக்கா? இளையவனுக்கா? ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கா? படுக்கையில் விழுந்து கிடக்கிறபோது, இருவரும் வந்து எது வேண்டுமானாலும் செய்யட்டும். எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகட்டும். இப்போது நான் யாருக்காவது பாரமாவதோ, யார் நிழலையாவது அண்டுவதோ முடியாது; ஆகவே பூரணத்தாலும் முடியாது" — இந்த எண்ணங்கள் அவரது தவிப்பின் பயங்கரக் கொந்தளிப்பை ஓரளவு தணித்தன.

தவிப்பு அடங்கிய நிலையிலே, சந்தேக வித்தொன்று முளைத்து மகாவேகமாக வளர்ந்து, கணப்பொழுதிலே பெருமரமாகிவிட்டது. அது நிரந்தரமாகி உண்மைத் தன்மை பெற்று விட்டால், விளையும் பயனை அவர் தெளிவாக உணர்ந்தார். மனக்காட்சியின் ஒவ்வொரு சிறு தோற்றமும் புரண்டு நெளிந்து வழுக்கி ஊர்ந்து புழுக் கூட்டம் போலக் கிலுமொலுத்தது.

'மூத்தவனுக்கு நிலத்திலும்

பார்க்க உத்தியோகமே பெரிது. இளையவனுக்கு வியாபாரமே பெரிது இருவரின் இந்தப் பற்றுக்களின் முடிபு நிலத்தின் பற்றின்மைதானே. அவர்களுக்கு ஒன்றைத் தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டும். "அடே, இங்கே பாருங்கோ. நீங்கள் சிரித்துச் சிரித்து வாழக் காரணம் உங்கள் படிப்பென்று நினைத்தால், நீங்கள் சுத்தமடையர்கள். அதற்குக் காரணம் இந்த நிலம்; இந்த நிலத்திலே பரம்பரை பரம்பரையாகச் சிந்திய வேர்வை; அதனால் ஏற்பட்ட செழிப்பு. இந்தப் பூமித்தாய் வரண்டு வெடித்துப் பாழாய்க் கொட்டாவி விட்டு, பெருமூச்சு விட்டால், அவ்வளவு தான்; குலவிருட்சம்படவேண்டியதுதான். இதோ ஒன்றாய்க் கிடந்த நிலம் இரண்டாகி உங்களிடம் வருகிறது, இதோ உறுதிக் கடதாசி. குத்தகைக்கு விடுவேன்; வாரத்துச்கு விடுவேன், அப்படியிப்படி என்ற பேச்செதுவும் இருக்கக்கூடாது. ஒன்றில் நீங்கள் நிலத்துக்குவரவேண்டும், அல்லது உங்கள் பிள்ளைகளில் ஒவ்வொருத்தன் வரவேண்டும்; அவ்வளவுதான்" என்று அறுத்துறுத்துச் சொல்ல வேண்டும். பாம்பு மாதிரி நழுந்தி நொழுந்திப் பேசுகிற பேச்சுக்கிடமில்லை. பிறகு அவரவர்கள் வந்தவந்த வழி.

அவர் மனத்திலே கிடந்து நெளிந்த மனக்காட்சிகளெல்லாம் ஒன்றில் ஒன்று அடக்கமாய், அந்த




ஒன்றில் மற்ற ஒவ்வொன்றும் ஒவ்வொன்ருயடங்கி, ஈற்றில் எல்லாம் ஒன்றுள் அடங்கி, அந்த ஒன்றும் இல்லையாய் மறைந்தது. இந்நிலையில் அவர் மனம் ஆழ்ந்து, அனுபவித்துத் தூங்குகிற குழந்தையாய், அது கனவிலே 'நரி' வெருட்டச் சிரிப்பது போலச் சிரித்தது; அவரும் சிரித்தார்.

ஃ ஃ ஃ

"என்ன சிரிப்பு; கால் முகம் கழுவியாச்சோ."—என்ற குரல் தூங்கும் இதயத்தை அருட்டி எழுப்பி இனிமையூட்டியது. வயிரமுத்தர் ஒருக்களித்துத் திரும்பி, தலைக்குக் கையை முட்டுக் கொடுத்துக் கொண்டு பார்த்தார். பூரணம் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

உயர்சாதிப் பிராமணப் பெண் போல, மஞ்சளிலே சிறிது செம்மையைக் கொட்டிக் குழப்பிய நிறம்; வாட்டசாட்டமான பாரிய சரீரம்; நடக்கும் போது சதை அதுங்கிப் பிதுங்கிக் குலுங்குவதும் ஒருகவர்ச்சியாகத் தானிருத்தது. முன் நெற்றியிலே தொடங்கி, நடுவகிட்டின் இருகரையையும் பற்றிக் கொண்டு, மேலே மேலே பரவிச் செல்லும் நரை; பளிச்சென்ற முகம். குளித்த பிறகு நெற்றியிலிட்டுக்கொண்ட ஒருசத அகலக்குங்குமப் பொட்டு. பார்த்தால் மனத் தூய்மையைப் பரவவிட்டுச் சிலிர்க்கச் செய்யும் முழுப் பொலிவு. அவள் அன்ன பூரணி தான்; பூரணம் தான்.



அவள் தாமரையிலையால் மூடப்பட்ட சருவச்சட்டியொன்றை ஒருகையில் ஏந்திக் கொண்டு மறுகையிலேசெம்

புந்தண்ணீருங்கொண்டு வந்தாள்'

அவளிலே கண்ணைப்பதித்து, மனதால் விழுங்கி, பின் இரண்டி ஞலும் அளவிட்டுப் பூரித்தார் வயிர முத்தர். எத்தனையோ ஆண்டாண் டாய், ஒவ்வொரு நாளிலும் எத்தனை எத்தனையோ முறை பார்த்துங்கூட, அவருக்கு அலுக்கவில்லை; அலுக்கப் போவதுமில்லை. இப்போது அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தார். நாணம் என்றுமே நித்தியகன்னி; வயதெல் லையெல்லாங் கடந்து, அதன் முதிர் ச்சியிலுங் கூட, தன் தனித் தன்மை மாருமல் நிற்கும் மகாமந்திரம் அத னிடமுண்டு. அது ஐம்பத்திரண்டு வயதிலும் அவளையறியாமலே, அவள் முகத்திலே செம்மை காட்டி, பதிலு க்குச் சிரித்து விட்டு மறைந்தது.

''என்ன சிரித்துக் கொண்டு... ஏழும்புங் கோவன்......'' அப்போது தான் கண கண வென்ற மணியோ சையோடு, உழவு மாடுகள், சுதந்தி ரமாகத் திரிந்துவிட்டு, அதுவும் சலித்துவிட, உள்ளே நுழைந்தன.

''உதை இப்படிவை. மாடுக ளைப் பிடித்துக்கட்டி. வைக்கல் இழுத் துப் போட்டிட்டுவா''

''இதைத்தின்னுங் கோவன். பிறகு போய்க் கட்டினலென்ன''.

''எனக்கென்ன அவசரம். வாயில்லாச் சீவன்கள் பாவம்! இன் றைக்கு நல்ல களை. கட்டி ஒரு திரணை வைக்கல் போட்டிட்டு வாணை, என்ரை ராசாத்தி......''

கிழவன் வாய்விட்டுச்சிரித்தான். கிழவிக்குச் செம்மைச் சாயம் தோய் ந்த முகம் முழுவதும் சிரித்தது.

''சீச்சீ..... கிழவனுக்கு வயது போனலும் பகிடி போகாது''.

''ஓகோ, அப்ப தான் கிழவன், நீ இப்பவும் வாலைக்குமரி என்று நினைப்போ. அதுக்கென்ன போசட் டுவா''

வாயாடவாயில்லை, பூரணத்துக்கு. சருவச்சட்டியையும் செம்பையும் 'தொம்' என்று வைரமுத்தருக்கு முன்னே வைத்துவிட்டு, மாடுகட் டப் போய் விட்டாள் கிழவி.

வைரமுத்தர் எழுந்து கால்முகங் கழுவிக் கொண்டு வந்து அதேயிடத் தில் அமர்ந்தார். பூரணம் இன்னும் வரவில்லை. மெதுவாக இலையைத் தூக்கிப்பார்த்தார். உள்ளே பழஞ் சோறு, ஒடியல் பிட்டோடு மரவள் ளிக்கிழங்குப் பழங்கறியுஞ் சேர்த்துத் தயிர் விட்டுக் குழைத்த கொழு கொழென்ற குழையல். பார்க்கப் பார்க்க வாயூறியது. பூரணம் திரட் டித் திரட்டிக் கையில் வைத்தாலல் லவா அவரால் தின்ன முடியும்; மூடிவைத்து விட்டு இருந்தார்.

பூரணம் கடுகடுப் போடு தான் வந்தாள். நெற்றியிலே முத்துமுத் தாக வியர்வை துளிர்த்திருந்தது. கன்னம் இரண்டிலும் வியர்வைஆறு கால்வாய்கள் கண்டு ஓடியது. வாளிப் பான அந்த உடலை அசைத்தெடுத் தது நெடுமூச்சு.

''இந்த வேலையெல்லாம் இனிமேல் என்னலை ஏலாது. என் னலை ஏலா தென்ருல் உங்களாலும் ஏலாதுதான். பேசாமல் ஒரு பிள்ளை யோடு போயிருப்பம்''– எத்தனையோ காலமாக சிறுச்சிறு ஊற்ருக ஊறி உள்ளே நிறைந்து அலைமோதிய ஆசைவெள்ளம்-கிழவனதுஆண்மை அணையிட அடங்கிக் கிடந்த அது— வேளைகிடைத்த வேளையிலேவெளியே பெருகத் தொடங்கியது.

''என்ன அழையா வீட்டு விருந்

தாய்ப் போகச் சொல்லிறியே?'' கிழவன் வேடிக்கை பண்ணினான்; ஆனால் அதனுள்ளீடாகப் புருடத்துவ கம்பீரம் நிமிர்ந்து நின்றது.

"பேச்சைப் பாருங்கோ பேச்சை, இவர் பெரிய மகாராசா கொடி. குடை, ஆலவட்டத்தோடு வந்து அழைக்க வேணுமாம். மீசை நரைத்தாலும் ஆசையும் அதிகாரமும் நரைக்கவில்லை"


"பின்னை என்ன, உனக்கும் எனக்கும் என்ன குறைவாம்! நான் இராசா. நீ இராசாத்தி, அவர்கள் வந்து கூப்பிட்டபோது பார்த்துக் கொள்ளலாம். இப்ப உனக்கோ எனக்கோ எதுவும் வந்துவிட வில்லையே"

"ஐயையோ, மறந்தே போனேன். காலமை இரண்டுகாயிதம் வந்தது. ஒருவேளை வரச்சொல்லித்தான் இரண்டு பேரும் எழுதியிருக்கோ என்னவோ. கொண்டு வரட்டோ" – பூரணத்தின் ஆசை வெகு மூர்க்கமாக நிமிர்ந்து, இரு கடிதங்களைப்பற்றிக் கொண்டு, தன் எண்ணத்தை மீண்டும் வெளிக்காட்டியது.

"கொஞ்சம் பொறு. அதுக்கு இப்ப என்ன அவசரம், சாப்பிட்டு முடியட்டும்," வயிரமுத்தர் கிழவியின் ஆசைக்கலவையைப் பிரித்துத்தனிக் கூறுகளாக்கிப்பார்த்தார்: கிழவனிடம் குறும்பு முளைத்தது.

"ம்...... கோவியாதை, உள்ளதைச் சொல்...... பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறாயா? பேரப்பிள்ளைகளைக் கொஞ்சிச் சீராட்டவோ அல்லது சாகக்கு முந்திக் கொஞ்ச நாளைக்காவது மாமியார் அதிகாரம் பண்ணவோ...அல்லது......"

"எப்பவும் நையாண்டிதான். இன்னும் எத்தனை நாளைக்கோ- உள்ளே அழுகத் தொடங்கிவிட்ட இந்த பூசனிக்காயை, பெருமான் எப்ப தூக்கி



ஈழத்திலும் இந்தியாவிலும் புகழ்பெற்ற

ஜெகஜோதி

பற்பொடியை உபயோகித்து

உங்கள் பற்களைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்.

விநியோகஸ்தர்கள்:

ஜெகஜோதி அன் கோ

குருதேனிய

எறிகிறாரோ, அப்ப சளிஞ்சு போய் வாயைப்பிளந்து கிடக்க வேண்டியது தான். அதுக்கிடையில் கொஞ்ச நாளைக்காவது ......" பூரணம் வெம்பி வெடித்துக் கண்ணீர் சிந்தினாள். பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நினைத்தபோது அவள் உள்ளத்தின் உள்ளெலும்பெல்லாம் உருகி நெகிழ்ந்தது. தாய்மைத் துடிப்பு உடலணுக்கள் எல்லாவற்றிலும் ஊறியது. பழஞ்சோறு திரட்டி எடுத்த கை நடுங்கியது. அவள் உணர்ச்சிப் பெருநெருப்பில் கருகி ஒரு கணம் மூச்சையிழந்து வெளிவந்தாள். வயிரமுத்தரின் கண்களும் குளமாகிவிட, தனது சால்வைத்துண்டையெடுத்துப் பூரணத்தின் கண்ணீரைத் துடைத்தார்.



''என்ன பூரணம், உன்னத்தனை பாசமும் வருத்தமும் எனக்கில்லையோ. உன்னது தாய்ப்பாசம்; அடங்காது. என்னதை அடக்கியடக்கி, குமைந்து குமைந்து பார்க்கிறேன். நினைத்தவைகளை நினைத்து நினைத்து, நினைக்கமுடியாதவைகளையும் நினைக்கப்பார்த்து நான்படும்பாடு.. எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த பிறகு ஒருமுடிபுக்குவந்துவிட்டன்...''

பூரணம் கண்களை அகலவிரித்துக்கொண்டு, அந்தக்கண்களிலே ஆசை இரச வோட்டமாய் ஓட, அந்தக்கண்களாலே கேட்டாள் 'என்ன' என்று.

''இரண்டு பேரையும் வரச் சொல்லி இண்டைக்கே எழுதப் போறன். வந்ததும் சொத்தெல்லாத்

தையும் இரண்டாய்ப் பிரிச்சு எழுதிப் போட்டு......"

கிழவனைக்கட்டியணைத்து, கொஞ்சிக்குலவ வேண்டும் போல் அத்தனை மகிழ்ச்சி கிழவியிலே கிளர்ந்தெழுந்தது. அதற்கு அணையிட அவள் விருபாவிட்டாலும் வயது அணை யிட்டது.

"அதுதான் சரி, நாங்கள் வாழ்ந்தது போதும், சின்னஞ்சிறிசுகள் ஆண்டனுபவிக்கட்டும். இந்தாருங்கோ தண்ணி, சருவச்சட்டிக்கை கையைக்கழுவிப்போட்டுக்குடியுங்கோ காயிதத்தை எடுத்துக் கொண்டு வாறேன்"

பூரணம் சேலைத்தலைப்பில் துடைத்துக் கொண்டுகுடுகுடுத்தாள். அடுத்த கணம் கண்ணுடிக் கூடும் இரண்டு கடிதங்களுங் கொண்டு வந்தாள்.

வயிரமுத்தர் கண்ணுடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு, ஒரு கடிதத்தைப் பிரித்துவாசித்தார், அவர் முகத்திலே கணத்துக்குக்கணம் உணர்ச்சித்திவலைகள் அள்ளித்தெளிக்கப் பட்டன. அந்தத்திவலைகளைக் கொண்டே, கடிதத்தில் என்ன இருக்கிறதென்று கண்டுகொள்ளமுயன்று தவித்தாள் பூரணம். ஈற்றில் முகத்திலே துலாம்பரமாகத் தெரிந்த வெறுப்போடு, அக்கடிதத்தை மடித்து வெகுநிதானத்தோடு துண்டு துண்டாகக் கிழித்தார், படபடெென அடித்துக்கொள்ளும் மனப் பறவையின் ஒரு சிறகை யாரோ வெட்டி விடுவது போலத்துடித்தாள் கிழவி.

"என்னவாம்..." அவள் குரலில் ஏக்கம் துளிதுளியாய் வந்தது.

"இது உன் மூத்தமகன் எழுதினது. உன்ரை மூத்தபேரன் பூனுவுக்கோ எங்கையோ விவசாயம் படிக்கப் போறுனும். இப்ப தன்னிடம் பணமில்லையாம். தன்ரை பங்கை வித்துத் தாட்டாம்"

"அதுக்கென்ன, என்ரை செல்லங்கள் படிச்சு நல்லாய் வரட்டும். அப்பனே முருகா! அந்தக் குஞ்சுகளுக்கு ஒரு குறையும் வரவிடாதை"

"ம்...அப்படியா" — வயிரமுத்தர் கடைவாய்க்குள் சிரித்துவிட்டு மற்றக் கடிதத்தைப் படித்தார். மீண்டும் பூரணம் அவரது முகத்தில் எழுதப்படும் உணர்ச்சி வரிகளை வாசிக்க முயன்றுள், கடிதத்தைப் படித்து முடித்த வயிரமுத்தர் மிகமிக நிதானத்தோடு அதையும் துண்டு துண்டாக்கினர். மற்றச் சிறகும் அரிபட்ட பூரணத்தின் மனப்பறவை மேலுங் கீழுந் தொங்கி அவஸ்தைப்பட்டது.

"என்ன" பூரணம் ஏங்கினுள்.

"இளையவன் இன்னுமொரு கடை எடுத்துவிட்டானும். வியாபாரத்தைப் பெருப்பிக்க வேணுமாம் பெருவாரியாய்க் காசு தேவையாம். அதற்காகத் தன்பங்குக் காணி பூமிகளைத் தாட்டாம், விற்பதற்கு."

"இளையவன் எப்பவும் கெட்டிக்காரன் தான். பாவம்! நாலு பெண்ணைப் பெற்றுவிட்டான், சம்பாரிக்கத் தானே வேணும்"

"ம்...அப்படியா"- அதற்கு மேல் எதுவும் பேசாமல் பல பல எண்ணங்களை உள்வாங்கி மனக்கல்லில் மோதி மோதி, சிதறு தேங்காயடித்து விளையாடினர், வயிரமுத்தர்.

"இப்ப என்ன செய்யப் போறியள்—எழுதுங்கோவன்"

"எழுதத்தான் போறன்..'

"என்ன எழுதப் போறியள்"

“உடனே வாருங்கோ” என்று தான்.

“இப்படி எழுதுங்கோ, இந்தக் கடிதத்தைத் தந்தியாய்ப் பாவிச்சு உடனே வரச் சொல்லி என்ன...”

“வேறென்ன எழுதவேணும்...’

“வாறபோது தனிய வரவேண்டாம்; பெடிச்சி, பேரப்பிள்ளைகள் ஒருத்தர் தவருமல் வரவேணும்... அதுவும் பத்துப் பதினைஞ்சு நாள் நிக்கக், கூடியதாய் வர்வேணும்...”

“வேறென்ன...”

“வேறென்னத்தை நான் சொல்ல...”

“பார் பூரணம், எழுதப்போறன் எல்லாரும் உடனே வாருங்கோ; பெண்சாதி பிள்ளைகளோடு வாருங்கோ. பத்துநாளல்ல, ஒருமாதம் நிற்கக் கூடிய ஆயத்தத்தோடு வாருங்கோ...ஆனல்—நீயும் நானும் இருக்கிறவரையில் எதையும் விற்பதற்காக ஒருவனும் வரவேண்டாம் ... இந்த நிலந்தான் இந்தக் குலத்தாய்; அவளை விற்றுவிட்டுக் கிடைக்கிற படிப்பும் வேண்டாம்; வியாபாரமும் வேண்டாம். நாங்கள் இப்போது யாருக்கும் எதையும் எழுதிக் கொடுக்கிற யோசனையில்லை— இப்படித்தான் எழுதப்போறன்—சரிதானே...”

பூரணம் விக்கித்துப் போனுள். மடை திறந்தாற்போலக் கண்ணீர் ஆருகப் பெருகியது. கண்ணீர்த் திரையினூடாக அவள் தன் கணவனைப் பார்த்தாள். தன் முப்பத்திரண்டு வருடக் குடும்ப வாழ்க்கையிலே கண்டிராத புதுமைக் கணவனை அவள் கண்டாள்... மனம் பெருமையால் விம்மிப் பொங்கிப் பூரித்தது.

“நான் ஒரு மடைச்சி”

“சீ. யார் அப்படிச் சொன்னது? நீ ஒரு பெண், என் மனைவி, இரு பிள்ளைகளின் தாய்.



# காதலுக்கோர் - அண்ணல்

அ. ஸ. அப்துஸ் ஸமது

தமிழ்நாட்டில் உவமான அழகோடு காதற்சுவை சொட்டக் கவி பாடுவதில் பாரதிதாஸன் தனிப் புகழ் பெற்றவர். இற்றைக்குச் சில ஆண்டுகளின் முன் சுதந்திரன் பத்திரிகையில்

சிற்றிடையின் மேற் குடத்தை [வள்ளி—வைத்தே
சிற்றெழுங்கையால் வருவாள் [வள்ளி
அற்புதமே காற்சிலம்பு பாடும் [—அவ்
வடி தொடர்ந்தே என்னிதயம் [ஓடும்
விற் புருவம் வேல்விழியைப் [பாய்ச்சும்—அந்த
வேதனை இராமுழுதும் [காய்ச்சும்
வெற்பொடிக்குந் தோள் [களுமே சாயும்—அவள்
வீங்கிய மார் பிற்புரள மாயும்.

என்ற பாடலைப் படித்தபோது, இந்தியாவில் காதலுக்கோர் பாரதிதாசன் வேண்டுமானல் இருந்து கொள்ளட்டும். இலங்கையில் ஓர் 'அண்ணல்' பிறந்துவிட்டார் என்று பெருமைப்பட்டுக் கொண்டேன். துடிப்பான நடையில், அமைப்பான சொற்கட்டும், சந்த இன்பமும் கொண்டு, காதல்சுவையை அழகாகச் சித்தரிக்கிறது பாடல்.

1933ம் ஆண்டில் பிறந்தஅண்ணலுக்கு அப்பொழுது இருபது வயதுதானிருக்கும். "கவிதை பாட வேண்டும். எவ்வளவு முயன்ருலும் அது வருகுதில்லையே!" என்று துடியாய்த்துடித்தார். அப்பொழுது தான் கவிஞர் புரட்சிக்கமால், எஸ். டி. சிவநாயகம் ஆகியோரின் தொடர்பு கிடைத்தது. மிக விரைவிலேயே ஈழத்துக் கவிதைவானில் பவனிவரத் தொடங்கிவிட்டார். இடைக்காலத்தில் கவிதைகள் பாடாமலே இருந்து, பின்னர் முத்தூர்க் கவிராயராகி மீண்டும், 'அண்ணலா'க மாறிவிட்டார்.

எம். எஸ். எம். ஸாலிஹ் என்பது இவரது இயற்பெயர். பெரிய கிண்ணியாவிற்குப் புகழ்தேடித்தரப் பிறந்தவர். பயிற்றப்பெற்ற தமிழாசிரியர். தலைமை ஆசிரியராகப்பணி ஆற்றுகிருர்.

மேலேகாட்டப்பட்ட 'வள்ளி' என்றஇவரது கவிதை கனகசெந்திநாதன் அவர்கள் தமது மகளின் நினைவாக வெளியிட்ட 'ஈழத்துக் கவிமலரில்' இடம் பெற்றுள்ளது. ஈழத்தில் எத்தனையோ முஸ்லிம் கவிஞர்கள் வாழ்கிருர்கள். கனகசெந்திநாதன் இவர் ஒருவரையாவது தெரிந்து கொண்டாரே என்று திருப்திப்பட்டேன் அக்கவிமலர் மூலம்.

தெள்ளுதமிழைத் துள்ளுநடையில் கையாண்டு, உள்ளத்தை அள்ளும் உவமானங்களையும் சேர்த்துக், காதலுணர்வினைக் கவிதையாகப் பாடுவதில் அண்ணலுக்குத் தனிஇடமொன்றுண்டு. காதலில் காணப்படுவது போன்று இவரது

கவிதைகளிலும் ஒரு வேகம் காணப்படுகின்றது. சொற் சந்தமும் (சில வேளை) புதியபுதிய உவமானங்களும் நிறைய இருக்கும். இதனால் பெரும்பாலும் இவரது கவிதைகள் எடுப்பாக அமைந்து விடுகின்றன, 'தக்காளிக்கன்னம்' (மாபிள் தக்காளி என்று எண்ணுகிறேன்) போன்ற புதிய உவமானங்களையும் கையாள்வார். 'நிகருண்டோ' என்னும் இவருடைய மற்றுமொருகவிதை:-

சிற்றருவிப் பாய்ச்சலிலே
தென்றலிலே மலையின்
சிகரத்தில் தவழ்கின்ற
முகில்களிலே மாலைச்
சிற்றூற்று வடிச்சலிலே
சிரிக்கின்ற ஒளியில்
திரிகின்ற இளமிருட்டின்
கலப்பினிலே வானின்
முற்றாத இளம்பிறையின்
வளைவினிலே வெள்ளி
முறுவலிலே மெய்சிலிர்க்கும்
மின்னலிலே சுவையைப்
பெற்றாலும் உயர்கவிஞன்
பேனைக்குள் நின்றே
பெருகி வரும் கவிதை தரும்
சுவைக்கு நிகருண்டோ?

இவரோ கவிஞர், கவிதைதரும் இன்பத்தை இக்கவிதை மூலம் வடித்துக் காட்டுகிறார். ஒரே ஒரு விருத்தப்பாவில்எத்தனைஉவமானங்களை, எத்தனை காட்சிகளைக்காட்டி ஒப்புநோக்கிவிட்டார்! இவருக்குள்ள உவமான ஆட்சிக்கு இது ஒரு உதாரணம். இறுதியில் "உயர் கவிஞன் பேனைக்குள் நின்றே, பெருகிவரும் கவிதைதரும் சுவைக்கு நிகருண்டோ?" என்று கேட்டாலும், இது அசல் காதற் சுவைப்பாடலைப் போலத் தோன்றவில்லையா? "மாதொருத்தி தருமின்பச்சுவைக்கு நிகருண்டோ!" என்று ஈற்றடி அமைந்தாலும் பொருள் சரியாகத்தானமையும். எனவே இவர் எதைப்பாட நினைந்தாலும் காதலுணர்வின் சாயல் படிந்து விடுகிறது! கடைசி நேரத்தில் சேணத்தைமாறிப்போட்டு, பாதையை வேறுபடுத்திக் கொள்கிறார். அவ்வளவுதான்!

சமீபத்தில் 'வீரகேசரி'யில் வெளியான 'பசி' என்ற இவரது கவிதை யொன்று மிகமிக அற்புதமானது. சொற் சந்தமும் பொருளமைதியும் சிறந்து விளங்குகிறது. அவள் பிச்சைக்காரி! அவளுக்குப் பசி. இவனும் 'இல்லாதவன்' இவனுக்கும் பசி! இரண்டு பசியும்மோதுகின்றன.

பொங்கு மிளமைக் கொங்கை
நிமிர்த்தீப் பொலிவோடு
செங்கை சுழலச் சிற்றிடை
துவளச் சிரிப்பேந்தி
மங்கை யொருத்தி வந்து மளிர்
மயலோடு [ந்தாள்
கங்கை வெள்ளம் கண்டது என்
உணர் வோட்டம்! [னும்

மோனை, எதுகை எனும் இரண்டுமே சிறப்பாக அமைந்திருப்பதனால், கவிதையில் ஓர் இசை இன்பம் இயல்பாகவே அமைந்துவிடுகிறது. இதேபாட்டில் மற்றுமோர் அடியில்

இருளில் நூற்ற எழிலாம்
கற்றைக் குழலோடு

என்று வரும் உவமானம் கற்பனையழகு தேங்கி நிற்கும், அற்புத உவமானமாகும்,இருளை நூலாகநூற்று, கற்றையாக்கிக், குழலாகப் பெற்றிருக்கிறாள் அப்பெண்! சிலப்பதிகாரத்தில் கோவலன் சிறப்பை

'மண் தேய்த்த புகழினாய்' என்று, குறிப்பிடுகிறார் திருத்தக்கத் தேவர். இந்த உயர்வு நவிற்சியில் உள்ள கற்பனையழகு, 'அண்ணலின்' இருளின் நூற்ற எழில் குழலில் காணப் படுகிறது.

இதே பாடலொன்றையே உதாரணமாகக் கொண்டு, கவிஞரது குறைபாடொன்றையும் நோக்கலாம். ஒருபிச்சைக் காரியைப் பற்றித்தான் கவிஞர் பாடினார். அவள் ஒரு பேரழகியாக நிற்கிறாள் இங்கே. மானத்தை இழந்து பிச்சை எடுத்துவரும் இவளுக்கு உண்மையாகவே இவ்வளவு அழகு இருக்குமாயின், அவளை யாரும் கூட்டிக் கொண்டிருப்பான் அல்லது அவள் கொழும்பில் 'மசாஜ்" பண்ணும் நிலையமொன்றில் இருப்பாள். எனவேஇவளுடைய அழகை அளவுகடந்து உயர்த்தி இருப்பது, யதார்த்தமான வர்ணனையல்ல. இத்தகைய இளமை பொருந்திய அழகியும் பிச்சை எடுக்கிறாள் என்ற பரிதாபக் கதையைக் கூறவும், கவிஞர் முற்பட்டிருக்கலாம்.!

எனக்கும் இதயத்தில்
தவழும் ஆசை
தையல் கையை விரிக்கின்றாள்!

என்று ஈற்றில் வரும் அடியில்தான் கவிஞருடைய இவ் வெண்ணத்தை உணர முடிகின்றது: எனினும் பாட்டில் அப் பேதைப் பெண்ணின் துயரம் நிறைந்த வாழ்வின் சோகக்காட்சியை,அவளது இளமை அழகோடு ஒப்பு நோக்கிக் காட்டி படிப்போரையும் பரிதாபப் படச் செய்வதற்குப் பதிலாக, வர்ணனை'கள் விரசஉணர்வையே எழுப்பி அவள்மீது மோகங் கொள்ளச் செய்கின்றன.

'காதல்' யாவரும் விரும்பும் சுவைதான்: ஆனால் இந்தக் காதலை உயர்ந்த பக்குவ நிலைக்கு 'மெய்க் காதல், உணர்வுகளையும் எழுப்பினால் இன்னும் பயனுடையதாக இருக்கும் என்று எண்ணுகிறேன்,.

கவிஞர்ஸாலிஹ் 'மனிதன்' என்று ஒருகதையையும் எழுதியுள்ளார். முதல் கதையே இவருக்கு வெற்றியாக அமைந்திருந்தாலும், பின்னர் எழுத வில்லை. ஏழை யொருவன் இன்னுமொரு ஏழைக்குத் தருமம் செய்த மனித உள்ளத்தின் அற்புதமான உணர்வலை யொன்றை சித்தரிக்கிறது இவரது மனிதன்.

ஈழத்தின் சிறந்த கவிஞர்களுள் ஒருவரான அண்ணலின் எதிர் காலம் இன்னும் பெருமிதப் படுதற்குரியதாக அமையும் என்று நம்புகிறேன்.


## கலைச்செல்வி விற்பனையாளர்கள்

வட-லங்கா புத்தகசாலை
பருத்தித்துறை.

லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
நெல்லியடி.

ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!

சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

நவீன சேமிப்பிற் சேருங்கள்

இலாபத்துடன் கொடுக்கும் தொகை

| மாதவீதம் கட்டுவது | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
|---|---|---|---|
| 10 ரூபா | 330 ரூபா | 750 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

மேற்குறித்த இலாபத்துடன்
ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு
அதிட்ட இலாபமும் கொடுக்கப்படும்

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு

கட்டிய பணத்துடன் கால் பங்கும் கொடுக்கப்படும்.

மறுவிபரத்திற்கு:

தலைமைக்கந்தோர்:

**இலங்கா நிதி லிமிற்றெட்**

**திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்**

கிளை:

284, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை.

''கலைச்செல்வி'' மாசி இதழில் வெளியான ''திருடாதே'' கட்டுரையில் ஈழத்திலுள்ள சில எழுத்தாளர்கள் மீது திருட்டுக்குற்றம் சாட்டியிருந்தார் ''பால்ராஜ்.'' குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று கூறுகின்றார்கள் மு. தளையசிங்கம், டொமினிக் ஜீவா ஆகியோர், அவர்களின் கட்டுரைகளை இங்கு வெளியிடுகின்றோம்.

# பயிரும் களையும்

## மு. தளையசிங்கம்

பால்ராஜின் கட்டுரையில் பல்கலைக்கழகத்துத் தமிழ்ச்சங்க இதழான ''இளங்கதிரில்'' வந்த சிறுகதையையும்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஆண்டின் இதழாசிரியர் நானே தான் என்றபடியாலும் ''மனப்புண்'' ணின் ஆசிரியரான சி. தில்லைநாதனை நான் மிகவும் அன்னியோன்னியமாக அறிவேன் என்றபடியாலும் அந்தக் கதையைச் சாட்டாகவைத்து இங்கே ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முதலில் பால்ராஜுவுக்கு என் பாராட்டுக்கள். எல்லோராலும் இன்று வந்து குவிந்துகொண்டிருக்கும் எல்லாவற்றையும் வித்தியாசம் பாராமல் படித்துக்கொண்டிருக்க முடிவதில்லை. அதனால் திருட்டுவேலைகளையும் காண முடிவதில்லை. ஆனால் அதற்காக ஒற்றுமை காட்டுபவை எல்லாம் மற்றவற்றின் தழுவல்களா? என்ன நிச்சயம்? அங்குதான் கட்டுரையாசிரியரின் வார்த்தைப்பிரயோகம் கவனிக்கப்படவேண்டியது. ஆனைமுகனுக்கு, நிரூபிக்கப்பட்ட நிச்சயமான காரணத்தோடு, உபயோகிக்கப்பட்ட அதே அழுத்தத்தை தில்லைநாதனுக்கும் காட்டமுடியாது. மனப்புண்ணைப்பற்றிக் கேள்வி எழுப்பலாமே ஒழிய சந்தேகமற நிரூபித்துவிட்டதுபோல் அழுத்தமாக அடித்துக்கூறமுடியாது. ஆனைமுகனுடைய ''விபத்து''க்கு அந்த அழுத்தம் நிச்சயமாகப் பொருந்தலாம். ஜீவாவுக்கும் சரிவரக் கூடும். ஆனால் தில்லைநாதனுக்குச் சரிவருமா என்பது கால்வாசிகூட நிச்சயமில்லை. காரணம் அவர் கையாளும்கருத்தேதான். தில்லைநாதனின் மனப்புண் கூறுவது நம் நாட்டவர்களுக்கு உரித்தான ஒரு பொது மனவிழைவைப்பற்றியே - காதல் எப்படியோ அப்படி. ஜீவாவின் பாதுகைகூறும் ஓர் அசாதாரணமான நிகழ்ச்சியைப்பற்றிக்கூடவல்ல. நம் தமிழ்ச் சமூக அமைப்பில் ஆண் பெண் வர்க்கத்தினரிடையே சரளமான பழக்கத்துக்கு இடமில்லை அவ்வளவு வசதியுள்ள நம் பல்கலைக்கழகத்தில்கூட அது ஏற்படுவது அபூர்வம். அதனால் சாதாரணமாகச் செத்துவிடும் மெல்லிய உரைசல்கள்கூட யதார்த்தத்திலிருந்து விடுபட்ட லைலா - மஜ்னு - காதல்களாகக் கற்பிக்கப்பட்டுத்தெய்வீகநிலைக்கு உயர்த்தப்பட்டு விடுகின்றன. அதன்பின்பு தவிர்க்கமுடியாமல் ஏற்படும் ஏமாற்றங்கள்கூட யதார்த்தத்துக்கு அவர்களை இழுத்துவிடுவதில்லை. மாறாக திரும்பவும் இன்னுமோர்படி உயர்ந்த கற்பனை

வாதத்தையே கொண்டுவருகிறது. தான் அடையாத காதலை தன் பிள்ளைகள் அடைவதாகக் கற்பனைசெய்தல்! எப்படி வசதியற்ற நம் சமூக அமைப்பில் நம்மவர்கள் கல்கி குமுதக் காதல் கதைகள்மூலம் திருப்தி தேடுகிருர்களோ அப்படியேதான் அதே அமைப்பில் ஏற்படும் ஏமாற்றங்களும் சமாளிக்கப்படுகின்றன - அடுத்தபிறப்பில் அல்லது அடுத்த பரம்பரையில் நிறைவேறுவதாகக் கனவுகாண்பது! இது நம் சமூகத்தின் பொதுப் பண்பு. பல்கலைக்கழகத்தில் அது மிகமிக மலிவு. தில்லைநாதன் அந்தச் சூழலையும் பண்பையும் பார்த்துத்தான் எழுதியிருக்கிருர். அவரோடு பழகியதன் காரணத்தால் அதை அழுத்தி என்னுல் சொல்ல முடியும். சமீபத்தில் பீற்றர் பத்திராஜா என்ற பொலீஸ் எஸ். ஐ. தன் காதலியையும் வெட்டிக் கொன்றுவிட்டுத் தன்னையும் சுட்டுக்கொன்றது எல்லோருக்கும் தெரியக்கூடும். அவன் என் பள்ளிக்கூட நண்பன். அதே ரகம். காதலிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தன்னைவிட்டுப்போன பின் அவளுக்குப் பிறக்கும் முதல் குழந்தைக்குத் தன் பெயரை வைக்கும்படி வேண்டியுள்ளான். யதார்த்தக் கல்லில் காதல் கனவு மோதி உடைபட்டபோது, பிறக்கும் பிள்ளைக்குத் தன் பெயரை வைக்கும்படி வேண்டி அவன் திரும்பவும் தன்னைத் திருப்திப்படுத்த முயன்றுன். திரும்பவும் ஒரு கனவு. (ஆனுல் அது திருப்தி தராமல் போனபோது யதார்த்தத்தோடு இணங்காமல் அதையே அழித்துவிட்டான் என்பது இங்கு தேவையில்லை) அது நம்மவர்களில் பலர் காணும் கனவு. அதிலிருந்து இன்னும் ஒரு படிதான் செல்லவேண்டும் தன் பிள்ளைக்கும் தன் மாஜிக் காதலியின் பிள்ளைக்கும் காதல் ஏற்பட்டுக் கல்யாணம் நடப்பதாக நினைப்பதற்கு. நம் சமூகத்தில் அது ஒரு பொதுப்பண்பு. ஆற்றங்கரையில் நடந்தால் என்ன புகையிரத நிலையத்தில் நடந்தால் என்ன வழக்கமான ஒன்றேதான். வேண்டுமானுல் அதை சென்டிமென்டலிற்றி எனலாம் கனவு எனலாம். ஆனுல் தழுவல் என்று சொல்லலாமா? அதற்கு என்ன நிச்சயம்? ஏன் அது வெறும் இலக்கிய விபத்தாக இருக்கமுடியாது?

அதுமட்டுமல்ல. பொதுவான விசயங்கள் அல்லாதவற்றைக் கண்டுபிடிப்பதில்கூட சிலசமயம் ஆச்சரியமான ஒற்றுமைகள் ஏற்பட்டுவிடுகின்றன. எத்தனையோ தத்துவங்கள், கண்டுபிடிப்புக்கள், நூல்கள் அப்படி எழுந்திருக்கின்றன. சிறிய சொந்த உதாரணம் ஒன்று. தினகரனில் மரபு பற்றிய என் கட்டுரையில் (மூன்ரும் பக்கம்) எந்தநோக்கத்தோடு "இஸ்துக்குன்னு" என்ற வார்த்தையை நான் பாவித்தேனே அப்படியே அதே வகைக் கட்டுரையில் அதே நோக்கத்தோடு சென்ற "எழுத்து"வில் சி. சு. செ. பாவிக்கிருர்! மயிர்க்காலைச் சில்லிடவைக்கும் அனுபவங்கள் அவை. பால்ராஜ் அதை மாரீசம் என்று சொல்லமுடியாது. (நல்லகாலம் எழுத்து வெளிவரமுன்பே என் கட்டுரை பத்திரிகைக்கு அனுப்பப்பட்டுவிட்டது. அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து எழுத்து ஐந்து பத்து நாட்கள் சென்றே எனக்குக் கிடைக்கும்) நான் சீட்டியடிக்க நினைக்கும்

அதே பாட்டை அடுத்த அறையிலிருந்து வேறொருவன் சொல்லிவைத்தது போல் அதேசமயம் பாடுவான்! சில்லையூர் செல்வராசன் சொன்ன மனஅருட்சிக்கும் அப்பால் பட்டவை அவை. டெலிபதி என்று சொல்ல வேண்டும், ஏன், பிரபஞ்சமனம், சமுத்திர உணர்வு என்று எல்லோருக்கும் பொதுவானவை வேறும் இருக்கின்றனவாமே. நாம் முழுப் பிரமனின் பின்னங்கள் என்றால் நம்மிடையே எண்ண ஒற்றுமை எப்படி இல்லாமல் போகமுடியும்? எனவே களைபிடுங்குபவர்கள் கவனத்துடன் பிடுங்கவேண்டும். பிழைத்துவிட்டால் ஆபத்து. அதற்குப்பின் நாஸி வெறி வந்துவிட்டால் சாடைமாடையாகத் தெரிவதெல்லாம் யூதர்களாகிவிடும்! களை பிடுங்குபவரின் கை பயிரையும் பிடுங்கிவிடும், அல்லது பிடுங்க வழிவைத்துவிடும். எனவே அந்த ஆபத்து வராமல் பார்த்துக்கொண்டு பால்ராஜ் இன்னும் பல கட்டுரைகள் எழுதவேண்டும். ஆமாம் களைபிடுங்கப்படத்தான் வேண்டும்—ஆனால் கண்ணியமாக, கவனமாக.

# —சூர்ப்பனகைத் தனம்—

## டொமினிக் ஜீவா

மொட்டைக்கடிதம் போன்றவற்றிற்கு நான் எப்பொழுதும் மதிப்புக் கொடுப்பவனேயல்ல ராமன் மாபெரும் வீரன்; தர்மத்தின் காவலன். அதே ராமன் மரத்தின் பின்னால் ஒளிந்து நின்று வாலியைக் கொன்றான். இது படு கோழைத் தனம் என்பதே என் கருத்து. அதே போல, எழுத்தாளன் என்று குறிப்பிடப்படும் ஒருவர், திடீர்ப் புனை பெயரின் மறைவில் நின்றுகொண்டு பொறுப்புள்ளவர்களின் மேல் அபாண்டம் சுமத்துவது மகாமகா கேவலம். சூர்ப்பனகை மோகினி வேஷங் கொண்டு, ராமனிடம் சீதையின் கற்பைப்பற்றி இழித்தும் பழித்தும் கூறினாளாமே, அதைப்போன்றது தான் இதுவும்.

'அவதூறுகளை வெல்வதற்கு ஒரேயொரு வழி, அதை அலட்சியம் செய்து விடுவதுதான்'. இது எனக்குத் தெரியாததல்ல. இருந்தும் மௌனம் சர்வ சம்மதம் என அர்த்தப்படுத்தப்படக் கூடாதே என்பதற்காக எனது கருத்தையும் தெரிவிக்கின்றேன்.

தொட்டவுடன் உதிர்ந்து போகும் கஞ்சாப் பூவல்ல, எழுத்தாளனுடைய புகழ். இதைச் சம்பந்தப் பட்டவர்கள் தெரிந்து வைத்திருக்காது போவது நிச்சயம் என்னுடைய குற்றமல்ல.

நான் ராஜாஜியின் கதைகளை எப்பொழுதுமே படித்தது கிடையாது. அவரை ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளன் என்று என்னை நானே ஏமாற்றிக் கொண்டதுமில்லை. ராஜாஜியைப்பற்றிய எனது இக் கருத்து நீண்ட காலமாக என்னைத்தெரிந்து வைத்திருக்கும் பலருக்கு — குறிப்பாகக் கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி

உட்பட—தெரியும்.

திட்டவட்டமாகச் சொல்லப் போனால் ராஜாஜி கதையின் ஒரு பராவைக் கூடத் தொடர்ந்து படித்ததில்லை, நான்.

—அப்புறமல்லவா, கதையும் கருத்தைக் களவாடியதும்?

ரஸிகர் மத்தியில் மனச்சாட்சியின் வாதத்திற்காக நான் ஒன்றைக் கேட்கின்றேன்; பாதுகைக் கதைக் கருவை நான் மாரீஸத்தனம் செய்திருந்தால், அக் கதையை எனது சிறுகதைத் தொகுப்பின் முதற்கதையாகப் போட்டு, அத் தொகுதியின் பெயரையும் பாதுகை என்று போட்டிருப்பேனா, அதுவும் சாகித்ய மண்டலப் பரிசுபெற்ற சூழ்நிலையில்?... இந்த நீசத்தனம் செய்ய நான் மனச் சாட்சியைக்கொன்ற ஒருவனாக இருந்திருக்க வேண்டும், அல்லது... அல்லது... நீங்களே அதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். எவ்வித மனக் கல்மிஷமுமில்லாமல் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதிக்கு நான் அக் கதையின் தலைப்பையும், அக்கதையை முதற் கதையாகவும் பாவித்ததில் இருந்தே இக் குற்றச்சாட்டு என்னைப் பாதிக்கவில்லை. மாறாகவலுவிழந்து விட்டது. —இதை நம்புவதும் நம்பாததும் உங்களைப் பொறுத்தது. என் பக்கத்தில் உண்மை இருக்கின்றதா, இல்லையா? என்பதல்ல கேள்வி, நான் உண்மையின் பக்கம் இருக்கின்றேனா என்பதே. இதைத் தீர்மானித்துக் கொண்டால் மிகுதி சுலபமானது.

முத்து முகம்மது ஏதோ ஒரு கற்பனைப் பாத்திரமல்ல, உண்மையில் கஸ்தூரியார் வீதியில் செருப்புத் தைக்கும் ஒரு மனிதன். நான் அம் மனிதனின் நீண்ட நாளைய-குழந்தைப் பருவத்து – நண்பன். அப்புறம் கதையின் சூழல். அதுவும் கற்பனையல்ல, உண்மை. மலாயாப் பென்சனியர்—இவரும் கற்பனைப் பாத்திரமல்ல.ஒரு நாள் முத்துவுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது முத்து முகம்மதுவிடம் தொழில் விவகாரமாக ஒரு மலாயாப் பென் சன்காரர் பெரிதாகச் சண்டை போட்டார். இதை நான் அவதானித்தேன். மனதில் கதைக்குரிய மூலப் பொருட்கள் பாத்திரம், சூழ்நிலை, நீண்ட நெடுங்காலமாகக் கூர்குறிப்புடன் அவதானித்து வந்த பாத்திரத்துடன் கூடிய சம்பவக் கட்டுக் கோப்பு ஆகியவை கிடைத்துவிட்டன.

முத்து முகம்மது –தொழில்–மலாயாப் பென்சனியர் – செம்மாதெரு ஒழுங்கையில் நீண்ட பல காலமாக வாழும் ஒரு பகுதி முஸ்லிம் மக்களின் வாழ்க்கை பற்றிய உண்மை நிகழ்ச்சிகள் கோர்வையாக மனதில் உருவாகிவிட்டன.

—இனிக் கதையின் கரு அல்லது கதையின் உருதான் என் மனதைக் குடைந்துகொண்டே இருந்தது.

நான் எனது சிறுகதைகளில் 'தொழிலாளி மக்களின் – பாமரர்களின் – வாழ்க்கையைத்தான், அவர்களினது ஆசாபாச உணர்வுகளைத் தான் சித்தரிக்கிறேன், 'என்ற இலக்கிய குற்றச்சாட்டிற்கு உரித்தாகிப் பலகாலம். தொடர்ந்தும் இந்தக் குற்றச் சாட்டிற்கு உரிய குற்றத்தையே நான் செய்து கொண்டிருப்பேன் என்று சபதம் பூண்டுள்ளேன். அந்த முறையில் அவர்களை-தொழிலாளி, ஏழை மக்களை - கூர்

ந்து கவனிக்கத் தவறுவதில்லை.

கள்ளுக் கொட்டில் இருக்கும் நண்பன் ஒருவனின் வீட்டிற்கு நான் அடிக்கடி போவது வழக்கம், குடிப்பதற்கா?... என்னைப் பற்றி நீங்கள் எப்படி எண்ணிக் கொண்டாலும் சரிதான். ஒரு நாள் கள்ளுச் சீவும் ஒரு சகோதரனுக்கும் இன்னொருவருக்கும் பெரிதாக வாக்கு வாதம் ஏற்பட்டது. ஏதோ கொடுக்கல் வாங்கல் பிசகாம். இருபக்கமும் காரசாரமான வாய் விளாசல்கள். வாய்ப்போர் நீண்டது. இணக்கம் காண இயலவில்லை.

திடீரென்று கள்ளுச் சீவும் தொழிலாளியைப் பார்த்து மற்றவர் சொன்னார்; "நீ சொல்லுறது கடவுள் சாட்சியாக உண்மையாய் இருந்தா உன்ரை காலிலை போடுற தளை நாரைப் போட்டு ஒருக்காக் கடந்து விடு பாப்பம்"

தொழிலாளி மறுத்து விட்டான்

என் மனதில் மாபெரும் ஞானோதயம் ஒன்று புலனாகியது. 'வயிற்றிற்குச் சோறுபோடும் தொழிற் சாதனத்தைக் கொண்டு ஒரு தொழிலாளி மனமறியப் பொய்ச்சத்தியம் பண்ண மாட்டான்!'

—எவ்வளவு பெரிய வாழ்க்கை உண்மை!

பாதுகைக்குக் கருவின் கருக் கிடைத்து விட்டது. அந்த வாரமே கதையை எழுதி முடித்து விட்டேன்.

குற்றஞ் சாட்டும் நண்பரைக் கேட்கிறேன். ராஜாஜிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சில வாழ்க்கை அநுபவ உண்மைகள் எனது வாழ்க்கையிலும் ஏற்பட்டு விடக்கூடாது என்பது ஒரு சமூக விதியா, என்ன?

கதை எழுதி முடிந்து விட்டதா? அப்புறம் கதைக்கேற்ற தலைப்பு. சில முஸ்லிம் நண்பர்களுடன் யோசித்து மனிதன் என்று பொருள்பட, 'இன்ஸான்' என்று பெயர் வைத்தேன். ஊஹூம்...! தலைப்பு ஏதோ ஓர் அந்நியப் பெயர் மாதிரித் தோன்றியது. 'செருப்பு' என்று வைத்தால்?... பச்சையாகவும், நான், நினைக்கும் கருத்தாழ முள்ளதாகவும் இல்லையே?... முடிவில் எனது மதிப்புக்குரிய, மேனாட்டு இலக்கியங்களைப் படித்துச் சுவைத்தவர் என்று பலராலும ஒப்புக்கொண்ட நண்பரைச் சந்தித்து, இன்னும் இரண்டொரு இலக்கிய நண்பர்களுடனும் சேர்ந்து யோசித்தேன்.

அப்பாடா...! செருப்பு இலக்கிய அந்தஸ்திற்கு உயர்ந்துவிட்டது.

பாதுகை என்ற பெயர் இலக்கிய நண்பர்களால் சூட்டப்பட்டது, தொடர்ந்து இதே நண்பர்கள்தான் இரண்டாவது தொகுதிக்கும் பாதுகை என நாமகரணம் சூட்டி, அதை ஆசீர்வதித்தனர்.

இதுதான் கதையின் கதை அல்லது கதை உருக்கொண்ட உண்மையின் கதை; நூலுக்குத் தலைப்பான செய்தியின் மூலம். மிக மிக உயர்ந்த கருத்துக்களை - கதா சம்பவ விந்துகளை - நான் வாழ்க்கையில் இருந்து, வாழ்க்கைப் போராட்ட அநுபவங்களில் இருந்தே பெற்றுக் கொள்ளுகின்றேன். இதற்காக நான் என்றுமே வெட்கப்பட்டது கிடையாது. வாழ்க்கையைக் கூர்ந்து கவ

னிக்கும், மக்களை நேசிக்கக் கற்றுக் கொண்ட எந்த எழுத்தாளனுக்குமே கருப்பஞ்சம் இருக்கவே இருக்காது. அவன் முன்னையப் படைப்பாளிகளிடமிருந்து திருடவேண்டும் என்ற நியதி கிடையவே கிடையாது. சமுகம் ஒரு கதைச்சுரங்கம். காதுகளைக் கூர்மையாக்கிக் கண்களை அகலத் திறந்து அவதானித்து, மனதில் உள்வாங்கிச் சிந்திக்கப் பயின்றாலே போதும். புதிய புதிய கற்பனைகள் அவனைத் தேடிவந்து சரணடையும். வாழ்க்கையில் நடைபெறும் சில சம்பவங்களில் சிலசில ஒற்றுமைகள் காணப்பட்டால் அதற்கு எழுத்தாளன் என்ன செய்யமுடியும்?

இதைப் போன்ற தாக்குதல்களை— அபாண்டப் பழிகளை — பல கட்டங்களில் பலபல ரூபங்களில் தாங்கியிருக்கின்றேன். இது அப்படியொன்றும் புதுசல்ல. இச் சாகித்திய மண்டல சதாசிவப் பின்னணித் தாக்குதல்களால் இந்த இதயம் நொடிந்து விடாது; துவண்டுபோகாது!

—இதை மாத்திரம் சொல்லி வைக்கின்றேன்.

விபசாரிக்கு ஆத்ம திருப்தி ஏற்படவேண்டுமானால் பக்கத்து வீட்டுக் குடும்பப் பெண்ணையும் வேசி என்று ஏசித்தானே திரியவேண்டும்?

— நன்றாகத் திரியட்டுமே!





# அன்பிற்கு முன்னால்...!

அவளுடைய பெற்றோர் அவளுக்கென்று ஒரு துணையைச் சேர்த்துவைத்துவிட்டு, அதாவது அவளுடைய வாழ்க்கையை அவனுடைய வாழ்க்கையுடன் இணைத்து வைத்துவிட்டுப் போய் விட்டார்கள். இனி அவளுடைய வாழ்க்கைமுழுவதும் இனிமை பெறுவது அவனால்தான் அவனுக்கென்று அவளும், அவளுக்கென்று அவனும் என்பது நிலையாயிற்று. அவள் அவனுடைய உரிமை, அவனுடைய சொந்தம், ஏன்? அவளுடைய உயிர்த்துடிப்பே அவனுடைய அன்பில்தான் அடங்கியிருக்கிறது. அவளுடைய கணவன் மதிப்பிற்குரிய, அன்பே உருவான ஒரு வைத்திய நிபுணன்.

"பூரணி!" அவள் திடுக்கிட்டு தலை நிமிர்ந்தாள். அவள் எதிரே புன் முறுவலுடன் நின்றுகொண்டிருந்தான் அவன். உடல் பதற, உள்ளம் துடிக்க, எழுந்தாள் பூரணி.

"பூரணி! நான் வெளியே என் நண்பர்களுடன் போய் வருகிறேன். உனக்குத்தனிமை சிரமமாகத் தோன்றினால் இக்கண்ணாடி அலுமாரியில் இருக்கும் புத்தகங்களில் ஒன்றை எடுத்து படித்துப்பார்!" என்று கூறி விட்டுப் போய் விட்டான் அவளுடைய கணவன் வாசுதேவன்.

பூரணியின் கண்முன்னே தேவனின் எழில்ரூபம் நினைவாகப் பூத்தது அந்த இனிய வடிவத்தின் நினைவில் இருந்து தன்னை அகற்ற விரும்பாமல் அதிலேயேலயி

நாகபூஷணி பாலசுப்பிரமணியம்

த்துப்போயிருந்தாள் பூரணி அவளைத். திருமணம் செய்து இன்று தான் கண்டிக்கு அழைத்து வந்திருந்தான் தேவன். அவனுக்கென்று உற்றார், உறவினர் யாரும் இல்லையென பூரணி அறிந்திருந்தாள். வீட்டில் அவனுக்குச் சமையல் செய்ய ஒரு வேலைக்காரனும் அவன் மனைவியும் இருந்தார்கள். காலையில் அவர்கள் வந்த நேரம் தொடக்கம் நண்பர்கள் வந்து போய்க் கொண்டிருந்த படியால் வீட்டைச்சுற்றிப்பார்ப்பதற்கு பூரணிக்கு நேரம் கிடைக்கவில்லை. எனவே வீட்டைச்சுற்றிப்பார்ப்போம் என்று எண்ணி எழுந்தாள்.

ஒவ்வொரு அறையாகப் பார்வை யிட்டபடியே வந்தாள் பூரணி. எல்லா அறைகளும் ஒழுங்குடன் காணப்பட்டன. ஆனால் ஒரே ஒரு அறை மட்டும் பூட்டப்பட்டிருந்தது. உடனே பூரணி வேலைக்காரியை அழைத்து கதவை திறக்கும்படி சொன்னாள் அவள் சொன்ன பதில் பூரணியை திகைப்பிலாழ்த்தியது. "அம்மா யாரும் ஐயாவுடைய அறைக்கு போகக்கூடாதுங்க. அதோடு சாவியும் அவர்கிட்டதானுங்க" என்றாள். பூரணி அதைப்பற்றி தன் கணவனிடமே கேட்டுக் கொள்ளலாம் என்று பேசாமல் இருந்துவிட்டாள்.

அவளுடைய வாழ்க்கை சுவையுடன் கரைய ஆரம்பித்தது. தேவன் அவள்மீது அளவற்ற அன்பைச் சொரிந்தான், அவளுடைய குறிப்பறிந்து நடந்துகொண்டான். ஆனால் ஒரு நாளாவது அவனுடைய அறைக்குள் அவளைக் கூட்டிச்செல்லவும் இல்லை, அதைப்பார்வையிட அனுமதிக்கவுமில்லை. பூரணியும் அவனுடைய வேட்டையை மீறவில்லை. ஆனால் அவளுடைய மனத்தை வருத்தியது இன்னொரு விஷயம் அது அவன் வீட்டுக்கு சிலநேரங்களில் காலம் தாழ்த்தி வருவதுதான். ஆனால் பூரணி அதையும் வெளிக்காட்டவில்லை.

அன்று அவளுடைய பிறந்த தினம். கோவிலுக்கு போவதற்காக பூரணி புறப்பட்டுக்கொண்டிருந்தாள். அவள் கண்ணாடிக்குமுன் நின்று தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கும்போது, அவளுடைய கழுத்தில் ஒரு அழகான புடவை வந்து விழுந்தது. கண்ணாடியில் தேவனுடைய புன்னகை பூத்த முகம் தெரிந்தது. பூரணியின் பின்னால் வந்து நின்றபடியே "பூரணி! இதுதான் உனக்கு என்னுடைய பிறந்ததினப் பரிசு" என்றான். பூரணி புடைவையை ஒரு முறை எடுத்து பார்த்துவிட்டு வைத்து விட்டாள்.

ஒருவாரம் ஓடிவிட்டது. ஒருநாள் அவள் கணவன் பிறந்ததினப் பரிசாகக் கொடுத்த புடவையை உடுப்பதற்காக வெளியே எடுத்தாள். புடவையுடன் சேர்ந்து ஒரு கடுதாசியும் வெளியே வந்தது. பூரணி அதை எடுத்து பார்த்தபோது அதில் இரண்டு புடவைகளுக்கான 'பில்' எழுதப்பட்டிருந்தது. பூரணிக்கு இது மிகவும் வியப்பாக இருந்தது. தேவன் ஒரு புடவைதானே வாங்கி வந்தார்? எப்படி இரண்டு புடவைகளுக்கான 'பில்'போடப்பட்டிருக்கும்? அப்படியானால் மற்றப்புடவை எங்கே? போன்ற வினாக்கள் அவள் நெஞ்சத்தில் எழுந்தன. அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது, ஏதோ ஒரு விஷயத்தைத் தன் கணவன் தன்னிடம் மறைக்கிறார் என்பதே. அவளுடைய



நெஞ்சில் ஏதோ உறுத்திக் கொண்டேயிருந்தது. தன் முகமே தன் அகத்தைக் காட்டிக்கொடுத்து விடுமோ என்ற பயத்தில் தன்னைத்தானே சமாதானப் படுத்திக்கொண்டாள் இல்லை தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டாள். வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. உடனே தன் கையில் இருந்த பில்லை சிறு துண்டுகளாக கிழித்து யன்னலுக்கு வெளியே எறிந்தாள். தன் நெஞ்சில் உள்ளதை மறந்து சாந்தம் பொலியும் முகத்துடன் கணவன் முன் தோன்றினாள்.

கணவன் முன் எவ்லாவற்றையும் மறந்து அவன் இனிய முகத்தைப் பார்த்தும், பேச்சைக் கேட்டும் தன்னை மறப்பாள். ஆனால் தனிமை அவளை வாட்டியது. அவள் மனம் அலைபாயும், தன் கணவன் குற்றவாளியா? தன் அன்பு மாறிவிடுமா? அவர் அன்பு குறைந்துவிடுமா? என்று ஏங்குவாள் மறுகணம் தன் உரிமைகளெல்லாம் அவருக்கே, தன் முழு அன்பும் அவருக்கே என்று தேறுவாள். மறுபடியும் இது என்ன பயித்தியக்காரத்தனமான எண்ணம்? அவர் இதை அறிந்தால் அவர் மனம் எத்தனை துன்பம அடையும்? என்று எண்ணுவாள்

நாளடைவில் பூரணி எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். ஒருநாள் காலை தன் செடிகளை பார்வையிடுவதற்காக பின்பக்கம் வந்துகொண்டிருந்தவள் வேலைக்காரர்களின் பேச்சைக் கேட்டு திடுக்கிட்டாள்.

"இன்றைக்கு நீ சினிமாவுக்கு போறியா?" என்று வேலைக்காரன் கேட்க "ஆமா இன்றைக்கு ஐயா ஜமீலா வீட்டுக்கு போய்த்தானே வருவார் அதற்குள் நான் திரும்பி விடுவேன் என்று சொன்னாள் வேலைக்காரி.

பூரணி வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டாள். தன் அறைக்கு போய் யன்னல் கம்பிகளை பிடித்தபடியே சிலைபோல் நின்றாள். அவளுக்கு எல்லாம் புரிந்தது போல் இருந்தது. ஆனால் புரிந்தது போலாக்கிக் கொள்ள அவள் விரும்பவில்லை. தன் கணவன் இன்னொரு பெண்ணை விரும்புகிறான் என்பதை அவள் ஏற்றுக்கொண்டாள். ஆனால் தனக்கு துரோகம் செய்கிறான் என்பதை நம்பவில்லை. அவனுடைய முழு அன்பு தனக்கு கிடைக்கவில்லை என்று அவள் வருந்தவில்லை. ஆனால் தன்னுடைய இனிய முழுமையான அன்பு அவனுக்கு வேண்டும் என்று நினைத்தாள். தன்னுடைய இனிய வாழ்க்கையை தானே உடைத்துவிட அவள் விரும்பவில்லை. அவனைத் தன் முன்னால் பரிதாபம் பொங்க பார்க்க அவள் விரும்பவில்லை. அவனைத் தன் முன்னால் அதிகாரம் உள்ளவனாக, தூய்மையானவனாக பார்க்க வேணடும் என்றே ஆசைப்பட்டாள். ஆனால் இருந்தும்......அவளுடைய கண்கள் கண்ணீரைக் கொட்டின. ஏன்? அது

அவளுக்கு புரியவில்லை. அவளுடைய நெஞ்சு ஊமையாக இருக்க கண்கள் கண்ணீரை அன்று முழுவதும் கொட்டிக்கொண்டேயிருந்தன.

பூரணி எதையும் தன் கணவனுக்குக் காட்டிக் கொள்ளவே இல்லை. என்றும் போலவேயிருந்தாள். ஒரு நாள் வெகுநேரமாகியும் தேவன் வீட்டுக்குத் திரும்பவில்லை. பூரணி யந்திரம்போல் சலனமும் இல்லாமல் கண் விழித்துக்கொண்டேயிருந்தாள். ஒருமணிபோல் தேவன் வீட்டுக்குத் திரும்பினான். பூரணி ஏதோ கேட்பதற்காக வாயைத் திறந்தவள் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு வாயை மூடிக்கொண்டாள். அவன் எதுவும் பேசவில்லை. தனக்கு பசியில்லை என்று கூறிவிட்டு படுத்துக்கொண்டான். பூரணியும் மௌனமாகப்படுக்கைக்குச் சென்றாள். நித்திரை அவளை அணுகவேயில்லை. அவளுடைய இதயம் வேதனையால் வெந்துகொண்டேயிருந்தது. மெல்ல படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்துகொண்டு தன் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள். அவளுடைய நெற்றியில் சூடான கைபடவே முகத்தை மூடியிருந்த தன் கைகளை எடுத்துவிட்டுத் தன் அருகில் அமர்ந்திருந்த கணவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். "தூக்கம் வரவில்லையா உனக்கு?"

"இல்லை! நீங்கள் ஏன் இன்று இவ்வளவு நேரம் சென்று வந்தீர்கள்?" அவள் தன்னைத்தானே அடக்கிக் கொண்டு அமைதியாகவே கேட்டாள்.

"ஓ! அதுவா? என் நண்பன் வீட்டுக்குப் போயிருந்தேன். சற்று நேரமாகிவிட்டது. அவ்வளவுதான்" என்றான். அவன் குரல் ஏனோ நடுங்கியது. பூரணி அதை நம்பவில்லை. தலையைத்திருப்பி யன்னலுக்கு வெளியே பார்த்தாள். அங்கு சூழ்ந்திருந்த இருள்போல் அவளுடைய நெஞ்சிலும் உண்மை ஒளியைக்காண முடியாமல் இருள் அடர்ந்திருந்தது. அதன் பிறகு தேவன் எதுவுமே பேசாமல் படுத்துக்கொண்டான்.






## நவீன முறையில் படப்பிடிப்பு

- பெருப்பித்தல்,
- வர்ணந்தீட்டுதல்,
- புளக் செய்தல்.

**மற்றும் படப்பிடிப்பு (Photography)**

சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய ஸ்தாபனம்.

சொந்தக்காரர்:- J. A. பேரின்பநாயகம்.

மறுநாள் சோகம் கவிந்த முகத்துடன் வீடு திரும்பினன் தேவன். பூரணியால் அந்த முகத்தைப் பார்க்கமுடியவில்லை. ஏழுமணி போல் தன் மாலை வணக்கத்தை முடித்துக்கொண்டு பூசை அறையிலிருந்து வெளியேவந்த பூரணி திகைத்துப்போய் நின்றுவிட்டாள். எதிரே என்றுமே பூட்டியிருக்கும் அவளுடைய கணவனுடைய அறை திறந்திருந்தது. உள்ளே அவளுடைய கணவன் முழு முஸ்லீம்உடையில் இருந்துகொண்டு கையில் 'திருக்குரான்' வைத்து ஓதிக்கொண்டிருந்தான். இந்தக் காட்சியை கண்ட பூரணி உணர்விழந்து சிலைபோல் வாசலில் நின்றுகொண்டிருந்தாள் தன்னுடைய வணக்கத்தை முடித்துக்கொண்ட தேவன் பூரணியை உள்ளே வருமாறு அழைத்தான். பூரணி அருகில் சென்று நிலத்தில் அமர்ந்துகொண்டாள். அவன் அமைதியாக ''பூரணி!உனக்குத் தெரியாத ஒன்றை கசப்பான ஓர் உண்மையை நீ அறியவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதை நீ அறியாவிட்டால் நான் அமைதிபெறவே முடியாது! பூரணி! நான்...நான்... ஒரு முஸ்லீம். என் தாயாரும் தங்கையும் கட்டுகாஸ் தோட்டையில் இருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுப் பூரணியின் முகத்தை பார்த்தான். எந்தவித மாற்றமும் இன்றி முன்போலவே அந்தமுகம் இருப்பதைக்கண்டு தலையைக் குனிந்துகொண்டே தொடர்ந்தான்.


''வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த என் பெற்றோர்கள் பிள்ளைப் பேறு கிடைக்காமல் வருந்திய ஒரு யாழ்ப்பாணத் தம்பதிகளிடம் என்னை ஒப்படைத்தார்கள். நான் அவர்களுடைய பிள்ளையாகவே யாழ்ப்பாணத்தில் வளர்ந்து கல்விகற்று வைத்தியத்தொழிலில் தேர்ச்சிபெற்றேன். என்னை வளர்த்தவர்கள் இறப்பதற்கு முன் என் வரலாற்றைக்கூறி என் பெற்றோர் இருக்கும் இடத்தையும் கூறிவிட்டே இறந்தார்கள். நான் கட்டுகாஸ்த்தோட்டைக்கு வந்த போது விதவையாகிவிட்ட என் தாயையும் நான் முன்பு காணாத என் தங்கையையும் கண்டேன். பாசம் என்னைப் பற்றி இழுத்தது. ஆனால், வளர்ந்த சூழ்நிலையை என்னால் திடீரென்று மாற்றிக்கொள்ள முடியவில்லை. எனவே என் அன்னையை என்னிடம் வந்திருக்கும்படி வற்புறுத்தினேன். என்னைப்போலவே அவளும் திடீரென இங்குவர விரும்பவில்லை.

இதற்கிடையில் நம்முடைய திருமணப்பேச்சு நடைபெற்றது. பார்த்தவுடனேயே உன்னிடம் என் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டேன். எனவே,உண்மையை மறைத்துத்திருமணத்தை முடித்தேன். ஆனால் அம்மாவையும் என் தங்கை ஜமீலாவையும் போய்ப் பார்த்துவருவதை நிறுத்தவில்லை. இதனால் ஊரார் என்னைத் தவறாகக்கூட எண்ணினார்கள். எங்கே உன்காதிலும் இந்தச்செய்தி விழுந்துவிடுமோ என்று நான் பயந்துகொண்டிருந்தேன். என் தாயார் எனக்கு 'திருக்குரான்'ஓத சொல்லிக்கொடுத்தார். நான் 'திருக்குரான்'நூலை என்னுடைய அறையில் வைத்திருந்தபடியால்தான் அதைத் திறப்பதற்கு யாரையும் அனுமதிக்கவில்லை திடீரென்று இரண்டுநாட்களுக்கு முன் என் தாயார் நோய்வாய்ப்பட்டார். இனி என்னுடைய தங்கையைக் காப்

பாற்றவேண்டியது என் பொறுப்பு என்று எண்ணி உனக்கு உண்மையை சொல்வதென த் தீர்மானித்தேன். களங்கத்துடன்கள்ளமற்றஉன்னிடம் பழகும்போதெல்லாம் நான் துடியாய் துடித்தேன். இன்றுதான் என் மனம் அமைதியடைந்திருக்கிறது." என்று கூறிவிட்டுக் கைகளால் கண்களை மூடிக்கொண்டான்.

இவ்வளவையும் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த பூரணி மெல்ல எழுந்தாள். "அத்தான் என் மனம் அமைதியடைந்திருக்கிறது. உங்களுடைய சாதியையோ, சமயத்தையோ நான் நேசிக்கவில்லை. நான் விரும்பியது, உங்களைத்தான், உங்களுடைய முழுமையான அன்பைத்தான். சாதியும், சமயமும், வேற்றுமையும் அன்பிற்குமுன்னால் அர்த்தமற்றவைகளாக குறுகிவிடுகின்றன. அன்பிருக்கும் இடத்தில் இறைவன் ஆட்சிசெய்கிறன். அங்கே எல்லா ஜீவன்களும் ஒன்றே. அத்துடன் என்று நான் உங்களுக்கு உடையவள் என்பது உறுதியாயிற்று அன்றுதொடக்கம் நான் உங்களுடைய சாதி. உங்களுடைய சமயம், உங்களுடைய உரிமை என்பதும் உறுதியாயிற்று. இப்போதே நாம் மாமியையும், ஜமீலாவையும் பார்க்க புறப்படவேண்டும்" என்ருள். அன்பு மேலிடும் கண்களால் அவளைப் பார்த்தான்தேவன். அமைதியுடன் அதைத் தன் கண்களால் ஏற்றுக்கொண்டாள் பூரணி.


---



## புதிய எழுத்தாளர்

"அன்பிற்கு முன்னால்" என்ற இந்தச் சிறுகதையை எழுதிய' திருமதி. நாகபூஷணி பாலசுப்பிரமணியம் அவர்கள் சுன்னுகம், ஏழாலையைச் சேர்ந்தவர். காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் "இலங்கையர் கோன்" அவர்களின் உறவினர். இவர் எழுதிய முதலாவது சிறுகதை இது. இப் புதிய பெண் எழுத்தாளரை வாசகர்கட்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமையடைகின்ருேம்.

# ஜனாப். ஜாபிர் ஏ. காதர்.



பணம் படைத்தோர் எல்லோரும் பொது சேவையில் ஈடுபடுவதில்லை. சிலரிடத்தில் அறிவுண்டு: ஆற்றல் கிடையாது. வேறு சிலரிடத்தில் சேவை மனப்பான்மையுண்டு! ஆனால் பணவசதி கிடையாது. பணமும், குணமும் நிறைந்தோரிடத்தில், கல்வியறிவுகிடையாது. இவ்வாறு ஒன்றிற்கு ஒன்று முரண்பட்டோரையே எமது சமுதாயத்தில் அதிகமாகக் காணலாம்.

எல்லாத் தகைமைகளும், உயரிய குணங்களும் பணவசதியும், ஒருங்கே அமையப்பெற்ற மிகச்சிலரே பொது சேவையில் ஈடுபடுகின்றார்கள். அந்த மிகச்சிலரில் ஒருவர்தான் கொழும்பு மாநகரசபை கோட்டைவட்டார அங்கத்தவர் திரு ஜாபீர். ஏ. காதர்.

இவர் இலங்கையில் பிரசித்தி பெற்ற செல்வச்சீமானும், 31வருடங்களாகப் புறக்கோட்டை வட்டார மாநகரசபை அங்கத்தவராக இருந்து பணிபுரிந்தவரும், சட்டநிருபணசபையில் அங்கத்தவராக இருந்து நாட்டுக்குச் சேவைபுரிந்தவருமான காலம்சென்ற பெரியார் கௌரவ. என். ஏச். எம். அப்துல்காதர் அவர்களின் அருமைப்புதல்வன். கொழும்பில் மிகவும் பொலிவுடனும், அழகுடனும் திகழும் "கபூர்கட்டிடமே" இன்றும் அவர்களின் ஞாபகச்சின்னமாக விளங்குகின்றது.

"தந்தை எவ்வழியோ மகனும் அவ்வழி" என்ற முதுமொழிக்கு ஒப்ப திரு. ஜாபீர். ஏ. காதரும், ஒரு பிரபல வர்த்தகராகவும், பொதுசேவையாளராகவும் திகழ்கின்றார். தந்தை விட்டுச்சென்ற பொதுப்பணியைத் தொடர்ந்து செய்துவரும் இவர், 1954 ம் ஆண்டுதொடக்கம் மாநகர சபை அங்கத்தவராக இருந்துவருகின்றார்.

வர்த்தகத்தில் முதிர்ந்த அனுபவசீலனாக விளங்கும் இவர், இலங்கையில் 30 படமாளிகைகளை நிர்வகித்து வரும் "சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ்" ஸ்தாபனத்தின் தலைவராகவும், பரிபாலன முதல்வராகவும் இருந்துவருவதோடு 'லிபர்ட்டி சினிமாஸ்' ஸ்தாபனத்தின் பரிபாலன முதல்வராகவும் இருந்துவருகின்றார்.

"பாம்பின்கால் பாம்பறியும்" என்ற முதுமொழிக்கிணங்க ஒரு வர்த்தகரின் தேவையை, இன்னொரு வர்த்தகர்தான் நன்கு உணரமுடியும். கோட்டைவட்டாரம் வர்த்தகர்களை பெரும்பான்மையாகக் கொண்டுள்ள வட்டாரமாகும். தங்கள் தேவைகளையும், குறைபாடுகளையும், தீர்த்து வைப்பதற்கு தகைமையும், திறனும்

படைத்தவர் திரு. ஜாபீர். ஏ. காதர் என்று பெருமிதத்தோடு கூறுகின்ருர்கள். நான்காவதுமுறையும் அவரையே தெரிவுசெய்து தங்கள் பரிபூரண ஆதரவைக் காட்டியுள்ளார்கள்.

சமயப் பற்று மிகுந்த இவர் தமிழை வளர்ப்பதிலும் ஆர்வம் கொண்டவர், முஸ்லீம் மக்களின் தாய்மொழி தமிழ்தான் என்பதில் சிறிதளவேனும் சந்தேகமற்றவர்.

கொழும்பில் வாழும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கு. மாநகரசபையில் தமிழும் ஆட்சிபுரிய வேண்டுமென்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். இந்த உரிமைகளை நிலைநாட்டுவதற்கு ஏனைய தமிழ்பேசும் அங்கத்தவர்களுடன் சேர்ந்து போராடுவதற்கு தவறமாட்டார்.

வாழ்க அவர் மொழிப்பற்று.

## திரு. ப. கதிரவேலு.

கொச்சிக்கடை வடக்குவட்டார புதிய அங்கத்தவராகத்தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. ப. கதிரவேலு ஆச்சாரியார் அவர்கள் பிரபல நகை மாளிகைச் சொந்தக்காரரும் ஆவர். இவர் ஐ. தே. கட்சிசார்பில் போட்டியிட்டு அறுநூற்றுக்கு அதிகமான வாக்குக்களால் வெற்றிபெற்ருர். முதல் முறையாக போட்டியிட்ட இவர், இந்த வட்டாரத்திற்குப் புதியவர்.

"பொதுசேவையில் ஈடுபடுபவர்களுக்குப் போதியநேரமும், பொருள் வருவாயும், அதிகம் வேண்டும்." என்று கூறும் இவர், வர்த்தகப் பொறுப்புக்களை தனது பிள்ளைகளிடம் ஒப்படைத்துள்ளார். இனிமேல் சிறிது காலத்துக்குப் பொதுசேவை செய்ய வேண்டும் என்ற விரிந்த மனப்பான்மையோடும், தேசபக்தியோடும், அரசியலில் இறங்கியுள்ளார். சைவசமயப்பற்று மிகுந்த இவர், விவேகானந்தசபை உறுப்பினராக இருந்து பல சமயசேவை செய்துள்ளார்.

எல்லோருடனும், சாதுரியமாகவும், அன்பாகவும், தயாளகுணத்துடனும் பழகும் பெருங்குணம் படைத்தவர். அதனுல் மக்களின் ஆதரவு மிகுதியாக உண்டு.

தமிழ்மொழிப் பற்றுக் கொண்ட இவர் தமிழையும் மாநகரசபையின், நிர்வாகமொழியாக்குவதற்குத் தீவிரமாகப் போராடுவேன் என்கின்ருர். முதன் முதல் கூடிய மாநகரசபைக் கூட்டத்தில் கன்னித்தமிழில் முழங்கி தமிழ்பேசும் மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றுள்ளார். தன்னம்பிக்கையோடு, உறுதியாக நிலைத்துநின்று நம் அன்னைமொழியை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கு தியாக சிந்தனையுடன் போராடவேண்டியது ஒவ்வொரு தமிழ்மகனினதும் தலையாய கடமையாகும். இப்பணியை செவ்வனே செய்வதில் திரு. கதிரவேலு ஆச்சாரியார் யாருக்கும் சளைத்தவர் அல்லர். இவர்சேவை நீடித்து நிலைபெறுக.




கடவுளரும் மனிதரும்: பவானி; "சிக்கல்" 8, சார்ள்ஸ் சர்க்கஸ்; கொழும்பு–3

'வாழ்க்கையை நன்கு அணுகி அதன் பிரச்சனைகளை படைப்பாக்க வேண்டும் என்ற எண்ணத்தில், எது பிரச்சனை? எது வாழ்க்கை?—எதனைக் காட்டுவதாக நினைத்து எதனைக் காட்டுகிறோம் என்ற சுயப் பிரக்ஞையற்ற நிலையில் படைக்கப் பட்ட கதைகளின் தொகுப்பு இது' —என்ற எண்ணமே நூலைக் கீழே வைத்தவுடன் மனதில் பளிச்சிடுகின்றன.

யதார்த்தம் என்கிற realism என்னும் வார்த்தை கடந்த சில வருடங்களாக இலக்கிய உலகில் 'பலமாக' அடிபட்டு வருகின்றது. இச் சொல்லின் கவர்ச்சியினாலே தாமும் ஒரு 'ரியலிஸ்ட், என்ற பெயரைப் பெற முனைந்து தடம் புரள்பவர்கள் பலர்.

இதில் ரியலிசத்திற்கும் இயற்கை வாதத்துக்குமோ [Naturalism] இயற்கை வாதத்துக்கும் கற்பனா வாதத்துக்குமோ உள்ள வேறுபாடு என்ன, தொடர்பு என்ன? அது எப்படியானது? என்ற ஆக்கபூர்வமான சிந்தனையற்ற நிலையில் தடுமாறுகிறார் இதன் நூலாசிரியை.

இத் தொகுதியிலே அழியாப் புகழ், அன்பின் விலை, வாழ்வது எதற்காக, பிரார்த்தனை, காப்பு, மன்னிப்பாரா? விடிவை நோக்கி, சந்திப்பு, மனிதன், ஜீவநதி, புதிர், நிறைவு; உன்னையுணர், சரியா, தப்பா, —முதலிய பதினான்கு சிறு கதைகள் உள்ளன.

பலகதைகளில் ஆசிரியையின் 'சமூகக்கண்ணோட்டம்' தவறான பாதையில் செல்வதையும், அவரது பரந்த மனப்பான்மை என்ற பெயரில் அவர் கருதும் 'சிறுபிள்ளைத் தனத்தை'யும் நாம் கவனிக்கக் கூடியதாக உள்ளது. பல கதைகள் பிரச்சனைக் கதைகள் என்ற முத்திரையில் — அவை பிரச்சனையற்ற சாதாரண நிகழ்ச்சியான போதிலும் —தமது பலவீனத்தை மறைக்க முயன்று பலத்த தோல்விக்குள்ளாகியுள்ளன.

தொகுதியில் பதினான்கு கதைகள் காணப்பட்ட போதும், அவற்றிடையே மூன்று சிறுகதைகளை மட்டும் 'தரமானவை' என்று பொறுக்கி எடுக்கலாம். காப்பு மன்னிப்பாரா, விடிவைநோக்கி — ஆகிய கதைகளில் 'பவாளி'யை இனங்காண முடிகிறது.

'காப்பு' என்ற கதை தத்துவார்த்த சிறுகதையாக விளங்கினாலும், அதனைச் சித்தரித்த முறையினால் அதுசோபிக்கவில்லை என்றே கூறவேண்டும். கதையில் வரும் பெண்ணின் மன ஓட்டம் ஆரம்

பத்தில் விரசம் தட்டும் வகையில்—மணமானவளாக இருந்தும்கூட, எதிரிலிருந்த வாலிபன் தன்னழகை ரசிக்கவில்லையே என ஏங்குவதும், அருகிலுள்ள பெண்ணின் அழகை அவன் ரசிப்பதைக்கண்டு அழகி மேல் பொருமைப் பார்வை வீசுவதுமாக — அமைந்துள்ளன. இத்தகைய சித்தரிப்பு கதையின் சிறப்புக்கு 'காப்பா'க அமையவில்லையே. தன் பலவீனமான, அருவருப்பான மனவிகாரங்களிடையே தன் அழகின்மையின் 'காப்பி'ன் பெருமையை உணர்வதால், கதாநாயகி தன்னையே ஏமாற்றிக் கொள்கிருளா?

'விடிவைநோக்கி' என்ற கதை ஒரு அபலைப்பெண்ணைப் சித்தரிக்கின்றது. இறுதியில் "இனி இந்த ஊரில் நாங்கள் வாழமுடியாது அம்மா. எல்லாம் பிறகு சொல்லிறன். இப்போ ஆயத்தப் படுத்துங்கோ. நாப்பத்தைந்து நிமிஷத்தில கொழும்புக்கு ரயில் வெளிக்கிடும்.அதைப் பிடிக்க வேண்டும்!"... என்று அபிராமி விடிவை நோக்கிப் பயணமாவதன்மூலம் சமூகத்தின் குறைபாட்டை, சீர்கேட்டை இலக்கிய நயம்பட இடித்துரைப்பது இக்கதைக்குச் சிறந்த 'வலு'வைக் கொடுக்கின்றது. இக்கதையால் 'பவானி' சிறுகதை ஆசிரியை ஆகின்ருர்.

'மன்னிப்பாரா?'—என்ற கதை பத்திரிகையில் பிரசுரமானபோதே பலத்த சரசரப்பை ஏற்படுத்திற்று. இக்கதை பெண்ணினத்தை மாசுபடுத்துகிறது என்று கண்டனம் தொடுத்தோர் பலர். சிறந்த படப் நாட்டில் நிகழ்ந்துள்ளன. 'காப்பு என்ற கதையைவிட மன்னிப்பாரா? என்ற கதை எவ்வளவோ சிறந்தது' — என்று முற்போக்கு இலக்கியம் என்ற கட்டுரையில் 'தீர்ப்பு' வழங்குகிருர் மு. தளையசிங்கம்.

உண்மையிலேயே 'மன்னிப்பாரா' ஒரு யதார்த்தப் படப்பிடிப்பா? அதாவது இக்கதை மூலம் உண்மைக்காதலிகள் எல்லாருமே தனது காதல் கைகூடா இடத்து, இன்னெருவன் உடமையாகப் போகும் நேரத்திற்கு சற்று கணநேரம் முன்பதாக, உள்ளத்தை முன்பே ஒப்படைத்தவனிடம் சென்று, தமது உடலையும் ஒப்படைத்துச்சுகம், கண்டு தமது கற்பை, வாய்மையை, பெண்மையை 'புனிதப்' படுத்துகிருர்கள் என்கிருரா?

தளையசிங்கம், பவானி ஆகியோரின் கருத்துப்படி 'மன்னிப்பாரா' சமூகப்படப்பிடிப்பாக இருந்தாலும், அதனைச் சித்தரிக்கும் வகையில் ஆசிரியை தோல்வியடைந்துள்ளமையால் அது யதார்த்த நிலையிலிருந்து, இயற்கைவாதநிலையை அடைந்து தவருன கருத்துக்கு வித்திடுகிறது. கதாசிரியை தனது திறமைக்கு மேற்பட்ட 'கனமுள்ளகரு'வை படைப்பாக்க முயன்று, இலக்கியத்தையே களங்கப்படுத்திவிட்டார். ஆசிரியை naturalism realismக்கு மிடையே உள்ள வேறுபாட்டை உணராமல், சிருஷ்டித்ததால் வந்த கேடாகும்.

ஏனைய கதைகள் மிகமிகச் சாதாரணமானவை. சில சினிமாப்

மொத்தமாக இக்கதைகளை நோக்குங்கால் நம்மனதில் புளிச்சிடுவன என்ன? உள்ளடக்கத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவம் உருவத்தில் காட்டப்படவில்லை. உருவமும், உள்ளடக்கமும் ஒட்டிப்பிறவா இரட்டையர்கள் என்பதை 'பவானி' உணரவேண்டும். இவரின் கதைகள் பல கட்டுரை வடிவந்தாங்கி நிற்கின்றன. இதனுல் கதைகளின் சுவாரஸ்யம், கதையினமைப்பால் கெட்டுவிடுகின்றது. பிரச்சனை என்ற பெயரில் தன்னையே குழப்பிக்கொண்டு பால் (Sex) சம்பந்தப்பட்ட மனேவிகாரங்களை—மனேதத்துவ (Phychology) உண்மைகளை உணராது — (பால் சம்பந்தப்பட்ட கதைகளை எழுதுவதற்கு மனேதத்துவ, உடல் நூலறிவு போன்றவை மிக மிக அத்தியாவசியம்) — யதார்த்தம் என்ற ரீதியில் உண்மைக்குப் புறம்பான இயற்கைவாதம் புரியும் கதைகளை படைப்பதை ஆசிரியை குறைக்க வேண்டும். இயற்கைவாதம் என்பது உண்மையின் ஒரு கூறுகுமே தவிர யதார்த்தமாகாது. மறு கூறு இந்த உண்மைக்கு முரணுனதாகவும் இருக்கும். என்றும் உண்மைகள் என்பன பரிமாணமானவை என்பதை ஆசிரியை உணரவேண்டும்.

இத் தொகுப்பினைச் சிறுகதைத் தொகுப்பாக மட்டு மல்லாமல், நவீன ஓவியக் கலைத் தொகுப்பாகவும் கொள்ளலாம். ஓவியத்தில், நாளுக்கு நாள் கருவிலும் அமைப்பிலும் உருவிலும் புதிய புதிய உத்திகள் கையாளப்பட்டு வருகையில்,



ஏனே துரதிர்ஷ்டவசமாக எம்மிடம் அவை வளர, ஏன், முளையிடவில்லை என்றே கூறல்வேண்டும். ஆனுல், இந்நூலின் அட்டையிலும், உள்ளே ஒவ்வொரு கதையின் முகப்புகளிலும் உள்ள சித்திரங்கள் நம் குறைபாட்டை ஓரளவு தீர்த்து வைக்கின்றன என்றே கூறல் வேண்டும்.

'இச் சித்திரங்கள் புரியவில்லை!' 'ஒரே ஆபாசக்களஞ்சியம்!'—என்று கண்களை மூடிக் கொள்பவர்கள், இறுக மூடிக் கொள்ளட்டும்.

இச்சித்திரங்கள் வெறும் சூட்சுமக் கலை (abstract art) யாகவோ, ஆபாச யதார்த்தக்(Vulgar realism) கலையாகவோ இராது, ஒரு சிறந்த சிந்தனுவாதியின் (Idealist) ரசனை வெளிப்பாடாகவே இருக்கின்றன. (ரசனை வெளிப்பாடுதானே சிறந்த கலையாகிறது) இச் சித்திரங்கள் ஆபாசமானவை (Vulger) யாக இருந்தால் அப்பொறுப்பு ஆசிரியைக்கு. ஈழத்து ஒரு இலக்கிய சிருஷ்டியிலே இன்னெருவளர வேண்டிய கலைக்குச் சிறந்த அறிமுகம் செய்த பெருமை நூலாசிரியைக்கு.

—செம்பியன் செல்வன்.

வட இலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்: ஆக்கியோன்: வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் விலை: ரூ 2. 50.

நாட்டுப்பாடல் வகைகளுள் அடங்கும் வாய்மொழிப்பாடல்கள் பலவற்றை 1. நாட்டார்பாடல்கள். 2. தாலாட்டுப்பாடல்கள் 3. ஒப்பாரி

கள் 4.வயல்வேலைகளோடு தொடர்புடைய பாடல்கள், 5. கொடும்பாவிப் பாடல்கள். 6. மணமக்களும் குடிமக்களும் 7. பிரிவாற்றுமை. 8. கப்பற் பாடல்கள் 9. நெல்குற்றுப்பாடல்கள் என்னும் தலையங்கங்களின் கீழ் தொகுத்து வெளியிடப்பட்டது இந்த நூல்.

கவிதையின் உயிரோட்டமாகும் உணர்ச்சிகளும், மக்கள் கண்களில் சாதாரணமாகத் தட்டுப்படுவதும், மக்கள் மனங்களில் தமது பண்புகளைக் காலப்போக்கில் பதியவைத்துள்ளவைகளுமான பொருள்களின் உவமானங்களும் நிறையக்கொண்டு தெளிவுடன் விளங்கும் பாடல்களே பெரும்பாலும் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன. இப்பாடல்களின் எளிமையைப்பேணி யாருக்கும் விளங்கத் தக்கவகையில் இன்றைய கவிஞர்கள் கவிதைபுனைவதே கவிதையின் செல்வாக்கினை மக்களிடையேநிலை நிறுத்தவும் மேற்கொண்டு வளர்க்கவும் சிறந்தவழி என்ற எண்ணத்தைத் தூண்டும்படி அமைந்த இப்பாடல் நூல் தக்க விளம்பரம்பெறின் நிச்சயம் மக்கள் செல்வாக்கினைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

ச. வே. ப.

ஈழத்து முஸ்லீம் புலவர்கள்: தொகுதி - 1. விலை. ரூ1. 50 எழுதியவர்: ஏயாரெம்சலீம்; வெளியீடு: பிறைபண்ணை, அக்கரைப்பற்று.

வரகவி செய்கு மதார்ப்புலவர், முகம்மது ரெவிப்புலவர், முகம்மது காசீம்புலவர் அப்துற்றகுமான் லெப்பை ஆலீம்புலவர் ஆகியவர்களது கவிதைகளும், அவற்றிற்கு தொகுப்பாசிரியர் ஏயாரெம்சலீம் எழுதிய விளக்கவுரைகளும் அடங்கியது இந்த நூல்.

வரகவியென்று பாராட்டி அழைக்கப்பெறும் செய்குமதார்ப் புலவரின் பாடல்கள் சிறப்புநோக்கியேபோலும் நூலின் முதற்கண் வைக்கப்பட்டுள்ளன. ஊனக்கண்ணை இழந்து ஈடாக ஞானக்கண்ணைப் பெற்றவராக வரலாறு கூறப்படும் இப்புலவரது கவிதைகளுள் புயற்காவியமும், வாள் பாய்ந்த கோமான் என்னும் கதைக் கவிதையும் குறிப்பிடத்தக்கவை.

நூலில் இறுதிப்பகுதியில் இடம் பெறும் அப்துற்றகுமான் லெப்பை ஆலீம்புலவரின் கவிதைகளும் சுவை மிக்கவையாகவுள்ளன.

இந் நூலில் இடம்பெறும் கவிதைகள் யாவும் இலக்கண அமைதி பெற்று விளங்குகின்றன. அதிலும் பதப்புணர்ச்சிகள் மலிந்து காணப்படுகின்றன. இப்படிநோக்கும்போது இலக்கண அறிவு சற்று அதிகமாக உள்ளவர்களுக்கே இந்த நூல் மிகவும் உகந்ததுபோல் தெரிகிறது. ஆனால் அவ்விதம் பார்க்கும்போது அவர்களுக்கும் சற்று இடர்ப்பாடும் சலிப்பும் ஏற்படக் காரணமிருப்பது போலவும்தெரிகிறது. அதாவது தமிழ் மொழியைச் சிறப்புறப் படித்தவர்களுக்கு தமிழ் ஒலியமைப்புகளுக்குப் புறம்பான ஒலிகள் தமிழில் குறுக்கிடுவது வெறுப்பையோசலிப்பையோ ஏற்படுத்துவதில் வியப்பில்லை. இந்தக் குறைபாட்டிற்குத்தமிழகத்துமுஸ்லீம் கவிஞர்கள் அநேகமாக, இடம்வைப்பதில்லை என்றே கூறவேண்டும். ஹ, ஸ, ஃ, முதலிய எழுத்துக்களை க, ச, கு, என்றும் எழுதிக்கொள்வதையே சிறப்பென்று கருதுகின்றேன். இந்தக் குறைகளை நீக்குவதால் இத்தகைய நூல்களை ஏனைய தமிழ்

பேசும் மக்களும் வேறுபாடின்றிப் படித்துமகிழ வாய்ப்புக்கிடைக்கும் அல்லவா?

இனி வரவிருக்கும் இரண்டாவது தொகுதியில் இந்தக் கருத்தில் தொகுப்பாசிரியர் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கலாம்.

ச. வே. ப.

சிட்டுக்குருவி: முக்கவிஞர் வெளியீடு, 31, திருமலைவீதி மாத்தளை; விலை ரூ. 1. 50

நவாலியூர் சொக்கநாதன், வி. கந்தவனம், ஈழவாணன் ஆகிய ஈழத்துக் கவிஞர்கள் மூவரின் தனிக் கவிதைகளின் தொகுப்புத்தான் "சிட்டுக்குருவி"

முதலாவதாக இடம்பெற்றிருக்கும் திரு. சொக்கநாதனின் கவிதைகளில், "பனி", 'பனையடிச் சின்னத் தம்பி" என்பவை குறிப்பிடத்தக்கவை.

அடுத்துவரும் திரு வி. கந்தவனம் அவர்களின் கவிதைகள் சமுதாயத்தில் காணும் குறைபாடுகளையும் சீர்கேடுகளையும் பெரும்பாலும் கண்டிக்க எழுந்தவையாகவும் வேகமும் இயல்பான கவிதைநடையும் பெற்றவையாகவும் விளங்குகின்றன.

ஈற்றில் இடம்பெறும் ஈழவாணன் அவர்களின் பகுதியில் "வாடி" என்னும் வாயில் கவிதையும் மோனம் என்னும் முடிவுக் கவிதையும்தான் தெளிவைப்பொறுத்தவரை குறிப்பிடத்தக்கவை. ஏனையவை இனிய சொற்களில் அமைந்தும் போதிய விளக்கம் பெறவில்லை.

இந் நூலில் காணப்படும் உறுத்தலான குறைபாடு அச்சுப்பிழையாகும். அச்சுப்பிழைகள் மிகமிகக் கூடுதலாகப் பாதித்துச் சிறப்பை அழிக்கும் இலக்கியப்பிரிவு கவிதையே.

ச. வே. ப.


# படிமுறை அட்சர கணிதம்

108 நாள்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும், விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்.

**A. J. ஆசீர்வாதம்** B, Sc, ( Lond)

[ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்]

6 ஆம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் 1-60
7 " " " " " - 1-60


உங்கள் பிரதிகளுக்கு:-

## ஆசீர்வாதம்
## அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி:- 274)

சிறுவர் தொடர்கதை




4.

## விடைபெற்றனர் வீரர்கள்.

மன்னர் தனது முடிவைச் சொல்ல எழுந்ததும்—

'மன்னனின் முடிவென்ன—அவர் இப்போது என்ன சொல்லப் போகிருர்—அவரது முடிபு நாட்டுக்கு விடிவாகத்தான் இருக்கவேண்டும்' என்று பலமாதிரி சபையில் இருந்தவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது—

மன்னர் தனக்கே உரித்தான கணீர் என்ற குரலில் பேசத் தொடங்கினர். இதுவரை நேரமும் சபையிலே இருந்த முணுமுணுப்புச் சத்தம் மறைந்து,அமைதி நிலவியது.

''சபையோர்களே! மந்திரியவர்கள் கூறியது போல, எனது முடிவு நாட்டுக்கு விடிவாகத்தான் இருக்கும், றத்தின் காரணமாக நீங்கள் எல்லாம் குழம்பியிருக்கிறீர்கள்; நாட்டின்கதி என்ன ஆகுமோ என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான் அரச பதவியிலிருக்கும்வரை அதற்காக—சிங்கநாட்டின் வருங்காலத்துக்காக நீங்கள் கலங்கவோ, துக்கப்படவோ வேண்டியதில்லை."

இதுவரை நேரமும் சபையைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த மன்னர் திடீரென்று இளவரசர்களைப் பார்த்து—

''இளவரசர்களே! இதோ—உங்களில் யார் அரசன் என்பதற்கொரு போட்டி; சிங்கநாட்டின் சிம்மாசனத்துக்குச் சொந்தக்காரர் யார் என்பதற்கொரு பரீட்சை. இதில் யார் ஜெயிக்கிருர்களோ — அவனே அரசன்; இந்நாட்டு மன்னவன்"

கணேந்திரன் உள்ளம் மகிழ்ச்சியால் கொந்தளித்தது; "மன்னரே உங்கள் முடிவை மெச்சுகிறேன்; என்ன போட்டி என்பதையறியத் துடிக்கிறேன்" என்ருன்.

ஆனல் மகேந்திரனே—

தனக்கே உரிய அமைதியுடன்—எதையுமே சர்வசாதாரணமாக—பொறுமையுடன் சிந்தித்த வண்ணம் இருந்தான். மன்னர் இராஜவர்மன் கூறியது மகேந்திரனுக்கு ஏதே தேவையற்ற ஒன்ருகத் தோன்றியது அவன் மிகவும் சாதாரணமாக மன்னரைப் பார்த்து—

"மன்னவ! உங்கள் முடிவு மெச்சக்கூடியதாக இருப்பினும், இந்தப்பரீட்சை தேவையானதொன்ருக எனக்குப் படவில்லை; ஒரு பொருளுக்கு இருவர் ஆசைப்பட்டால் அதற்குக் கட்டாயம் ஒரு போட்டி அவசியம். ஆனல், இந்த அரச பதவிக்கு இருவர் போட்டியாக இருக்கவில்லையே! பிறகு எதற்குப் பரீட்சையும் போட்டியும்? கணேந்திரன் அரசனுகட்டும்; நான் அவனுக்குத் துணையாக இருக்கிறேன்; அதையும் அவன் விரும்பாவிட்டால் துறவியாகின்றேன்" என்று ஒரு சிறு பிரசங்கமே செய்துவிட்டான்.

மகேந்திரனின் அடக்கமான இப்பேச்சு சபையோரின் மனதையும் எண்ணத்தையும் கருத்தையும் ஈர்ந்தது. அவன்மேல்அளவில்லா அன்பும் பற்றும் வைத்திருந்த சபையோர்—

"மகேந்திரன் சொன்னவற்றை நாம் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்; வேண்டுமானல், மகேந்திரன் அரசனுகட்டும்; கணேந்திரன் துணையாக இருக்கட்டும். அரசபதவிக்கே உரித்தான மகேந்திரன் எப்படி அரசபதவியைத் துறக்கலாம்? விபரீதமான முடிவு" என்று ஒருமித்துக் கோஷமிட்டார்கள். சபை கூடியிருந்த மண்டபமே இடிந்து விழுவது போன்றிருந்தது.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த மன்னர்—

"சபையோர்களே! மகேந்திரன் சொன்ன கருத்தைச் சில சமயம் நீங்கள் ஏற்றுக்கொண்டாலும், நான் ஒரு பொழுதுமே ஏற்றுக் கொள்ள மாட்டேன்" என்ருர்.

பிறகு மகேந்திரனை மன்னர் பார்த்து—

"மகேந்திரா! நீ சொன்னவற்றை நான் எப்படி ஏற்றுக்கொள்வேன்? இந்த நாடு எப்படித்தான் அதை ஏற்றுக் கொள்ளும்? நான் அதை ஏற்றுக்கொண்டு விட்டால், இந்த நாட்டு மக்கள் என்னை என்ன சொல்லுவார்கள் தெரியுமா?உன் தங்கம்போன்ற மனசு கணேந்திரனுக்கு இருக்கவில்லையே என்று துக்கப்படுகின்றேன். ஏற்கனவே கணேந்திரன் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டான்;உனது இக்குழப்பம் திரும்பவும் பெரிய கலவரத்தை உண்டு பண்ணிவிடும். எனவே—அமைதியாக நான்சொல்லுவதை ஏற்றுக் கொள்" என்று உருக்கமாக, சுருக்கமாகப் பேசினர்.

மன்னரின் இப்பேச்சைக் கேட்டதும், மகேந்திரன் உள்ளம் மாறியது; போட்டி என்னஎன்று அறியத் தயாரானன்.

கனேந்திரன் மன்னர் தமக்காக என்னபோட்டி தயாரித்து வைத்திருக்கிருர் என்பதையறியத் துடித்துக் கொண்டிருந்தான்; சபையிலிருந்த

வர்கள் எல்லோரும் மன்னர் எதைச் சொல்லப்போகிறார் என்ற ஆவலில் மூழ்கியிருந்தார்கள்.

அப்போது—

மன்னர் இளவரசர்களுக்கான போட்டியை மிகவும் ஆறுதலாக—அமைதியாக—கண்கள் கலங்க சொன்னார்:

"சிங்கநாட்டு அரசபதவிக்கு யார் தகுந்தவர்கள் என்பதற்கான போட்டி இது. இங்கிருந்து ஆயிரம் மைல்களுக் கப்பாலிருக்கும் நாகபுரியிலே தழும்பன் என்ற அரசன் ஆட்சிசெலுத்துகிறான். அவனிடம் நமக்குச் சொந்தமான வாள் ஒன்று இருக்கிறது. அவ்வாளைப் பெறவேண்டுமானால், பல போட்டிகள் நடத்துவான். அதில் வெற்றி பெற்றால் அந்தவாள் கிடைக்கும். அந்தவாளை இங்கு யார் கொண்டு வருகிறீர்களோ–அவர்களுக்கே இந்த நாட்டு அரசபீடம். ஆனால் ஒன்று—நாகபுரிக்குப் போவது சுலபமான தொன்றல்ல. பல காடு மலை எல்லாம் தாண்டிச் செல்லவேண்டும். இடையிலே பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டும். இடையிடையே அரக்கர்கள்கூட வாழ்கிறார்கள். சரி...இவ்வளவும்தான்."

—மன்னர் இராஜவர்மன் கண்களிலே கண்ணீர்மல்க அமர்ந்தார்.

சபை ஏதோ ஒன்றைப் பறிகொடுத்த மாதிரி ஏங்கிநின்றது.

இளவரசர்கள் ஆயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் நாகபுரிக்குச் செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள்; தமக்குத் தேவையான குதிரையைத் தெரிவு செய்துகொண்டார்கள். வேறு, வழிச் செலவுக்குத் தேவையான பொருட்கள், இன்னும் ஓரிரு போர்க் கருவிகள்......

மன்னர் இராஜவர்மனும் ராணி பவளவல்லியும் மிகுந்த துக்கத்தில்—தம் குழந்தைகளைப் பிரியப்போகிறோமே என்ற துயரத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

அப்போது—

மந்திரி கஜபதி அவர்கள் அங்கே பிரவேசித்தார்கள்.

"மன்னவ! வரலாமா?" என்ற குரலுடன் பிரவேசித்த மந்திரியை, வரவேண்டும்;வரவேண்டும்! 'என்று' அன்பு ததும்ப வரவேற்றார் மன்னர்.

"மன்னிக்க வேண்டும்; ஆழ்ந்த துக்கத்தில் மன்னரும் ராணியும் இருப்பதுபோல் தெரிகிறது. இளவரசர்களின் பிரிவையிட்டு......"—மந்திரிகஜபதி.

"இந்த அரசபதவிக்காக எனது குழந்தைகளின் உயிரே பயமான நிலையில் இருக்கிறது. பத்துமாதம் சுமந்து பல வேதனைகள் பெற்று அவர்களை வளர்த்தது இதற்குத் தானா?"—ராணி பவளவல்லி.

"ராணி! கவலையை விடுங்கள்; உங்கள் பிள்ளைகளின் உயிருக்கு எதுவுமே நேராது. அவர்கள் கோழைகளல்ல; வீரர்கள். கலக்கத்தை விட்டுக் கவலையை மறவுங்கள்" —மந்திரி கஜபதி.

இதுவரை நேரமும் அமைதியாக இருந்த மன்னர்—

"கஜபதி! இளவரசர்கள் நாகபுரிக்குச் செல்லவேண்டிய நாள் நாளைய தினம்; அவர்களை மிகவும் நல்ல முறையில் அனுப்ப வேண்டும்! அதற்கான வேலைகளைக்கவனியுங்கள்" என்றார்.

"சரி — ஆகட்டும்" என்று சொல்லியபடி மந்திரி அங்கிருந்து விடைபெற்றார்.

இளவரசர்களது தோற்றம் எல்லார் மனதையும் கவர்ந்தது. எடுப்பான அவர்களது தோற்றம் மிடுக்கான அவர்களது பார்வைக்குப் பொருத்தமாக இருந்தபடியால் — அவர்களது அழகு இன்னுமொருபடி உயர்ந்திருந்தது.

அவர்களுக்காக தயார் செய்யப்பட்டிருந்த இரண்டு குதிரைகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. வெள்ளை நிறத்தையுடைய அந்தக் குதிரைகள் இளவரசர்களைக் கொண்டு செல்வதற்காகத் துடித்துக் கொண்டிருந்தன.

சிங்கநாட்டின் அரண்மனையின் முகப்பிலே — அதாவது வெளியே இளவரசர்களை அனுப்புவதற்காக மக்கள் திரண்டிருந்தனர். மன்னர் ராஜவர்மனும், ராணி பவளவல்லியும் கலங்கிய கண்களுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

மன்னருக்கும் ராணிக்கும் பக்கத்தே...

அழகே உருவான இந்திரா சித்திரத்திலமர்ந்த செந்தாமரை போல் நின்று கொண்டிருந்தாள்; அவள் மனதிலே இனம் தெரியாத ஒரு கவலை; துக்கம்! கணேந்திரனைப் பிரியப்போகிறோமே என்ற கவலையல்ல; இளவரசர் மகேந்திரன் தன்னைவிட்டு — நாட்டைவிட்டுப் பிரிகிறாரே என்ற கவலைதான்.

இளவரசர்கள் குதிரைமேல் ஏறி விட்டார்கள்; நாட்டுமக்கள் எல்லாரும் இளவரசர்களை வாழ்த்திவிடுகிறார்கள்.

இந்திரா கடைக்கண்ணால் மகேந்திரனைப் பார்க்கிறாள்; மகேந்திரனும் பார்க்கிறான். இதைக் கண்டு விட்ட கணேந்திரன் —

கோபம் பொங்க மகேந்திரனைப் பார்க்கிறான்: அந்தப் பார்வையிலே இந்திரா தனக்குரியவள் என்ற அர்த்தம் பொதிந்துகிடந்தது. ஆனால் இந்திரா மகேந்திரன் மேல் உயிரை வைத்திருந்தாள்.

"வெற்றியுடன் திரும்பி வாருங்கள் வீரர்களே!" என்று மன்னர் கூற இளவரசர்கள் விடைபெற்றனர்.

(தொடரும்)


## யாழ்நகர எல்லையுள் "கலைச்செல்வி" கிடைக்குமிடங்கள்

1. த. தம்பித்துரை, 226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. S. கிருஷ்ணசாமி, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
3. பூபாலசிங்கம் புத்தகசாலை, பெரியகடை, யாழ்ப்பாணம்,
4. சிங்கப்பூர் கபே, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
5. தமிழ்ப்பண்ணை, 103, கா. கே. துறை வீதி' யாழ்ப்பாணம்.
6. விமலா ஸ்டோர்ஸ், கா. கே. துறை வீதி, யாழ்ப்பாணம்.

சென்னையிலுள்ள கோவூரைச் சேர்ந்தவர் கவிஞர் "இசைதாசன்" 1960ம் ஆண்டில் கவிதை எழுதத் தொடங்கிய இவர் தென்னாட்டின் பிரபல பத்திரிகைகளில் பல கவிதைகளை எழுதியிருக்கின்றார். கோ. க. பக்தவத்சலன் என்பது சொந்தப்பெயர்.

# வெற்றிப் பாதை

## இசைதாசன்

மதியிழந்த சீனனே போ போ போ
மமதை கொண்ட ஈனனே போ போ போ
சதி நிறைந்த நெஞ்சினாய் போ போ போ
சமர் தொடுத்து வந்தவா போ போ போ

நன்றி கெட்ட சீனனே போ போ போ
நட்பு கொன்ற வீணனே போ போ போ
பன்றியுள்ளங் கொண்டவா உன் செய்கை
பார்த்துலகம் வெட்குதே போ போ போ

"பஞ்ச சீலம்" கற்றவா வா வா வா
பண்பு மிக்க தமிழனே வா வா வா
அஞ்சிடாத நெஞ்சினாய் வா வா வா
அன்பு கொண்டிரங்குவாய் வா வா வா

நாடு காக்கும் வீரனே வா வா வா
நன்மை நல்கும் தீரனே வா வா வா
கோடு தாண்டி வந்தவன் சிரந்தன்னை
கொய்து போட விரைந்து நீ வா வா வா

சண்டை நின்றதென்பது பொய் பொய் பொய்
சமயம் பார்த்து தாக்குவான் மெய் மெய் மெய்
அண்டிக் கெடுத்த பகைவனை கொல் கொல் கொல்
அச்சமின்றி எதிர்த்து நீ நில் நில் நில்

பாம்பு தின்னும் பாதகன் மா! மா! மா!
பண்புகெட்ட நெஞ்சினன் சூ! சூ! சூ!
வேம்பு நெஞ்சச் சீனனை வெல் வெல் வெல்
வெற்றிப் பாதை நோக்கியே செல் செல் செல்

மா = மாசேதுங்
சூ = சூயென்லாய்

இலங்கை மலைநாட்டுப் பேச்சுத்தமிழில் இக்கதையை எழுதிய தெளிவத்தை ஜோசப், ''வீரகேசரி'' நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். சந்தர்ப்பத்திற்கேற்றபடி தன் நாவைப் புரட்டும் ஒரு சலூன்முதலாளியைச் சுற்றிக் கதையைப் பின்னியிருக்கிறார்.

# நா

## தெளிவத்தை ஜோசப்

பாபர் சலூன் பிதுங்கி நின்றது.

தாவாயைத் தடவிக் கொண்டு நிற்போரும், கண்ணாடி முன் நின்று தம்மழகை ரசிப்போரும், முன் குடுமியை முப்பது தடவை கலைத்துக் கலைத்துச் சீவுவோரும் 'நேரம் போச்சே' என்று நெளிப்போருமாக நின்ற கூட்டத்தை நானும் கூட்டினேன்.

'நேரம் காட்டியின்' நிமிட முள்ளும் மணிமுள்ளும் இரண்டுதடவை முட்டிக் கொண்ட பின்பே எனக்கு அழைப்பு வந்தது.

''தொரை ...வாங்க ...!''

என்னைத் தான் பையன் அழைத்தான்.

'வந்தமாடு வளர்ந்த புல்லை மேய்வது' போல இன்றைக்கு ஓரிடம் நாளைக்கு ஓரிடம் என்றில்லாது எந்த வேலையாயிருப்பினும் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திலேயே செய்து கொண்டால் அவர்களும் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள், நமக்கும் நன்மை. ஆகவேதான் நான் எப்போதும் வழக்கமாக அதே சலூனுக்குப் போவது.

'நம்ம ஐயாவாச்சே' என்று அவர்களும் கொஞ்சம் செம்மையாகக் கவனிப்பார்கள்.

சலூனுக்கே உரித்தானஉச்சஸ்தாகையில் அலறிக் கொண்டிருந்தது ரேடியோ. அதையே அமுக்கும் அளவு பலமாக முதல் நாள் பார்த்த 'ஸ்டண்ட்' படத்தின் காட்சி ஒன்றைப் பற்றி அலசிக் கொண்டு சவர்க்கார மூஞ்சுடன் எதிரே அமர்ந்திருப்பவர்களின் பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தார்கள் ஓரிரு சலூன் ஊழியர்கள்.

'முதலாளி 'டீ'க்குபோயிட்டாருல்ல. இனி இப்படியேதான்...'' என்றபடி சில்லென்ற வெண்ணுரையை என் முகத்தில் தடவினான் சிறுவன். அந்தச் சிறுவனிடம் தான் நான் எப்போதும் செய்து கொள்வது. சிலர் முதலாளியிடம்தான் வெட்டிக் கொள்வது வழக்கம். (சலூன் முதலாளிகளும் கத்தி பிடிப்பதுண்டு) கடை அவருடைய தென்பதால் கவனமாக, நன்றாகவேலை செய்வார் என்பது அந்தச் சிலருடைய நம்பிக்கை. அது அவ்வளவு உண்மை அல்ல. ஏனெனில் எவருடைய தலை என்பதைவிட எத்தனை தலை என்பதில்தான் அவருக்குக் கவனம் அதனால் தானே முதலை ஆளுகின்றார்.

''நீ தானுடப்பா என்றை மவனுக்கு கொண்டை வெட்டினது...?''

என் முகத்தில் கத்தியைவைத்த

சிறுவனை இழுத்தெடுத்தார் ஒருவர். சிறுவன் வாயடைத்து நின்றான். "நாங்க கொடுக்கிறது காசில்லே யே...! ஆக்கள் வந்தா ஒருவேலே, பொடிசுகள் வந்தா ஒரு வேலை இல்லியா, எங்க உங்கட முதலாளி..."

நெருப்பில் விழுந்த உப்பாய் வெடித்தார் அவர். பேச்சிலிருந்து அவர் ஒரு 'யாழ்ப்பாணத்தவர்' என்பது தெரிந்தது போலவே மலை நாட்டில் உத்தியோகம் பார்ப்பவர் என்பதுவும் தெரிந்தது.

சுற்றுப்புறம் மாற்றிவிட்டிருந்த பாஷைத் தொனி பளிச்சிட்டது அவர் பேச்சில்.

'என்னது' என்றபடி நுழைந்த முதலாளியும், "ஐயாவா" என்று அவரையும் விளித்து, அதே நேரத்தில் விஷயத்தையும் யூகித்தவராய், "டேய் 'சாருக்'கு நான் எடுத்து விடறேன், நீ ஐயா கூடப் போய் தம்பிக்கு சரியாப் பாத்து திருத்திவிட்டுட்டுவா" என்று சிறுவனை விரட்டினார்.

"பையன்ட தலையில் படிக்கட்டு கட்டியிருக்கிறான் பாருங்கோ வேன்...".

யாரிடமோ கூறியபடிநடந்தார் மற்றவர்.

"என்ன பயல்களோதெரியாது, கொஞ்சம் கூட இது கிடையாது..."

முதலாளியின் கையுடன் வாயும் அசைந்தது. 'நான் இவன் மாதிரி ஒரு கடையில் நிற்கயில் என் கையால கத்திரியைப் பிடிக்க விட மாட்டானுங்க: கடை பேரு கெட்டுப் போயிடுமாம். பிரசுக்கு சவர்க்காரம் அடிக்கிறதும் மேசை துடைக்கிறதும், தரை கூட்டுறதும் தான் என் வேலே. யாருக்காவது முடி வெட்டிய பெறகு 'ஐயாவுக்குத் தலையைச் சீவி விடுடா'ன்னு முதலாளி என்னிடம் சொல்லிவிட்டாருன்னு அடேயப்பா எனக்கு வர்ர சந்தோஷம்... அப்பெல்லாம் யாருங்க மோடு கட்டி தலே சீவுறு...அதிலே ருந்துமுல்ல நான்வேலே படிச்சேன். இப்பத்திய பயலுக என்னன்னு, நம்பி கத்தரியைக் கையில கொடுத்தும் கவனமில்லேன்னு என்ன சார் செய்யலாம். நானுந்தான் நாக்கைப் புடுங்கிக்கிற மாதிரி எந்த நாளும் பேசுறேன் ... போய்த் தொலேயுருனு? அதுவும் இல்லே...

நான் இவனமாதிரி நின்னப்போ அந்த மொதலாளி என்னே ஒரு நாள் கோபமா பேசிட்டாரு—மானக்கேடான்னு கூட வைச்சுக் கிறுங்களேன் — அவ்வளவுதான் 'இந்தாங்க முதலாளி சும்மா அநுவசியமா ஏன் பேசனும், என் கணக்கைத் தீர்த்து அனுப்பிச்சுடுங்கோ'ன்னு அப்பவே வந்துட்டன். மூணுமாசம் நின்னதுக்கு மூணு ரூவாயோ என்னமோ கொடுத்து அனுப்பினுரு. 'ரோசம் வேணும் சார் மனிசனுக்கு'. அந்த ரோஷம் தான் இன்னிக்கு என்னே இப்படி வைச்சிருக்கு. முருங்கைக் கொம் பாட்டம் நீ ஒடிச்சிக்கட்டே இரு' நான் துளுத்துக்கிட்டே இருக் கேன்னு...சரி வருமா..."

வேலே முடியவே கதையும் முடிந்து விட்டது. நானும் தப்பினேம் என்று நடந்தேன்.

∴ ∴ ∴

ஒரு வாரம் கழிந்தது. 'அல்கைட்'

செருப்புத்தோலாய் சொறசொறத்தது முகம். சலூனை அடைந்தேன். கூட்டம் என்றும் போலத்தான் மனிதனுக்கு மயிர் உள்ளவரை சலூனுக்கும் உயிர் இருக்கும். என் விழிகள் நான் வழக்கமாய் வேலை செய்து கொள்ளும் சிறுவனைத் தேடின.

அவனைக் காணவில்லை.

''வாங்கோ சார் ... இருங்கோ, இதோ ஒரு நிமிசம்,'' அப்போது தான் ஒருவரின் கழுத்தில் டவலை சுற்றிக் கொண்டிருந்த முதலாளி கூவினார்.

அந்தஆளுக்கு முடித்து என்னை அவர் கூப்பிட எப்படியும் நாற்பது நிமிடமாகும். சலூன் அகராதிப்படி முக்கால் மணிதான் ஒரு நிமிடம் போலும்!

'...ரேசரில் இந்தப் பிளேடுடன் அவன் பணம் மீதம் செய்கிறான்...'

வர்த்தக ஒலிபரப்பு அலறியது.

''டேய் சங்கர், நிறுத்துடா அந்த ரேடியோவை.''

ஒருவனுக்கு கரும்பு, அதே மற்றவனுக்கு வேம்பு!

''சங்கர், சங்கருன்னு தான் வாயில வருது. டேய், சவுறி நிறுத்து அதை.,'' முதலாளி கொதித்தார்.

அவருடைய பேச்சிலிருந்து சங்கர் — அது தான் நான் தேடிய சிறுவன் — அங்கே இல்லை என்பதை அறிந்து கொண்டேன்.

''எங்கே அந்த சங்கரன்...?''

''அவன் இப்ப இங்கே இல்லை சார்...''

நான் 'ஏன்' என்பதற்குள் அவரே தொடங்கினார். ''வந்து பாருங்க அன்னைக்கு ஏதோகோவமாப் பேசிப்புட்டேன், அவ்வளவு தான். நான் போவணும்னு ஒத்தை விரல்லே நின்னான். சரி போடான்னுட்டேன். கடையில நிக்கிற பையனுகள் யாராவது நான் நாளைக்குப் போவனும்னுக்கும், 'இந்தாப்பா இன்னைக்கே போயிடுன்னு' அனுப்பிடனும்ங்க.இல்லியோ நாம அவனுகளைத் தேடும்படி ஏதாச்சும் பண்ணிப் பிட்டு பாய்ஞ்சிடுவானுங்கள். அதுவும் இந்தக் காலப் பயலுக பெரிய மோசம் சார்...

'நான் ஏதோ ஒரு சொல் கோவமா சொன்னது தம்பிக்கு சுறுக்குன்னுறிச்சி. பெரிய ரோஷக்காரரு போயிட்டாரு. அவனைமாதிரி நான் இருக்கையில் என்னை வைச்சிருந்த முதலாளி எத்தனை பேச்சுப் பேசியிருப்பாரு தெரியுங்களா? நானும் பெரிய ரோசக்காரனுட்டம் 'போய்யா நீயும் உன் வேலையு'முன்னுட்டு வந்திருந்தா...முடியுமா சார் இன்னைய உலகத்துல...! 'மனிசனுக்கு பொறுமை வேணும் சார்,' அந்தப் பொறுமை தான் என்னை இந்த நிலையில் வைத்திருக்கு. நாம வளர்ர வரைக்கும் வளர்ந்தவங்க நம்மை குட்டத்தான் செய்வாங்க... அதை எல்லாம்பார்த்தா சரி வருமா சார்...''

ஒரு புறம் நீண்டுவிட்ட எனது மேலுதட்டு மீசையை மற்றதற்கேற்ப சரி செய்தார் முதலாளி. சந்தர்ப்பத்திற்கேற்ப தன்னுடைய பேச்சையும் சரி பண்ணிக் கொள்வது போல.

'அட மனித நாக்கே! நீ மரத்துப் போகப்படாதா?' என்று எண்ணியவாறு வெளியேறி நடந்தேன்.




# இளந்திரையன் கவிதைகள்

**கனக. செந்திநாதன்**

சென்ற ஆண்டு வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டுக்கு வருகைதந்து ஈழத்தின்பல பாகங்களிலும் சொற்பொழிவாற்றியவரும் பல, ஈழத்து எழுத்தாளர்களோடு உழுவலன்பாகப் பழகியவரும், ஈழத்து இலக்கிய முயற்சிகளிலும் எழுத்தாளர் படைப்புகளிலும் ஓரளவு பரிச்சயமுடையவருமாகிய இளந்திரையன் அவர்களது கவிதைகள் நூல்வடிவம்பெற்று வெளிவந்திருக்கின்றன. பத்தோடு பதினொன்று என இதைச் சாதாரணமாக நோக்காது விசேட கவனத்துடன் ஈழத்து இலக்கிய வட்டாரம் நுணுகிப்படிக்கும் என்பது உறுதி.

அவர் 'உள்ளம்திறந்து', 'தமிழ்ப் பெருமக்கள் திருமுன்' என எழுதியிருக்கும் முன்னுரையே அவரது அடக்கத்தைப் புலப்படுத்துகின்றது. என் இதை முதலில் குறிப்பிடுகிறேன் என்றால் ஐம்பதுபக்கமுள்ள சாதாரண கவிதை, கதை நூலொன்றை அச்சேற்றிவிட்டு அதற்கு, ஈழத்துக் 'கற்றுக் குட்டி' எழுத்தாளர் எழுதும் முகவுரையைப் படித்தாலோ தமிழ்த்தாத்தா உ. வே. சுவாமிநாதையர் இவர்களிடம் 'பிச்சை' வாங்க வேண்டும் போலிருக்கும். அவ்வளவு டமாரம்! அவ்வளவு தற்புகழ்ச்சி!! 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது எழுத்தாளனுக்குந்தான் என்பதை ஈழம் சென்ற சில வருடங்களாக மறந்து வருகிறது. 'இந்நிலையை எனக்கு ஆக்கித்தந்தவள், என்னை வளர்த்து வாழ்வித்து வரும் என் தமிழம்மை, அவள் பழையவள்; புதியவள். பழமையினால் சாகாத இளையவள்.' அவளுக்குக் கைம்மாறு செய்யும் ஆற்றல் எனக்கு இல்லை. ஆயினும் என்மனநிறைவின் அறிகுறியாக இம்முதல் மலரை, இந்த முதல் கவிதைத் தொகுதியை என்றும் இளமையறாத அவளின் அமுதத் திருவடிகளில் படைத்து மகிழ்கின்றேன்" என்பது அவரின் முகவுரையின் ஒரு பகுதி. எவ்வளவு அடக்கம்! எவ்வளவு பணிவு!!

அன்பர் இளந்திரையன் சென்ற சில வருடங்களாகப் பல பத்திரிகைகளிலும் பாடியுள்ள எழுநூறுக்கு மேற்பட்ட பாடல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. 232 பக்கமுள்ள இந்த நூலில் எந்தப்பக்கத்தைப் புரட்டி எந்தப்பாடலைத் தொட்டாலும் உடனே எமது மனதில்தோன்றுவது தமிழின் அமைதிதான், சந்தமோ–அசையோ பிழைபடாத ஒரு ஒழுங்குதான், இவை கூட இப்

போது தமிழ் நாட்டில் அருகி மனம் போனபடி புதுமை புதுமை என்ற பெயரில் எவை எவையோ வெளி வந்து கொண்டிருக்கின்றன, அந்தப் புதுக் கவிதைகளுக்கு 'சப்பைக்கட்டு' விமர்சனம் வேறு. இந்தக் கவிதைத் தொகுதியின் பாடல்களைச் சரியாக மதிப்பிட்டு 'யூனிவர்ஸல்' பதிப்ப கத்தார் எழுதிய குறிப்பு நூற்றுக்கு நூறு பொருத்தமானது. "இந்தக் கவிதைகளில் வெறிமிக்க புயல் இல்லாதிருக்கலாம். ஆனால் இதமிக்க தென்றல் இருக்கக் காண்பீர்கள்' ஊங்காரத்துடன் புரளும் வெள்ளப் பிரவாகம் இல்லாதிருக்கலாம். ஆனால் இனிமையுடன் சலசலக்கும் வெள் ளிய நீரோடை இருக்கக் காண்பீர் கள், பட்டதைச் சுட்டுப் பொசுக் கும் அனற் கொழுந்து இல்லா திருக்கலாம். ஆனால் இதமளிக்கும் இளஞ்சூடு இருக்கக் காண்பீர்கள்... அவற்றில் உயிர் இருக்கிறது. உணர்வு இருக்கிறது. மென்மை இருக் இருக்கிறது. மெருகு இருக்கிறது"

நூலாசிரியரின் முகவுரையையும் பதிப்பகத்தாரின் குறிப்புரையையும் தொட்டுக்காட்டிவிட்டு — கரையோர விமர்சனம் செய்துவிட்டு தப்பப் பார்க்கிறார், புத்தகத்தைப் படியா மலே இதை எழுதிவிடலாம் என்று நீங்கள் முணுமுணுப்பதும் — இளந் திரையன் மனத்துள் நினைப்பதும் எனக்குத் தெரிகிறது, நிகழ்ச்சிக் கொடிகள், இயற்கை, அன்பு, குழ றல், சிந்தனை மலர்த்தோட்டம் என்ற அவரது பகுப்புகளுள் ஒவ் வொன்றிலும் ஒவ்வொன்றைத் தொட்டு எழுதினாலும் கட்டுரை நீண்டுவிடும். எனவே முழுப்பாடல் களிலும் எனக்கு இரசித்த ஒருபாடலை- ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் — மாத்திரம் காட்டிமுடிக்க விரும்புகிறேன். ஏன்? அவரே ஒவ் வொரு சிறுகதை ஆசிரியரது சிறு கதைகள் பலவற்றுள்ளும் ஒன்றைத் தானே எடுத்து (உமாவில்) விமர் சனம்செய்துள்ளார்.

இக்காலக் கவிஞர்கள் எல்லாரும் அன்னையையும் தந்தையையும் பாடி யிருக்கிறார்கள். குழந்தைகளைப் பல பலகோணத்தில் காட்டியிருக்கிறார்கள். 'பாட்டியை"ப்பலர் பலவிதமாக வர் ணித்துள்ளார்கள். தாத்தாவைப் பற்றி......குறைவு. மிகமிகக்குறைவு. குருட்டுக்கிழவனையோ, நொண்டிப் பிச்சைக்காரனையோ, காந்தித்தாத்தா வையோ பாடியிருக்கலாம். ஆனால் எங்கள்வீட்டுத் தாத்தா இந்த ரகங் களைச் சேர்ந்தவரா? என்ன?

எனவேதான் இளந்திரையன் காட்டியுள்ள 'தாத்தா' எடுத்த எடுப் பிலேயே என்மனத்தைக் கவர்ந்தது.

நாங்கள் இப்போது இருக்கும் மனோநிலையை-வயதை-மறந்து பத்து வயதுப் பாலகர்களாக மாறினால்தான் இளந்திரையன் 'தாத்தா' இனிக்கும். ஆமாம். பத்துவயதுப் பாலகன்தான் பெரிய எரிச்சலோடு திட்டிக்கொண் டே — கொஞ்சம் கடுமையாகத்தான்— நம்முன் வருகிறான், அவன் 'தாத்தா' பற்றிய 'புகார்' பட்டியலை நீட்டி முழக்குகிறான் கேளுங்கள்:-

'தாத்தவா?...சேச்சே, சனியன்' என்று கடுமையாக அவன் தொடங் கும்போதே 'தம்பீ!' அப்படி எல்லாம் பெரியவர்களை -மூத்தவர்களைச்—சொல் லக்கூடாது என்று நாம் இடைமறிக் கிறோம். அவனோ,

மூத்தாலும் மூத்தார்
முகத்தில் விழித்துவிட்டால்

வேலையுடன் வேலை
விதவிதமாய் வைத்திருப்பார்
காலைமுதல் அந்திக்
கருக்கலிடும் வரையில்
செய்தாலும், 'ஏண்டா,
தெருச்சுற்று கின்றாயா?'
பொய் சொல்லாதே,
அந்தப் பொட்டுக்கடலை உமி
மாட்டுக்கு வைத்தாயா?
வைக்கோல் எடுத்ததற்குப்
போட்டாயா? உன் அப்பன்
போனால் வரமாட்டான்
வாயில்லாச் சீவன்.
வருந்தவிடலாமா?
போய் அள்ளிப் போட்டுவா-,
என்பார், முணுமுணுப்பார்.

என்று அடுக்கிக் கொண்டே போகிறான். உண்மை. நம் ஒவ்வொருவரது சொந்த அனுபவமும் அப்படித்தானே இருக்கிறது. 'ஏண்டா தெருச்சுற்றுகின்றாயா?" என்ற உரப்பலும் 'உன் அப்பன் போனால் வரமாட்டான்' என்ற 'புகாரும்' கருக்கல் 'வாயில்லாச் சீவன்' என்ற கிராமாந்தர மொழிகளும் தான் தாத்தாவை சரியாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன, இக் கவிதையை உயர்த்துகின்றன. 'வாயில்லாச் சீவனுக்கு' ஒரு சபாஷ்! போடத் தோன்றுகின்றது.

பையன் அப்பாலும் தொடர்கிறான்.

"என்னைத்தான் எப்போதும் திட்டுகிறார். திட்டட்டும். அவருக்கு அதற்கு உரிமையும் உண்டு. ஆனால் பக்கத்து வீட்டுப் பையன்களைக் கூட அல்லவா திட்டுகிறார்?

'பக்கத்து வீட்டிலுள்ள
பையனைக் கண்டு விட்டால்
க்கத்தில் வைத்திருக்கும்
கைத் தடியைத்தூக்கிடுவார்
"ஏன்டா, தடியா!
இவனையும் உன்னைப் போல்
காண்டா மிருகமாய்
ஆக்கிவிடக் கங்கணமா?
கோலி அடிப்பதற்கும்
குச்சு கம்பு தட்டுதற்கும்
சோலியற்(று) உன்னைச்
சுமந்தாளே பாவிமகள்"

என்று திட்டினால் யார்தான் எங்கள் வீட்டுக்குவரப்போகின்றார்கள் என்று கேட்கிறான் அவன். பையனுக்கு மாத்திரமா திட்டு? அவனைச் சுமந்து பெற்றவளைக்கூட சோலியற்று உன்னைச் சுமந்தாளே எனக் காளமேகப்புலவர் பாணியில்-கோட்டானே நாயே குரங்கே உனை ஒருத்தி போட்டாளே-என்பது போல அல்லவா திட்டுகிறார்? கக்கமும், கங்கணமும் கோலியும் குச்சுக் கம்பும் சோலியும், தாத்தா'வின் அப்பட்டமான மொழிகள். அதனாலே தான் பாடலும் அவர் மனோநிலையும் தத்ரூபமாக நமக்குத் தெரிகிறது. கங்கணத்தை எண்ணமென்றும் சோலியை வேலை என்றும் நல்ல தமிழாக்கிப் பாடிப் பாருங்கள். கவிதை பிறக்காது. ஆனால் வெறும் செய்யுள் பிறக்கலாம்.

இவ்வளவோடு இளந்திரையன் 'தாத்தா' பாடலை நிறுத்தியிருந்தால் அல்லது இவைபோல ஒரே தடத்தில் தன் கற்பனையை ஓடவிட்டிருந்தால் இவை வெறும் வரிக்கவிதைகள்-நடைச்சித்திரம்-என்ற நிலையில் நின்றும் உயரமாட்டா. நடைச்சித்திரமாக உருவெடுத்த இந்தக் கவிதை பிற்பகுதியில் நல்ல உருவம்-குறிக்கோள்-பெற்று முடிகிறது.

"என்று தொலையுமோ இந்தக் கிழக் கொடுமை" என்று எண்ணிய பையன் ஒரு நாள் தன் இளம்

நண்பர்களுடனே விளையாடுகையில், செங்கற் குவியலிலே. .கால்தவறி வீழ்ந்து "கணுக்கால் முகம் நெற்றி மேலுதடு மூக்கு விழிஓரம் என்னு மிந்தப் பக்கமெல்லாம் காயம்" பட்டு முன்வாசல் செல்லாமல் (தாத்தாவுக்கு பயந்து) பின்வாசலாலே புகுந்து படுத்துவிட்டான். அவனுடைய அம்மா, 'கண்கள் பெருக்கெடுக்க கைகால் பதறலிட' ஒற்றடமும் மற்றவையும் ஒவ்வொன்றாய்ச் செய்து கொண்டிருக்க, தாத்தா தடியூன்றித் தாமாக வந்துவிட்டார். தாத்தாவின் திட்டைச் சகிக்க முடியாது என்பது அவன் எண்ணம்.

ஏனெனில் திட்டியே பழகியவர் அவர் திட்டுக் கேட்டுக் கொண்டே வளர்ந்தவன் அவன். "மூத்தோர் சொல் வார்த்தை மதிக்காமல் போனாயே; மூடம். உனக்கு முழுதும் தகும்" என்று மேலும் புறுபுறுப்பார், அவன் மனம் இப்படி எண்ணியது.

ஆனால்...

தாத்தா என்ன செய்தார்?

'ஐயகோ! கண்ணே!
அடிபட்டுவிட்டாயா?
பையவே போயிப்
பதறாமல் வராமல்
செங்குருதி பொங்கச்
சிறுத்துக் குலைந்தாயே.
எங்குலையும், நெஞ்சமும்
ஈரலும் வாடுதடா!
சொன்னதெல்லாம் செய்யும்
சுகமான என் செல்வம்
சின்னவனே ஆனாலும்
தேர்ந்து சமர்த்தே நீ
பட்ட அடி என் நெஞ்சில்
பட்டது போலுள்ளதடா!

என்று புலம்பினார். அது மாத்திரமல்ல. "ஈரவிழி நீர் மாற்றி, நின்றென் முகந்தடவி நெஞ்சிலே கை வைத்து, அஞ்சாதே கண்ணே- அது எல்லாம் ஒன்றுமில்லை...தாத்தா அருகிருப்பேன்' என்றெல்லாம் 'தெம்பு' கூறத் தொடங்கிவிட்டார்.

அப்போதுதான் அவனுக்கு தாத்தாவின் அடிமனம் தெரிந்தது. அன்பு விளங்கியது. இவரையா நான் 'தாத்தாவா சேச்சே சனியன்' என வைதேன் என அழத் தொடங்கி விட்டான். ஆனால் எனது இந்த அழுகைக்குப் பொருளைத் தாத்தா அறிவாரா? என்று முடிக்கிறார் ஆசிரியர். அன்பின் அடித்தளத்தை ஒருகோணத்தில் சுட்டிக்காட்டி பையன் தாத்தா இருவரது மனோநிலைகளையும் படம்பிடித்து - எளிய சொற்களால், சாதாரண விடயமொன்றை கவிதைக்கருவாக எடுத்து இளந்திரையன் வெற்றியீட்டியுள்ளார். தமிழின் அடித்தளமான அன்பைப் பாடுவது இக்காலத்துக்குப் போதும். அதுவே நல்ல கவிஞர்கள் செல்லக்கூடிய பாதை.

இளந்திரையன் கவிதைகளில் அதிகமாக இனிப்பது அன்புவாழ்க்கை அவர் மனைவியை-வீட்டின் தலைவியை வர்ணிக்கும் அழகேதனி. பாரதிதாசனின் குடும்பவிளக்குக்கவிதைகளுக்குப் பிறகு மனைவியை - வெறும் காதல் நிலையையும்மீறி - நன்கு படம்பிடித்துக் காட்டியிருப்பவர் அவர்தான். ஆனால் அவர் 'முற்போக்கு' எண்ணங்களுக்கும், இக்காலப் பிரச்சினைகளுக்கும் உருவங்கொடுக்கும்போது கவிதை இயற்கையாய் அமையாது 'செயற்கை'யாய் விடுகிறது. அவைகள்

அவரது தமிழ் நெஞ்சத்துக்கு வராத பண்டங்கள்.

கடைசியாக, அவர் கவிதையாலே முடிக்கவிரும்புகிறேன்.

"தேடி அருந்துக
 தீந்தமிழ்ச் செல்வம்
சின்ன வயதிலே
 இத்தவம் தன்னை
நாடிப் புரிந்து
 நயங்கள் தெளிந்தே
நானில மெங்கும்
 அறமணம் வீசப்
பாடிக் களித்துப்
 பரவச மாகிப்
பக்குவ மான
 தமிழ்நெறி சென்றால்
கோடிப் புகழ்கள்
 குவிவது காண்பீர்
கோணல் இலாதநல்
 வாழ்வையும் காண்பீர்!"

'நாடிப்புரிந்து நயங்கள் தெளிந்து' படித்தால் இளந்திரையன் கவிதைகள் - பழமையில் ஊறிய புதுமை-தேன்போல இனிக்கும். ஆம். ஒவ்வொருவரும் படித்துப் பார்க்கவேண்டிய கவிதைநூல் இது.

---


இளந்திரையன் கவிதைகள்: ஆசிரியர் சாலை. இளந்திரையன். வெளியீடு. யூனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் 155 - 156 அங்கப்பநாயக்கன் தெரு சென்னை-1 விலை. ரூபா 3-25


நினைவுமலர்கள் வெளியிடுவோரே!
பாடசாலை அதிபர்களே!
புத்தக ஆசிரியர்களே!
பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்
சிறந்த 'புளக்'குகள்
செய்யவேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்.

Sri Lanka Block Makers

131, MESSENGER STREET, COLOMBO.



# படமொழிகள்!

1. ஆசைப்பட்டவன் கண்களுக்கு ஆகாசமெல்லாம் சரோஜாதேவி.
2. எழுதியவன் கதையைக் கெடுத்தான்;
   நடித்தவன் படத்தைக் கெடுத்தான்.
3. பத்மினி பாடினுல் போச்சு;
   அங்கமுத்து ஆடினுல் போச்சு.
4. குண்டு கறுப்பையா தேய்ந்து சாயிராம் ஆனற் போல.
5. விடிய விடிய சம்பூர்ணராமாயணம் பார்த்தவன் விடிந்த பிறகு ராமராவுக்குப் பத்மினி என்ன முறை என்று கேட்டானும்.
6. ஒற்றிக்கை ஒன்பது நாள்; ஷூட்டிங் ஒரே ஒரு நாள்.
7. நடிகர்களுக்குத் திலகம் என்ருலும் ராஜாமணிக்குப் பிள்ளை தானே!
8. மின்னுவதெல்லாம் சினிமா ஸ்டார் அல்ல.
9. புரட்சி நடிகர் வரும்வரை சீனுக்காரன் நிற்பானு?
10. அழகும் நடிப்பும் உடைத்தாயின் படவாழ்க்கை புகழும் பணமும் அது.




## பாமா ராஜகோபால்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து நாட்டு இளவரசியாக— ஈடு இணையற்ற அழகியாக—பல முடி மன்னர்களையெல்லாம் தன் அழகுக்கு அடிமையாக்கிவிட்ட கிளியோபட்ரா முதல் முதலில் கல்யாணம் செய்து கொண்டது—ஒருதாய்வயிற்றில் பிறந்த தன் சொந்தத்தம்பியையே! திருமணமானபோது— கிளியோபட்ராவுக்கு வயது18, தம்பியாகிய கணவனுக்கு வயது10.

போர்னியோவில் சண்டை போடும்முறையே விசித்திரமானதாக இருக்கும். இரு ஆண்களுக்குள் சண்டை ஏற்பட்டுவிட்டால், உடனே தங்கள் மனைவியரை அழைத்து, அவர்கள் இருவரையும் சண்டை போடச் செய்வார்களாம், எந்தமனைவி வென்றளோ—அவள் கணவனும் வெற்றி பெற்றதாகப் பொருள்.

உடையணிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசைக்கும், நிர்வாணமாகத் திரியவேண்டுமென்கிற காட்டுமிராண்டித்தனத்திற்கும் ஏற்பட்ட சமரச உடன்பாடுதான் நவநாகரீகப் பெண்மணிகளின் உடைகள்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி ஒரு சமயம் சுவாமி விவேகானந்தருக்கு சந்தேகம் வந்து விட்டது.' இவனென்ன கடவுளின் வாரிசா?' என்று. இதை இப்படி சுவாமி விவேகானந்தர் எண்ணிக் கொண்டிருந்தபோது— ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சுவாமி விவேகானந்தரை அழைத்து, "நீ நினைப்பது எனக்குத் தெரியும். நான் ஓர் கடவுளின் மறு அவதாரம்தான்!" என்ருராம்.

இனமுழக்கம், முன்னணி, கலைப் பொன்னி, உமா போன்ற இந்தியப் பத்திரிகைகளுக்கும் ஈழத்து ஓரிரு பத்திரிகைகளுக்கும் சினிமாச் செய்திகள் எழுதும் ஜெசன் பழகுவதற்கு நல்ல உள்ளம் படைத்தவர்; பண்புக்குத் தலைசாய்பவர், மற்றச் சினிமா நிருபர்களைப் போல நடிகர்களுடன் சேர்ந்து 'பார்ட்டி' ஒன்றுக்கும் போக மாட்டார். செய்திகள் சேகரிக்கமட்டும் செல்வார். தனது வேலை முடிந்ததும் திரும்பி விடுவார்.

பைபிள், மன்னிப்பே பெறமுடியாத ஒரு காதலைப்பற்றிக் கூறுகிறது. அதுதான்- இன்னொரு மனிதனின் 'காதல் வாழ்வைக்' கொலை செய்வதாகும்!

சிரிக்காதவனைப் பற்றி எதுவுமே முடிவுசெய்து விடாதீர்கள், அவன் வேறு ஏதாவது காரணத்தால் சிரிக்காமல் இருக்கலாம். ஆனால் அவனைப்புகழ்ந்துதான் ஆகவேண்டும், ஏனெனில், அவனிடம் பேசாத பெருந்தன்மை இருக்கிறதல்லவா?

ராஜாஜி சென்னை மாகாணப் பிரதம மந்திரியாக இருந்தபோது- ஒரு பிரபலவியாபாரி தம்முடைய சொந்த விஷயமாக அவரைச் சந்தித்துப் பேச விரும்பினர். ஆனால், ராஜாஜி அதற்கு இணங்கவில்லை. கடைசியில் அந்த வியாபாரிக்கு ஒருயுக்தி தோன்றியது. ராஜாஜி ஏதோ வேலையாக ஒருநாள் இரவு சென்றல் ஸ்டேசனில் இரண்டாம்வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யப்போகிறார் என்ற தகவல் அவருக்குக் கிடைத்தது! உடனே, அவர் தாமும் ஒரு இரண்டாம்வகுப்பு'டிக்கட்' வாங்கிக்கொண்டு போய், ராஜாஜிக்கு 'ரிசர்வ்' செய்யப்பட்டிருந்த 'சீட்'டுக்கு எதிர் 'சீட்'டில் உட்கார்ந்தார். வண்டிபுறப்பட ஆரம்பித்தது. அவர் ராஜாஜியிடம் தமது விண்ணப்பத்தைக்கூற ஆரம்பித்தார். ராஜாஜியின் நிலைமை சங்கடமாகிவிட்டது. எப்படித்தப்பலாம் என்று யோசித்தார். வண்டி அடுத்த ஸ்டேசனில் நின்றதும், ராஜாஜி இறங்கிப்போய் காலியாக இருந்த ஒரு முதல்வகுப்பைத் தமக்காக 'ரிஸர்வ்'செய்து அதில் ஏறிக்கொண்டார்.

⚜

"ஏன் கமலா, உனக்கு இப்போது வயது எத்தனை?"

"பதினெட்டு ஆகிறது!"

"ஐந்துவருஷத்துக்கு முன்னாலேயும் பதினெட்டுவயது என்று சொன்னாயே?"

"நான் மற்ற 'ஆட்டக்காரி'களைப்போல இன்னிக்கொன்று, நாளைக்கொன்று சொல்வது கிடையாது!"

⚜

காதல் வயப்பட்டோர், கவிதை வயப்பட்டோர், மது அருந்துவோர்- இம் மூவரும் நாவை அடக்கமாட்டார்கள்.


⚜

இது 'டெலிவிஷன்' காலம்; இன்னுமொரு 'டெலிவிஷன்' மாதிரியான ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். தாம் டெலிபோன் கதைக்கும்போது, அந்த 'டெலிபோனி'ல் மறுமுனையில் இருந்து பேசுபவரின் முகம்கூடத் தெரியுமாம். ஆஹா! என்ன அதிசயம்!!

⚜

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வடமொழி விரிவுரையாளராகப் பணியாற்றும் கலாநிதி கைலாசநாதக் குருக்கள் சமீபத்தில் "வடமொழி இலக்கிய வரலாறு" என்றதொரு நூலை எழுதினரல்லவா? இவர் 'கலாநிதி பட்டம் பெறுவதற்கு எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை ஆயிரம் பக்கங்களுக்கும் அதிகமானது. இப்பொழுது M. Litt பட்டத்திற்காக வேறொரு ஆராச்சிக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறாராம். ஐயாயிரம் பக்கங்கள் வரை இக் கட்டுரை இருக்குமாம். இவருடைய கையெழுத்து மிகவும் அழகாகவும் தெளிவாகவும் இருக்கும். இவர் ஊற்றுப்பேனாவே உபயோகிப்பதில்லை; மை தொட்டெழுதும் தடிப் பேனாவையே உபயோகிக்கிறார்.

⚜




# பி
# ளா
# ஸா

தகரங்களில்
அடைக்கப்
பட்ட மீன்

அசல்
மக்ரல்
பைக்ஸ்.

இப்பொழுது

## எங்கும்
## கிடைக்கும்

இவை:- புறக்கோட்டை 32ம் இலக்கம் புச்சர் வீதியிலும்
எல்லா

## சி. டப்ளியூ. ஈ. கடைகளிலும்

டிப்போக்களிலும் கிடைக்கும்.

# சி. டப்ளியூ. ஈ. குரோசரி இலாகா

மக்கலம் ரோட், கொழும்பு-10

இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்குமுள்ள அரசியல், கலாச் சாரத் தொடர்புகளைத் தெளிவாகவும் சுவையாகவும் எடுத்துக்கூறுகின்றார் சென்னை மாநிலக் கல்லூரித் துணைப்பேராசிரியராகப் பணியாற்றும் அறிஞர் திருநா வுக்கரசு அவர்கள். பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவர்கட்கும் இலக்கிய, வரலாற்று ஆராய்ச்சியா ளர்கட்கும் இக் கட்டுரைத் தொடர் பயனளிக்கும் என நம்புகின்றோம்.

# தென்னிந்தியாவும் தொல்லிலங்கையும்

க. த. திருநாவுக்கரசு எம். ஏ. (தமிழ்) ; எம். ஏ. (வரலாறு)
— எம். லிட். டிப்ளோமா (மொழி) —

இலங்கையைத் தமிழ் நாட்டினர் 'ஈழம்' என்ப் பெயரிட்டு அழைத்து வருகின்றனர். வடமொழி வாணர் இதனை 'இலங்கை' என்றும், 'சிம்மளத்வீபம்' என்றும் வழங்குவர். கிரேக்கர்களும் ரோமானியர்களும் 'தாப்ரோபானே' (Taprobane) என்னும் சொல்லால் இந்நாட்டையே குறிப்பிட்டுவந்தனர். போர்ச்சுக்கீசியர்கள் 'சிங்களம்' என்பதை 'சைலோன்' என்று அழைத்ததால், 'சிலோன்' என்னும் தற்காலப் பெயருண்டாயிற்று.

இலங்கை இந்தியாவுடன் தொன்றுதொட்டுப் பல துறைகளிலும் தொடர்புடையதாக இருந்து வருகிறது. இத் தொடர்பை விளக்கும் சான்றுகள் இவ்விரு நாட்டு வரலாறுகளிலும் கல்வெட்டுகளிலும், பண்டைமரபுக் கதைகளிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்திற்கு மிகவும் அருகில் இலங்கைத்தீவு அமைந்திருக்கிறது. அதனால் பண்பாட்டிலும், ஓரளவு அரசியலிலும் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாகவே பண்டைக்காலத்தில் விளங்கியது. இந்நாட்டின் பண்பாடு வட இந்தியத் தொடர்புடையதாக இருந்தமை ஆராய்ச்சிக்குரியதாகும். அசோகன் காலத்தில் மகதத்திலிருந்துவந்த புத்தசமயத்தை இலங்கை வரவேற்றது. அன்றுமுதல் புத்தசமயம் தேசிய சமயத்திற்குரிய பண்புகளை மேற்கொண்டு இலங்கையில் நிலைத்த வாழ்வைப்பெற்றது. ஆனால் அதனுடைய அரசியல் வரலாறு தமிழகத்தின் முப்பேரரசுகளான சேர, சோழ, பாண்டியர் வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதாகும். கி. மு. ஆறும் நூற்றாண்டில் விசயன் இலங்கையை ஆளத்தொடங்கிய காலமுதல் ஆங்கிலேயர்கைக்கு மாறும்வரை அத்தீவின் அரசியல் வரலாறு தமிழருடைய தாக்குதலை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் தொடர்கதையாகவே தோன்றுகிறது. அத்தொடர் கதையின் முதற்பகுதியை நடுநிலை

வோடு விளக்க முயல்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

உலகம் தோன்றிவளர்ந்த காலத்தில், அதனுடைய பகுதிகள் பலவற்றைக் கடல்கொண்டது என்று மண்ணியல் ஆராய்ச்சியாளர் கூறிவருகின்றனர். இக் கடல்கோள்களைப் பற்றிய கதைகளை ஒவ்வொரு நாட்டிலும் வாழுகின்ற மக்களின் மரபு வரலாற்றோடு இணைத்துக்கூறப்படும வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. பழந்தமிழிலக்கியத்தில் இக் கடல்கோள்களைப்பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. தமிழைவளர்த்த மூன்று தமிழ்ச்சங்கங்களைப்பற்றிய வரலாறு கடல்கோள்களைப்பற்றிய கதைகளோடு இரண்டறக் கலந்துள்ளன. இன்றைய தமிழகத்தின் தெற்கே, தொல்பழங் காலத்தில் ஒரு பெரு நிலப்பரப்பு இருந்தது என்பர். அங்கே பல ஆறுகளும் மலைகளும் இருந்தன. அந் நிலப்பரப்பில் பாண்டிய ஆட்சிக்குட்பட்ட நாற்பத்தொன்பது நாடுகளும் இருந்தன்வாகத் தெரியவருகிறது. கடல்கொந்தளிப்பினல் அப் பெரும் நிலப்பரப்பு கடலுள் மறைந்ததை,

வடிவேல் எறிந்த
வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன்
பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள"

சிலப். 11. 18 - 20

என்று சிலப்பதிகாரம் சுட்டிக்காட்டுகின்றது. கடல்கொண்ட தென்னுட்டைக் 'குமரிநாடு' என்று குறிப்பிடும் மரபு பண்டைக்காலம்முதல் தமிழகத்தில் இருந்துவருகிறது. இக்கால மேனுட்டு ஆராய்ச்சியாளர்கள் அதனை 'லெமூரியா' என்னும் பெயரிட்டு அழைக்கின்றனர். கடல்கொள்ளப்பட்ட தென்னுட்டைப்பற்றிய குறிப்புக்கள் இலங்கையின் பழங்கால வரலாற்றுக்குறிப்பேடான மகாவமிசத்திலும் காணப்படுகின்றன.

அப் பெருநிலப்பரப்பு அழிந்தபொழுது அதன்பகுதி ஒன்று சிறு தீவாக அமைந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். மறைந்துபோன 'குமரிக்கண்டத்தில்' இருந்த 'ஏழ்பனை'நாடே பிற்காலத்தில் இலங்கைத்தீவாக மாறியது என்றும், அதனுல்தான் அத்தீவு 'ஈழம்' என்று பெயர்பெற்றதாகவும் கூறுவர். 'ஏழ்பனை' நாடு 'ஈழம்' எனத்திரிந்ததாகவும், அதன் வடபகுதியில் யாழிசையில் வல்ல பாணர்கள் வாழ்ந்து வந்தமையால் அப்பகுதி (1)'யாழ்ப்பாணம்'என்று பெயர்பெற்றதாகவும் கூறுவர். தமிழர்கள் தோன்றியது கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் என்று திருத்தந்தை 'ஈராசுப்' பெருந்தகை போன்றவர்கள் கருதுகின்றமையால், (2) தொல்பழங் காலத்தில் தமிழரின் தாயகமாகவிளங்கிய நிலப்பரப்பின் ஒருபகுதியே இலங்கை என்று கூறுவது தவருகாது.

எனவே, "இன்றைக்கு ஐயாயி

---

1. முதலியார் செ. இராசநாயகம்; யாழ்ப்பாணச் சரித்திரம்; இரண்டாம் அதிகாரம்.

1. Father Heras: Studies in Proto - Indo Mediterranean Culture, P 475

ரம் ஆண்டுகட்குமுன் உலகத்தின் பலபாகங்களிலும் நாகரிக முறையில் வாணிகம் நடத்திய தமிழ் மக்கள் கி.மு, 600வரையிற்ருன் தமக்கு ஒரு காலத்தில் தாயகமாகவும், பிற்கால த்தில் அயலகமாகவும் விளங்கிய— இலங்கையில் குடியேறியிருப்பார்கள் எனக் கூறுதல் பொருத்தமற்ற முடி பாகும்" என்பதில் சிறிதும் ஐயமி ல்லை.

சிங்கள வரலாற்றுக் குறிப்பேடு கள் இலங்கையில் இயக்கரும், நாக ரும் தொல்பழங்காலத்தில் வாழ்ந்த தாகக் கூறுகின்றன. வடஇந்தியாவி லிருந்து தன் தோழர்களுடன் இல ங்கைக்கு வந்த விசயன் என்ற வீரன் தமிழகத்துப் பாண்டிய வேந்தனின் மகளைத் திருமணம் செய்துகொண் டான் என்ற செய்தி பண்டைக் காலத்தில் தமிழகத்திற்கும் இலங் கைக்கும் இடையே இருந்துவந்த நெருங்கிய தொடர்பைச் சுட்டிக்காட் டுகின்றது.

பாண்டிய மன்னன் தன் செல் வக்குமரிக்கு சீர்வரிசையாக யானை கள், தேர்கள், அரசியல் பணியாட் கள், ஆயிரம் தொழிலாளிகள், எழு நூறு பணிப்பெண்கள் மற்றும் பல வேலையாட்கள் முதலியோரைத் தன் மகளோடு கப்பலில் ஏற்றி இலங் கைக்கு அனுப்பிவைத்தான். விசய னின் தோழர்கள், பாண்டியநாட்டு இளவரசியோடு வந்த எழுநூறு தமிழ்ப்பெண்களையும் மணந்து கொண்டனர். அப் பாண்டிநாட்டுப் பெண்களோடு பல தமிழ்க்குடும்பங் கள் வந்து குடியேறின. அக் கலப் பினல் ஏற்பட்ட கால்வழியினரே சிங்களவர் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர், இதன்பிறகு வந் தேறிகளான விசயன் கூட்டத்தினர் இலங்கையில் நிலையாகத் தங்கினர். இலங்கையில் விசயன் வந்து குடியே றிய காலம் கி.மு. ஆரும் நூற்ருண் டாகலாம் என்பது வரலாற்றறிஞர் முடிபாகும்.

இச் செய்தியினை வரலாறு என்று ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஆராய்ச்சி யாளர்களும், இதில் ஓரளவிற்கு உண்மை உள்ளதை உணர்ந்து போற்றுகின்றனர். சிங்களத்தில் குடி யேறியவர்கள் வட இந்தியர்களே யாயினும் விசயனின் திருமணத்துக் குப்பிறகு தமிழர்களோடு அவர்கள் இனக்கலப்புற்றனர். "சிங்கள சாதிக்கு ஆக்கம்கொடுத்த மற்ருெரு சாதியினர் திராவிடராவர். அத் திரா விடர் இத்தீவில் எப்போது குடியேறி னர் என்பதற்குரிய சான்றுகள் கிடையா. இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாகவும் சமாதானக்குடிகளா கவும் திராவிடர் இலங்கைக்கு மிகப் பழங்காலந்தொடங்கிவந்தார்கள். கிறித்துவ சகாப்தத்தின் தொடக்க காலமுதல் சில நூற்ருண்டுகள்வரை திராவிடர் சிங்களச்சாதியின் ஆக்கத் திற்குத் துணைபுரிந்தே வந்திருக் கிருர்கள்,"(3)

—தொடரும்

---

3. Dr. G. Mendez; The Early History of Ceylon, P. 12

உண்மைதான்!

நான் எதையும் மறைக்க விரும்பவில்லை. என் திரையுலக— வெளியுலக வாழ்வில் நடந்தவற்றை அப்படியே ஒளிவு மறைவு இன்றி நான் புத்தகமாகவே எழுதி வெளியிடப் போகிறேன். அதனுடைய ஆங்கில பதிப்பு முதலில் வெளிவரும். பிறகு தெலுங்குப்பதிப்பு வெளிவரும். ஒரு தெலுங்குப் பத்திரிகையில் நான் என் சொந்த அனுபவத்தை அண்மையில் வெளியிட்டபோது அந்தப்பத்திரிகை மிகப் பிரமாதமாக விற்பனையாகியது. அந்தப் புத்தகம் வெளிவரும்போது வரட்டும். இப்போது எதையாவது சொல்லுங்கள் என்கிறீர்களா? என் மனதில் இருப்பதை மறைக்காமல் சொல்லுகிறேனே—




நான் ஏன் நடிப்புத் தொழிலை ஏற்றுக்கொண்டேன் தெரியுமா? கலையின்மீது நான் கொண்ட நீங்காத பற்றுதலோ — பைத்தியமோ அல்ல காரணம். "தேவை" என்ற ஒன்றுதான் காரணம். நான் எப்படி இருக்கவேண்டும் என விரும்பினேனோ அப்படியே இருக்க — இந்தப் படத் தொழிலைத் தேர்ந்து எடுத்தேன். நீங்களே பார்க்கிறீர்கள்— நான் வசதியாக இல்லை?

குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது வருவாயையும் நிலவரத்தையும் அவர்களுக்குத் தெரியாமல் மூடி மறைக்கவே விரும்புகின்றார்கள், இதனால் தான் நானும் பணம் என்பது வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதைப் புரிந்து கொள்ளாமலே—சிறுவயதில் கேட்டதையெல்லாம் கிடைக்கப் பெற்றவளாக — துயரத்தையே தீண்டாதவளாக இருந்தேன்.

ஆனால் திருமணம் என் கண்களைத் திறந்தது. என்னுடைய பதினைந்தாவது வயதில் நான் ஒரு ரேடியோ Supervisor ஸுபெப்பவைசருக்குமனைவியாக்கப் பட்டேன். அவர் மாதம் ரூ 175 சம்பளம் வாங்கும் ஒரு தொழிலாளி. ஆரம்பத்தில் அவரும் எனக்குப் பணக்கஷ்டம் தெரியாமலே இருக்க எவ்வளவோ பாடுபட்டார். அவரது சிரமமும் என்னை மகிழ்ச்சியில் திளைக்கவைக்க அவர் கையாண்ட முறைகளும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. எனினும் சுதந்திரமாக என் வழிப்படி நடக்க நான் விரும்பினேன். பொறுப்பற்ற ஒரு சோம்பேறி

வாழ்க்கை எனக்கு கசந்தது. அதே சமயம் "டெலிபோன் ஆபரேடர், டைப்பிஸ்ட்" போன்ற பெண்கள் செய்யக்கூடிய பணிகள் மிக குறைவாக ஊதியம் தந்ததால் என்னை கவரவில்லை. மிகப்பெரிய அளவில் பணி செய்ய என்மனம் விழைந்தது விளைவு—என் சினிமா பிரவேசம்.

பிரவேசம் என்றுதானே சொன்னேன்? ஆவேசம் என்றல்லவே? ஆனாலும் அந்த இரண்டாவதும் எனக்கு, வந்தது நான் செய்யத் துணிந்த செயலுக்கு என் கணவரே முதல் எதிரியாக வந்தபோது! அப்பொழுது என் முதல் குழந்தைக்கு மூன்று மாதம்தான் ஆகியிருந்தது, என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்—என் நன்மையை விரும்பும் நல்லவர்களும் என் முடிவை—சினிமாவில் சேருவதை—விரும்பவில்லை—அது திருமணமான ஒரு மரியாதைக்குரிய பெண்ணிற்கு உகந்த இடமல்லவாம்!

நான் உறுதியாக இருந்தேன்!

என் அதிர்ஷ்டத்தை நம்பித் திரையுலகில் நுழைந்தேன். என் முதல் படத்திலேயே என்னை மிகப் பெரிய ஒரு நடிகருடன் மிகப் பெரிய படாதிபதி இணைத்துத் தயாரிக்க முடிவு செய்தது என் அதிர்ஷ்டமே. அந்த நடிகர்தான் என்.டி. ராமராவ். படாதிபதிதான் நாகிரெட்டி. அது 1949ன் கடைசி, அதாவது என் பதினெட்டாவது வயதில்!

நான் படங்களில் நடித்துக் கொண்டே இருந்தபோது திடீரென ஒரு அபிப்பிராயம் என்னைப்பற்றி படவுலகில் உலவ ஆரம்பித்தது. அதாவது எனக்குப் படங்களில் நடிப்பதற்கு ஏற்ற உயரம், பருமன், கனம், கவர்ச்சி ஆகிய எதுவும் இல்லை என்பதே அது. பெண்ணிற்கு தேவையான நெளிவுகளும் — அங்க அமைப்புகளும் எனக்கு இல்லை என்றும் சொல்லப்பட்டது.

ஆனால்நான் அந்த அபிப்ராயத்திற்கு நேர்மாறாகவே இன்றுவரை இருந்து வருகிறேன்—நான் பருக்கவில்லை—எடையை கூட்டிக் கொள்ளவில்லை. நான் உடலால் உயர விரும்பவில்லை. நடிப்பால் என்னுடைய அனுபவங்களால் தான் நான் உயர—மிக உயர விரும்புகிறேன்.

நான் இதுவரை சுமார் 50 தமிழ் தெலுங்கு, கன்னடம், இந்தி படங்களில் நடித்துவிட்டேன். ஆயினும் என்னை நன்கு புரிந்து கொண்டு எனக்கு ஏற்ற பாகங்களை இதுவரை எந்தப் படாதிபதியும் தரவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயமே. எங்களில் பலர் நல்ல நல்ல குணச் சித்திர வேடங்களைச் செய்யத் துடிக்கின்றனர். ஆனால் தருவது யார்? எங்களது விருப்பம் இன்றியே—எங்களால் தான் செய்ய இயலும் என்று கூறப்படும் சில பாகங்களை எங்களுக்கு கட்டாயமாக தந்துவிடுகின்றனர். மேலும் கவர்ச்சியையும், ஆபாசத்தையும்தான் இன்றைய படாதிபதிகள் விரும்புகின்றார்கள். கவர்ச்சியையும், பெண்ணழகையும் விற்பதுதான் இன்றைய நடிகைகளின் முதல் படவேலை. இதற்கும் நடிப்பிற்கும் துளியும் சம்பந்தம் கிடையாது என்பது என அபிப்பிராயம்.

தமிழ் படவுலகில் பெரிய குறை-கதைதான். நடிகர்களைத் தேர்ந்து எடுத்தபின் அவர்களுக்கு ஏற்ற கதையைத் தேடும் அவலநிலை என்று தான் மாறுமோ? நடிக-நடிகையரை இந்த படவுலகம் அந்தப் அளவிற்கு நம்பக்கூடாதுஎன்பதுஎன்எண்ணம்.

இன்னொன்றையும் சொல்லத் தான் வேண்டும். நான் எதையும் மறைக்காமல் உள்ளத்தில் இருப் பதை அப்படியே வெளிப்படையாக சொல்கிறேனே, இந்த என் தன்மை தான் என் படவுலகத்தோல்விகளுக்கு முக்கியமான காரணம். என் அபிப் பிராயத்தைக் கேட்பவர்கள் உண்மையை அப்படியே எதிர்பார்க்கும் தன்மையுடையவராக இருக்க மாட்டேன் என்கிறார்களே — என்ன செய்வது?

எனக்குப்பிடித்த டைரக்டர் யார்? சரிசொல்லுகிறேன்—பிரசாத், பிரகாஷ் ராவ் இருவரும் நல்ல டைரக்டர் களே. ஆனால் அவர்கள் படாதிபதி களாகி விடுவதால் அவர்களது திறமை குறுக்கப்பட்டு விடுகின்றன என்பது என் கருத்து.

சரி—என் மனதில் இருந்ததை யெல்லாம் ஓரளவிற்குச் சொல்லி விட்டேன்—நான் விடைபெறட்டுமா?


வணக்கம்!

மணியோசை படத்தில் கல்யாண குமாரும் விஜயகுமாரியும் தோன்றும் ஒரு காட்சி.



சினிமா எழுத்தாளர்.....

ஜெசன்...



படைக்கும்!

திரை விருந்து......



# இவர் எப்படி?

## ராகினி

### அறிமுகம்.

சிலருக்குச் சிறுவயதிலிருந்தே நடிக்க வேண்டுமென்ற ஆர்வம் உள்ளத்திலேயே உருவாகி, அது நடிகையாகமாறும்வரை வளரும். சிலர் திடீரென படவுலகிற்கு எப்படியோ ஏனோ புகுந்து விட்டு திடீர் பிரபலமாகி விடுவார்கள். ராகினியைப் பொறுத்தவரை இந்த இரண்டுமற்ற ஒன்று தான் அவரை நடிகையாக்கிவிட்டது. அது— அவருடைய சகோதரிகளின் படவுலக அனுபவம்தான். படித்துக்கொண்டிருந்த ராகினி தன் தமக்கைகளான லலிதாவும் பத்மினியும் படவுலகில் பிரபலமாக புகழுடன் நடனமாடி வருவதைத்தினமும் பார்த்து வந்தார். இருவராக இருந்த அவர்களுடன் இணைந்து மூவராகமாறினார். இவரது குழந்தைப்பருவம் இவரை விட்டு அகன்று, மலர்ந்த இளமைப்பருவம் இவரைத் தழுவிக் கொண்டபோது லலிதா— பத்மினி இருவருடன் நாட்டியமாடும் எண்ணத்துடன்தான் இவரும் மூன்றாமவரானார். ஆனால் இவர் அவர்களுடன் இணையநினைத்த அதே நேரத்தில் தான், நடனம் மட்டுமே ஆடிக்கொண்டிருந்த அந்த திருவாங்கூர் சகோதரிகள் நடனத்தில் மட்டுமின்றி நடிப்பிலும் தாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்பதைக் காட்ட படங்களில் நடிக்கவும் துவங்கியிருந்தனர். சுமார் 100 படங்களுக்கு மேல் நடனம் ஆடிவிட்ட களைப்பு அவர்களை நடிப்புத் தொழிலில் இறங்க வைத்தது. அவர்களுடன் கூடவே ராகினியும் படவுலகில் நுழைந்தார்.

### முதலும் - முன்னேற்றமும்.

ராகினியின் முதல் படமாக எதைக் குறிப்பிடலாம்? பல படங்களில் சிறுமியாகவே சகோதரிகளுடன் ராகினி தோன்றியிருக்கிறார். ஆனாலும் நகைச்சுவையரசு கலைவாணரின் சொந்தப்படமான நல்லதம்பியில் அவர் மேனியில் தாவணி போடாமல் பூரித்துப் பொங்கி வரும் பெண்மை தெரிய சட்டையணிந்து என். எஸ். கே ஓட்டிவந்த குட்டிக் காரின் Bonet ''பேனட்''டிலேயே ஒரு காட்சியில் ''ரவுண்ட்'' அடித்தாரே, அந்தக் காட்சிதான் ராகினியைப்பற்றிய இனிய நினைவுகளை ரசிகர்கள் மனதிலே எழவைத்தது. அதற்குப்பின் சகோதரிகள் நடித்த

பல படங்களில் தானும் நடிப்பதாக பெயர்பண்ணினர் ராகினி. அவர் நடிப்பிலே ஒரு விறுவிறுப்பையும் முன்னேற்றத்தையும் காட்டியபடம் "கல்யாணம் பண்ணியும் பிரம்மச் சாரி"தான். அதில் பிரமச்சாரியின் மனைவியாக, படத்தின் நாயகியாக வந்து நகைச்சுவையையும், நடிப்பையும் அள்ளித் தந்தார் ராகினி. டி. ஆர். ராமச்சந்திரன்தான் அவருக்கு அந்தப்படத்தில்ஜோடி. அவரது நடிப்பு இவருடைய நடிப்பிற்கு மெருகாக அமைந்தது.

## மீண்டும் இருவர்.

இருவராக இருந்த லலிதா - பத்மினி, தங்கள் தங்கை ராகினியுடன் இணைந்து மூவரானர்கள். ஆனல் சில நாட்களில் அவர்களில் வயதில் முதியவரான லலிதா திருமணமாகி மலையாளம் சென்றுவிட்டகாரணத்தால் பத்மினி - ராகினி என இருவராகக் குறைந்தனர். ஆனல் லல்லி - பப்பி ஜோடிக்கு இருந்த மவுசு - இரண்டாவது ஜோடிக்கு இல்லை. படவுலகில் பத்மினியின் நிழலாகத்தான் ராகினியால் இருக்கமுடிந்தது பத்மினி தனது நடிப்பாற்றலால் இணையற்ற புகழ்பெற்று தனக்கு இணையான நடிகையே இதுவரை படவுலகில் இல்லை என்ற அளவில் பெருமையையும் தேடிக் கொண்டபின் மணம்செய்து கொண்டு சென்ற 1962-ல் படவுலகைவிட்டு விலகினர். (மீண்டும் பத்மினி திரும்பியும், அவர் பழைய பத்மினியாக இல்லை!) அதுவரை பத்மினியை ஒட்டி பல படங்களில் நடித்துக்கொண்டிருந்த ராகினிக்கு சான்சுகள் குறைந்தன. ஏன்-அவரும் பத்மினியைப்போலவே படவுலகைவிட்டு விலகியவராகவே கருதப்பட்டார் ஒரு சமயம்.

## இன்றைய நிலை.

ராகினியின் இன்றைய நிலை ஏற்றத்திற்கு உரிய ஒரு நிலைதான் ஏனென்றல்பத்மினியின் நிழலிலோ எவரின் சிபாரிசோ இல்லாமலே அவரைக் கதாநாயகி வேடத்திற்கு இரண்டு தமிழ்ப்படங்களில் ஒப்பந்தம் செய்திருக்கிருர்கள். உண்மையில் நடிப்புத் திறமையுற்ற ராகினி அப்படங்களில் தனது முழுத்திறமையையும் காட்டி ரசிகர்கள் அபிமானத்தை பெறுவர் என்பது திண்ணம். இந்தப் படத்தில் ஜெமினி கணேசனுடன் ஜோடியாக அவர்

நீங்காத நினைவு படத்தில் விஜயகுமாரியின் ஒரு தோற்றம்.




நடிக்கிறாராம். எனவே "காதல்" விஷயத்தில் ராகினி முன்னேற்றம் காண இப்படம் உதவும் என நம்பலாம்.

## இந்தியும் இவரும்

ராகினிக்கு தமிழ்படவுலக மார்க்கட் 'டல்'லாக இருந்தாலும் இந்திபட மார்க்கட்டும், மலையாள மார்க்கட்டும் இவரைக் கைவிடவில்லை. ஆம்! இவர் நடிக்கும் இந்தி படங்கள் இவரது நடிப்புதிறனால் நல்ல வெற்றிபெறுகின்றன என்பது உண்மை. மலையாளம் இவரது தாய்மொழி. எனவே அம்மொழிப்படமும் இவருக்குப் பெருமைசேர்க்காமல் இல்லை. இந்திப்படங்கள் பலவற்றில் இவர் நடித்ததால் தென்னாட்டை விட வடநாட்டிலேதான் இவர் அதிகமாக தங்கியிருக்க நேரிடுகின்றது. இப்பொழுது சில தமிழ்ப்படங்களும் இவருக்கு அழைப்புத் தந்துள்ளதால் மீண்டும் இந்தப்பக்கம் இவர் திரும்ப வாய்ப்புக்கள் உண்டு.

பொம்மையில் பொம்மையைப் போன்று நிற்பவர் பாலசந்தர்.



## இவர் பர்சனலிடி

ராகினி நல்ல உயரமானவர். சாதாரண பெண்களின் வளர்ச்சியைவிட ராகினி வளர்ச்சிமிகுந்தவரே. நிறத்தால் சிவந்தவரான ராகினி படங்களில் பார்ப்பதைவிட நேரில்காண அழகுமிக்கவர் இடையிலே பருத்தும் இப்போது நடுத்தரமாகவும் மாறிவிட்ட இவரது உடலை இவர் கவனிப்பது நல்லது. உடல் மெல்லியதாக இருந்தால் அழகு கூடும் என்ற உண்மையை இவர் மறக்கக்கூடாது. நாட்டிய மாடும்கலை இவருடனேயே பிறந்துவிட்டதால் அதுவே இவர் உடலுக்கு ஒரு "எக்சர்சைஸ்" என்று சொல்லலாம். குரலில் "கிரீச்சு" தன்மையை குறைத்து மென்(பெண்)மையை கூட்ட முயல்வாரா ராகினி?

படவுலகில் பத்துவருடங்களுக்குமேல் இருந்துவரும் ராகினியை இப்போதுதான் படாதிபதிகள் கவனிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். சகோதரிகள் இருந்தபோது தன் 'தனி"த் திறமையை காட்ட போதிய சந்தர்ப்பம் தரப்படாத ராகினி இதை நன்கு பயன்படுத்திக்கொண்டு தன் வருங்காலத்தை வளமானதாக ஆக்கிக்கொள்வார் என்பது நிச்சயம் அவருக்கு நமது வாழ்த்துக்கள்!

# சினிமா ரேஸ்!

## ஆனந்தஜோதி

பார்க்கின்ற முகத்தையே அடிக்கடி வேறு வேறு படத்தில் பார்த்தாலும் அலுப்படையாத ரசிகர்களுக்கு ஒரு நடிகரை ஒரே நடிகையுடன் இணைந்து பார்ப்பதைவிட அவரை வேறு ஒரு புது நடிகையுடன் இணைந்து பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தால் அலாதி இன்பம் பிறக்கும். அப்படியொரு வாய்ப்புதான் நமக்கு ஆனந்தஜோதிமூலம் கிடைக்கப் போகின்றது. சரோஜாதேவியையும் நடிகர் எம். ஜி. ஆரையும் அடிக்கடி பார்த்து அந்த ஜோடியின் இணைந்த நடிப்பின் கிளைமாக்ஸுகளையும் பார்த்து திகட்டிவிட்ட நிலையில் அவரை புது ஜோடியான தேவிகாவுடன் இணைந்து நடிக்க வைத்திருக்கின்றனர் இப்படத்தில். தேவிக்கு இணையான திறமை கொண்ட தேவிகா - உடலாலும், நடிப்பாலும் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு மிகவும் பொருத்தமானவர்தான். மேலும் காதல் காட்சிகளில் நடிப்பதில் அதிகமாகப் பழக்கப்பட்ட நடிகையும்கூட. எனவே இந்த புதிய இணை ரசிகர்களின் திருப்திக்கு உரியதாக, சுவைத்து ரசிக்கக்கூடியதாக அமையும் என்பது உறுதி. இந்தப்படத்தில் ராமச்சந்திரன் ஒரு உடற்பயிற்சி ஆசிரியராம். ஆசிரியத்தொழிலைப் படத்தில் ஏற்பது அவருக்குப் புதிதுதான். ஆனால் அத்துடன் தேவிகாவிற்கு காதல் படிப்பு சொல்லித் தருவது இணைவதால் இனிமை கூடிவிடும். படம் இந்த மாத வெளியீடாக இருக்கும் என நம்பப்படுகிறது. எம். ஜி. ஆரின் படங்கள் இரண்டு மாதங்களுக்கு மூன்று என்ற விகிதத்தில் வந்து கொண்டிருப்பதால் இது ஒரு அண்மை வெளியீடாக இருக்கப்போவது உறுதிதான்!

## நானும் மனிதன் தான்!

நானும் எதையாவது சொல்லுகிறேனே என்று சொல்லிவைக்க இப்படிப்பட்ட தலைப்பில் படத்தை தயாரிக்கவில்லை நடிகர் ஆனந்தன். மற்றவர்களைப் போல நானும் ஒரு நல்ல நடிகன்தான் என்பதை உணர்த்த—ஒரு உணர்ச்சி மயமான பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு நவரசங்களையும் அள்ளித் தந்து "நானும் மனிதன்தான்" என்பதை சொல்லாமல் செய்து காட்டியிருக்கிறார் இந்தப் படத்தில். படம் எடுப்பவர்கள் ஆ...ஊ... என்று எதையாவது முன்னும் பின்னும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அதுவும் அவர்கள் நடிகராக இருந்துவிட்டாலோ கேட்கவேண்டாம். ஆனால் அடக்கத்திற்கும், நட்பிற்கும் உரியவரான ஆனந்தன் மூச்சைக்கூட அதிகமாகச் செலவழிக்காமல் சேலத்தில் "டிக்கானா" போட்டுக்கொண்டுஇந்தப்படத்தை மளமளவென்று எடுத்துத் தள்ளிவிட்டார். நம்ம படம் 'மே' ரிலீஸ் ஸார்! என்கிறாரே மனிதர்? இப்படத்தின் நாயகி யார் தெரியுமா? சந்திரகாந்தாதான். கதாநாயகிக்கு




காட்டுரோஜா வில் வி. கே. ராமசாமியும்
ஜி. வரலட்சுமியும்


உரிய உடற்கட்டும்—நடிப்பாற்றலும் உள்ள காந்தாவை முதலில் நல்ல முறையில் பயன் படுத்தும் வாய்ப்பு ஆனந்தனுக்குத் தான் கிடைத்து இருக்கிறது. நாகேஷ், பாண்டி செல்வராஜ், அசோகன், கண்ணன், ஷீலாதேவி, தேவர் முதலியோர் நடிக்கும் இப்படம் விரைவில் வெளிவரும் என எதிர் பார்க்கலாம். படம் ஒரு குறுகிய காலத்தயாரிப்பு – பலருக்குப்பெயர் தேடித்தரும் தயாரிப்பும்கூட!

## யாருக்காக அழுதான்?

வேலுமணி தன்னுடைய அடுத்தபடத்தின் பெயரையும், நடிகர்களையும், டைரக்டரையும் அறிவித்த தோடன்றி படத்தையும் துவங்கி விட்டார். அதுதான் — யாருக்காக அழுதான்? இது எழுத்தாள நண்பர் ஜெயகாந்தன் ஆனந்தவிகடன் பத்திரிகையில் இதேதலைப்பில் எழுதிய கதை. ஒரு நாலைந்து பக்கக் கதையான இதைத் திரைக்கு ஏற்றபடி அமைத்து வசனம் எழுதி வெற்றி பெறவைக்கவேண்டியவேலையைஸ்ரீதர் ஏற்றுக்கொண்டுள்ளார். கதையைப் படித்திருக்கும் எவரும் இதை எப்படிப் படமாக்க முடியுமென எண்ணாமல் இருக்கமாட்டார்கள். திறமை மிகுந்த ஒரு டைரக்டரின் கரங்களில் துணிந்து வேலு மணி அதைத் தந்திருப்பதால் புதுமையை, ரசிக்கக்கூடிய நல்ல முறையில் இந்தக் கதையில் நாம் எதிர்பார்க்க வாய்ப்பு உண்டு. நடிகர்கள்? பிரபல நடிகர்கள்தான்-சிவாஜியும் சாவித்திரியும் தான். சிவாஜிகணேசன் இதுவரை ஏற்று நடிக்காத ஒரு பாகத்தில், ஓட்டல் பணியாளனாக இதில் பாகமேற்று நடித்து வருகிறார். உணர்ச்சிக் குவியலை எதிர்பார்க்கலாம் அவர் நடிப்பில். சாவித்திரி ஒரு வேசியாக நடிக்கிறார், பகுதி குறைவு தான்—ஆனாலும் உள்ளத்தைத் தொட வாய்ப்புக்கள் உண்டு—ஏராளம் ஸ்ரீதரின் குரூப் பணியாற்றும் படமான இது — விரைவில் முடிந்துவிடும். இதன் வெற்றி எழுத்தாளர் சமுதாயத்தையே பொறுத்ததாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லி வைக்கின்றோம்.



கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் எழுதிய 'எழிலி' காவிய நூலின் வெளியீட்டு விழாவில் இராஜ-அரியரத்தினம் தலைமையுரை நிகழ்த்துகின்றார்.



கந்தர்மடம் சன சமூக நிலையத்தினர் அரங்கேற்றிய "தியாகஜோதி" நாடகத்தில் நடித்தவர்களுடன், இடமிருந்து இரண்டாவதாக நிலையத் தலைவர் ப. அம்பிகாபதி அவர்களும், ஐந்தாவதாக, நட்டுவாங்கம் செய்த 'தேவன்' அவர்களும் காணப்படுகின்றனர்.

## அட்டைப்பட விளக்கம்.

சிங்களத் தாயும் தமிழ்த்தாயும் ஈழத்திலே இணைபிரியாச் சகோதரிகளாகப் பன்னெடுங்காலம் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், பாசி பிடித்த பதவி மோகம் வகுப்புவாதத்தை வளர்த்து, இருவரின் பிள்ளைகட்கிடையிலும் தீராத பகைமையை வலர்த்துவிட்டது. அன்பினாலும் பண்பினாலும் பிணைக்கப்பட்டுச் சகோதரர்களாக வாழ்ந்த சிங்களவர் - தமிழர் மீண்டும் ஐக்கியப்பட்டு, ஒருதாய் பிள்ளைகள்போல் வாழ, இரு தாயாரும் இந்தப் புத்தாண்டில் சபதம் எடுக்கின்றனர்.

# அறிவுக் கதிர் : 2.

சரியான விடைகளும் பரிசு பெற்ருேர் விபரங்களும்.

1. இலக்கியத்திற்காகச் சமீபத்தில் நோபல் பரிசு பெற்றவர்: ஜோன் ஸ்டீன்பெக்.
2, இந்திய – சீன எல்லைக் கோட்டை நிர்ணயித்த ஆங்கிலேயர்: மக்மோகன்.
3. காந்தியடிகள் இறந்த ஆண்டு : 1948.
4. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நான்கு ஆண்டுக்கு ஒரு தடவை நடைபெறுகின்றன.
5. 'திருக்குருன்' என்பது முஸ்லிம்களின் புனித மத நூல்.

முழுவதும் சரியான விடையனுப்பிய கீழ்க்கண்ட ஒருவருக்கே முதலாவது பரிசு வழங்கப்படுகின்றது.

எச். எல். ஏ. அப்துல்காதர் நூஹு.
133, கல்பொக்கை வீதி,
வெலிகாமம்.

ஒரு பிழையுடன் விடையனுப்பிய ஏழு பேருள், திருவுளச்சீட்டுப்படி, கீழ்க்கண்ட இருவர்க்கும் 2ம், 3ம் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

செல்வி கனகாம்பிகை குமாரசாமி
50, 1ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

க. நித்தியானந்தன்,
205, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

பரிசு பெறுபவர்கள், *10-5-63*க்கு முன், கீழேயுள்ள நூல்களுள் ஒன்றின் பெயரைக் குறித்து அனுப்பினுல், அந்நூல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.


1. கயமை மயக்கம் — வரதர்
2. வெள்ளிப்பாதசரம் — இலங்கையர்கோன்
3. வாழ்வு — நாவேந்தன்
4. தென்னவன் பிரமராயன் — தேவன் - யாழ்ப்பாணம்.
5. தோணி — வ. அ. இராசரத்தினம்

அறிவுக்கதிர் 3 அடுத்த இதழில் வெளியாகின்றது.

---

## சிந்தனைக்கண்ணீர்.

இத் தொடர்கதையின் ஐந்தாம் அத்தியாயம்
அடுத்த இதழில் வெளியாகின்றது.



உங்களை அழைக்கின்றோம்!

**பனாறிஸ், காஞ்சிபுரம், மணிப்புரி, சேலைகள், ஜோர்ஜற் வகைகள், கைத்தறித் துணிகள், சீத்தைகள்.**

மலிவான விலையில் கிடைக்கும்.

ஆடவர்க்கேற்ற வேட்டிகள், றெடிமேட் ஷேர்ட்டுகள் அத்தனையும் எம்மிடம் உண்டு.

அழகாக, ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் துணிகளை, ஆறுதலாகப் பார்வையிட்டு உங்களுக்குப் பிடித்தவற்றைத் தெரிவு செய்யலாம்.

# மு. தில்லையம்பலம்

2, 3, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# V. AIYADURAI

GENERAL MERCHANT
Kankesanthurai.

Dealers in:-

OILMAN GOODS, TOILET SETS, FANCY GOODS, TEXTILES, CYCLE PARTS, SUNDRIES HARDWARES, ALUMINIUM WARE, GLASS WARE, ELECTRICAL GOODS, STATIONERY PATENT MEDICINES ETC.

எங்களிடம்:-

பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள், வாசனைப் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், மின்சாரப் பொருட்கள், ஸ்ரேசனறி, இங்கிலிஷ் மருந்து வகைகள் முதலியன மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வ. ஐயாத்துரை**
**காங்கேசன்துறை.**

# இலவச தென்னிந்திய சுற்றுப்பிரயாணம்.

இத் திட்டத்தில் சேரவேண்டும் என்ற ஆவலுடன் அன்பர்கள் பலர் சந்தாப்பணத்தை அனுப்பி வைத்தனர். இம்மாத முற்பகுதியில் வவுனியாவில், பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், வாசக நேயர்களின் முன்னிலையில் சீட்டிழுப்பு நடைபெற்றது. அதிர்ஷ்டசாலியின பெயர் இது.

**செல்வி கமலா விசுவலிங்கம்**

ஹஸ்கிசன் தெரு, திருக்கோணமலை.

இவருடைய சந்தா எண் : 2049

இதில் கலந்துகொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

— நிர்வாகிகள்

---




**உங்கள் கண்ணைப் பாதுகாக்க**

★

**இலவசமான கண்பரிசோதனை**

★

**அழகு மிக்க கண்ணாடி பிரேம்கள்**

★

**அப்துல்லா அன் கோ**

**127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி 486**


செட்டிகுளம் பாலன் வெளியீட்டு நிலையத்தினரால் சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.